வணிகத்தளிர்

VANIKATHTHALIR

2013-2014

J/HOLY FAMILY CONVENT

யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

J/HOLY FAMILY CONVENT
LIBRARY
DATE:- 20.01.2014
NATIONAL SCHOOL JAFFNA.

வணிகத்தளிர்

J/HOLY FAMILY CONVENT
LIBRARY
SCHOOL JAFFNA

திருக்குடும்ப கன்னியர் மடம்

வணிக மாணவர் ஒன்றியம்

தளிர் 12

யா/திருக்குடும்ப கன்னியர் மடம்
வணிக மன்றம்

Vision
தூரநோக்கு

சர்வதேச ரீதியில் ஆளுமைத்திறன் மிக்க மாணவர்களை உருவாக்குதல்

Mission
இலட்சிய நோக்கு

வணிகத்துறை சார்ந்த அறிவினை வளர்க்கும் பரவச் செய்யும் அனுபவக் களங்களின் வழி மாணவிகளின் கல்வித்தர மேம்பாட்டினை உறுதி செய்தல்.

வணிக கீதம்

போற்று முயர்திருக்குடும்பம் எனப்புகழ்

ஆற்றும் கன்னியரின்

ஏற்றமுற மடம் ஈட்டும் வணிகமன்று

ஆக்கும் பணி வளர்க

ஆக்கும் பணி வளர்க

நேற்று வளர் தளிர் ஏற்று மலர் மணம்

சேர்த்து எழில் மிகவே

ஊற்று வரப் பயன் தூக்கி நுகர்வுற

வீற்று மகிழ்வுறுவோம்

கேற்று முயர் நெறி தேவன் கருணையால்

கீர்த்தி பெறு முறுதி

பீற்று வரப்பலம் ஊட்டி யெம் மண்ணிலே

பீடுற வாழ்வோமே.

ஈழக் கவிதை

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அதிபரின் ஆசிச் செய்தி

பாடசாலையானது மாணவர்களின் ஆளுமையையும் ஆற்றல்களையும் வெளிக்கொணர்வதுடன் அவற்றை வளர்த் தெடுக்கும் களமாகவும் விளங்குகின்றது.

எமது பாடசாலையும் பல்வேறு வழிகளில் மாணவர் களின் சிறப்பான ஆற்றல்களை மேம்படுத்தும் முகமாக இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்தி வருகின்றது. அந்தவகையில் எமது பாடசாலையின் வணிக மன்றம் தனது வெளியீடான "வணிகத் தளிர்" சஞ்சிகையின் பன்னிரண்டாவது இதழை வெளியிடுவதையிட்டு நான் பெருமகிழ்வு அடைகின்றேன்.

"வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்குகின்றது" என்பது அனுபவ உண்மை. இன்றைய நவீன உலகில் தகவல் தொழிநுட்ப வளர்ச்சியானது வணிகத்துறையிலும் பெரும் செல்வாக்கை செலுத்தியுள்ளதைக் காணலாம். இவ்வேளை இவ் இதழுக்கான சிறந்த ஆக்கங்களை கல்விமான்களிடம் பெற்றும், தமது தேடல்கள் மூலம் உருவாக்கியும் சஞ்சிகை வடிவில் தந்துள்ள வணிக மன்றத்தினருக்கும், ஆக்கங்களை வழங்கிய மாணவர்களுக்கும் இம்முயற்சிக்கு உறுதுணையாய் நின்றுழைத்த பொறுப்பாசிரியருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

தொடர்ந்தும் "வணிகத்தளிரை" ஆண்டு தோறும் தளிர்த்தோங்க வாழ்த்தி இறையாசியையும் வேண்டி நிற்கின்றேன்.

அதிபர்

வாழ்த்துச் செய்தி

யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசியப் பாடசாலையினது வணிக மன்றத்தினால் வெளியிடப்படும் வணிகத்தளிர் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யா/திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையானது யாழ் நகரில் பெண்களுக்கான கல்வியை வழங்கும் பாடசாலைகளில் ஒன்றாக சிறப்புடன் இயங்கி இன்று தேசியப் பாடசாலையாக சிறப்புடன் இயங்கிவரும் பாடசாலையாகும். வணிகத்துறையில் கற்கும் மாணவிகளது ஆக்கங்களைத் தாங்கி இச் சஞ்சிகை வெளிவருகின்றது.

12ஆவது வெளியீடாக வெளிவரும் இச்சஞ்சிகை வணிக பாடத்தினைக் கற்கும் மாணவர்களது அறிவை மேம்படுத்துவதோடு அப்பாடத்தில் மாணவர்களது ஆர்வத்தைத் தாண்டி மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு வழிவகுக்கும். இச் சஞ்சிகையை ஆக்குவதில் உழைத்த மாணவர்கள், ஆசிரியர்களிற்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வணிகத்தளிர் சஞ்சிகை தொடர்ந்தும் வெளிவந்து மாணவர்களது வணிகத் துறையிலான கல்வி மேலோங்க வழிசமைக்க வாழ்த்துகின்றேன்.

S.உதயகுமார்
வலயக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

வணிகத்தளிர் பொறுப்பாசிரியர்

யா/திருக்குடும்ப கன்னியர் மடத்தின் வணிக மன்றத்தின் வெளியீடான "வணிகத்தளிர்" சஞ்சிகையின் பன்னிரண்டாவது இதழினை முன்வைப்பில் பெருமகிழ்வடைகின்றேன்.

மாணவர் மத்தியில் இருக்கின்ற சுயதேடல், கற்றல் திறனை விருத்தி செய்வதற்கான ஓர் அரிய களமாக அமைகின்றது. அது மட்டுமன்றி ஒரு பிள்ளையிடம் பல்வேறு அறிவாற்றல்கள், வலுக்கள் மறைந்து கிடக்கின்றன. அவற்றை இனங்கண்டு அவைகளை எல்லாம் வெளிக்கொணர களம் அமைத்து கொடுக்க வேண்டும். அந்தவகையில் இத்தகைய செயற்பாடுகளில் மன்றங்களின் பங்களிப்பும் முக்கியமானது.

இத்தளிரை வெளியீடு செய்வதற்கு அயராது உழைத்த மாணவச் செல்வங்களுக்கு எனது அன்பையும் வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றேன். வணிகத்தளிர் பன்னிரண்டாவது இதழின் வெளிவருகைக்கு ஊக்கம் தந்த எமது அதிபர் அருட்சகோதரி தயாநாயகி செபமாலை அவர்களுக்கும், உப அதிபர் செல்வி. மே.பூ.பெனடிக்ற் அவர்களுக்கும் மற்றும் ஆசிச்செய்தி வழங்கிய யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் S.உதயகுமார் அவர்களுக்கும் மற்றும் வணிகக்கல்வி ஆசிரிய ஆலோசனைகளுக்கும் வணிகத்துறை சார்ந்த ஆசிரியை திருமதி.கெ.சண்முகலிங்கம், திருமதி.து.சந்திரமோகன், திருமதி.ஜெ.ஜெபநேசன், திருமதி.இ.ஜேம்ஸ் மைக்கல், திரு.மறோ மக்சோன் அவர்களுக்கும் என் மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இத் தளிரானது தொடர்ந்தும் தளிர்விட எல்லாம் வல்ல இறைவனது ஆசியை வேண்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி.பு. திருஞானசம்பந்தன்
மன்றப் பொறுப்பாசிரியர்

தலைவரின் மனத்திரையிலிருந்து ....

யா/திருக்குடும்ப கன்னியர் மட வணிக மாணவர்கள் என்ற ரீதியில் எமது வணிக மன்றமானது 12ஆவது வணிகத் தளிரை வெளியிடுகின்றது.

இந்த வணிகத்தளிரானது மாணவர்களின் ஆக்கங் களையும் ஆசிரியர்களின் ஆக்கங்களையும் உள்ளடக்கிய ஒரு சிறந்த தளிராக வெளி வந்ததையிட்டு நான் மனமகிழ்வடைகின்றேன்.

மாற்றம் ஒன்றே மாறாது என்பதற்கு அமைய வணிகத்துறையிலும் பல்வேறு புதிய சாதனைகள் வளர்ச்சிகள் என்பன எய்தப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் இத்தளிரை தளிரச் செய்ய உதவிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விதழை எம்மால் ஆன உச்ச பங்களிப்பையும் வினைத்திறனையும் இட்டு உங்கள் கைகளில் தவழச் செய்திருக்கின்றோம். இதிலுள்ள ஆக்கங்கள் வணிகத்துறை மாணவர்களுக்கு மட்டுமன்றி பெரும்பாலான மாணவர்களுக் கும் உதவும் என நம்புகின்றேன்.

பல்வேறுபட்ட கல்விச் செயற்பாடுகள் மத்தியிலும் எமக்கு ஆக்கங் களை தந்து உதவிய எமது ஆசிரியர்களுக்கும் எமது மாணவர்களுக்கும் நன்றியை கூறுவதோடு இனிவரும் காலங்களிலும் இத் தளிரை மிளிரச் செய்ய உங்கள் ஆதரவையும் ஆசியையும் வேண்டி நிற்கின்றேன்.

தலைவர்

செல்வி.சுபாசினி யோகரட்ணம்

செயலாளரின் உள்ளத்திலிருந்து .....

யா/திருக்குடும்ப கன்னியர் மடமாகிய எமது பாடசாலை பெண்களின் கல்வியில் அதிக அக்கறை காட்டி வருகின்றது. இவ்வேளையிலே எமது வணிக மாணவ மன்றத்தினால் வெளியிடப்படும் வணிகத்தளிர் 2014ஆம் ஆண்டில் தனது 12 ஆவது மலரை வெளியிடுகின்றது.

தொழில்நுட்பத்துறையின் வேகமான வளர்ச்சி இன்று உலகையே ஒரு கூரைக்குள் கொண்டு வந்துள்ளது. உலகமே வாணிப மயமாக மாறிக் கொண்டிருக்கின்றது. பொருளாதார முன்னேற்றமுள்ள நாடே முன்னேற்றப் பாதையில் பீடுநடை போட்டு எமது இலங்கைத் திருநாட்டையும் அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லும். மாணவ சமுதாயத்தின் வணிகம் சம்பந்தமான அறிவினை வளர்க்கும் நோக்கோடு எமது வணிக மன்றமானது இந்த வணிகத் தளிரை வெளியிடுகின்றது.

வணிகத்தளிர் வெளிவர எமக்கு வழிகாட்டுதலை வழங்கிய எமது அதிபர் அருட்சகோதரி தயாநாயகி செபமாலை அவர்களுக்கும் உப அதிபர் செல்வி.பூ.பெனடிக்ற் அவர்களுக்கும் நன்றிகளைக் கூறிக் கொள்கின்றோம். அத்துடன் மன்றப் பொறுப்பாசிரியர், மன்ற உறுப்பினர்கள், ஆக்கங்களைத் தந்த மாணவர்கள், துறை சார்ந்த பெரியோர்கள், விளம்பர உதவியாளர்கள் அனைவருக்கும் நன்றிகளைக் கூறிக் கொள்கின்றோம்.

வணிக மன்றமானது தொடர்ந்தும் இம்மலரினை வெளியிட்டு மாணவர்களின் வணிகம் தொடர்பான அறிவை விருத்தி செய்ய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

செயலாளர்

செல்வி. மேரி யுடெக்சி அன்ரனி

இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து ...

யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையின் வணிக மாணவ மன்றமானது தனது 12 ஆவது" வணிகத்தளிர்" என்னும் இதழை வெளியிடுகின்றது.

எமது பாடசாலையில் வணிக மன்றமானது வாணிபம் தொடர்பாகப் பல்வேறு செயற்பாடுகளை ஆற்றி வருகின்றது. இவ்வகையில் வணிகத்தளிர் என்னும் சஞ்சிகையினையும் வெளியிடுகின்றது. 2014 ஆம் ஆண்டு வணிக மன்றமானது தனது 12ஆவது வணிகத்தளிரை வெளியிடு கின்றது.

இன்று அனைத்து நாடுகளிலும் பெரும் கவனம் எடுக்கப்படும் ஒரு துறையாகப் பொருளாதாரத்துறை மிளிர்கின்றது. பொருளாதாரம் என்னும் அத்திவாரத்தைக் கொண்டே சிறந்த நாட்டினைக் கட்டியெழுப்ப முடியும். நாட்டின் எதிர்காலச் சிற்பிகளாய்த் திகழும் மாணவர்கள் மத்தியில் இப் பொருளாதாரம் பற்றிய சிந்தனையைக் கட்டியெழுப்பும் நோக்கத்தோடு எமது "வணிகத்தளிர்" என்னும் சஞ்சிகை வெளியிடப்படுகின்றது.

மாணவர்கள் தமது இடைவிடாத கற்றலின் மத்தியில் இத்தளிருக்காக ஆக்கங்களைப் படைத்துள்ளனர் அவர்களின் ஆக்கத்திறன்களுக்கு வணிகத்தளிர் சிறந்த ஒரு தளமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வணிகத்தளிருக்காக ஆக்கங்களைத் தந்து உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகளைக் கூறிக் கொள்கின்றோம்.

இதழாசிரியர்கள்
ஜெயமலர் கொண்ஸ்ரன்ரைன் லூட்ஸ்
செல்வி.ஜீனா கிறிஸ்ரினா போல்

வணிக மன்ற உறுப்பினர்கள்

தலைவர்
சுபாசினி யோகரட்ணம்

உப தலைவர்
ஜன்சிகா புனிதராஜ்

செயலாளர்
யுடெக்சி அன்ரனி

உபசெயலாளர்
ஜனனி டிலக்ஷா அசெக்ஸ் அமலரெட்ணம்

பொருளாளர்
துர்க்காயினி சீவரெட்ணம்

இதழாசிரியர்கள்
ஜீனா கிறிஸ்ரீனா போல்
ஜெயமலர் கொண்ஸ்ரன்ரைன் லூட்ஸ்

விளம்பர பொறுப்பாளர்கள்
சஜீவா குலசிங்கம்
சௌமியா சிவநேசன்

Our Principal

Rev.Sr.Thayanayagi Sebamalai.
(B.A Dip. in Edu. SLPS 2.1)

யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் வணிக மாணவர் ஒன்றியம் - 2014

இடமிருந்து வலம் (இருப்பவர்கள்) :-

அ.மேரியுடெக்சி (செயலாளர்), செல்வி.மே.பூ.பெனடிற் (உப அதிபர்), அருட்சகோதரி தயாநாயகி செபமாலை (அதிபர்), யோ.சுபாசினி (தலைவர்), திருமதி.பு.திருஞானசம்மந்தன் (பொறுப்பாசிரியர்).

இடமிருந்து வலம் (நிற்பவர்கள்) :-

அ.ஜனனி, சி.சௌமியா, சீ.துர்க்காயினி, போ.ஜீனா, கு.சஜீவா, பு.ஜன்சிகா, கொ.ஜெயமலர்.

யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் வணிக மாணவர் ஒன்றியம் - 2014

யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் வணிக மாணவர் ஒன்றியம் - 2015

உள்ளடக்கம்

- யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி தி.வேல்நம்பி அவர்களுடனான நேர்காணல் 01

வணிகக்கல்வி

- சர்வதேச தர முறைமை 11
- வணிகத்தின் வளர்ச்சி நோக்கி 14
- வணிகம் 15
- சர்வதேச வியாபாரத்தில் பயன்படுத்தும் முக்கிய ஆவணங்கள் 16
- மனிதவள முகாமைத்துவ பணிகள் 19
- அங்கீகார வணிகம் 22
- தரம் 25
- காசோலைகளும் பணநோட்டுக்களும் சமூக விரோதிகளா? 28
- வணிக முகாமைத்துவத்திற்கு அதிகாரம், பொறுப்பு, வகை கூறுதல், கையளிப்பு, வலு என்பவற்றின் பங்கு 31

கணக்கீடு

- எண்ணக்கருக்களின் கருக்கள் 37
- இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) - 16உம் பெறுமானத் தேய்வும் 40
- சம்பளப் பட்டியல் 45
- கணக்கீட்டு எண்ணக்கருக்கள் 50
- பிரசுர முடிவுக் கணக்கும் விசாலமான வருமானமும் 56
- குறுக்கெழுத்து 60
- விகிதங்கள் மூலம் நிதிக்கூற்றுக்களை பகுப்பாய்வு செய்தல் 62
- 2012 ஜனவரி மாதம் தொடக்கம் இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் பரீட்சைகளுக்கு பிரயோகிக்கப்படும் கணக்கீட்டு நியமங்கள் 67

பொருளியல்

- இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியும் கல்வியும் 73
- நுகர்வோர் விலைச்சுட்டெண் 78

- சந்தை அமைப்புக்கள் 81
- பணவீக்கம் 85
- "பசுமை நிறைந்த பொருளாதாரம் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி" 89
- பொருளாதார வளர்ச்சியும் சாத்திய உற்பத்தியும் 92
- சந்தைப் பொருளாதாரம் சமவுடமை பொருளாதாரத்திற்கு சந்தர்ப்பமா? சவாலா? 94
- பேரினப் பொருளாதார சமநிலை 99
- சந்தை முறைமை தோல்வியடைவதில் வெளிவாரி விளைவுகளின் தாக்கம் 106
- பொருளாதார அபிவிருத்தியின் கூட்டுக் குறிகாட்டிகள் 110
- அடிப்படை பொருளாதார பிரச்சினையும் அவற்றிற்குரிய தீர்வும் 113

தகவல் தொழில்நுட்பம்

- முறைமையும் தகவல் முறைமையும் 118
- நவீன உலகில் இணையம் 122

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி தி.வேல்நம்பி அவர்களுடனான நேர்காணல்

HOLY FAMILY CONVENT LIBRARY DATE: JAFFNA

பேட்டி கண்டவர்கள்
யோ.சுபாசினி
பு.ஜன்சிகா

- பேராசிரியர் வேல்நம்பி அவர்கள் 2011ம் ஆண்டு தொடக்கம் யாழ் பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவ கற்கை பீடத்தில் பீடாதிபதியாக கடமையாற்றுகின்றார்.

- இவர் 1994ஆம் ஆண்டு வணிகமானிப் பட்டத்தையும் 2000ஆம் ஆண்டு முதுதத்துவமானிப் பட்டத்தையும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

- இவர் 1996ஆம் ஆண்டு விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

- 2000ஆம் ஆண்டு AATஐ பூர்த்தி செய்த இவர் 2005ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தை சென்னைப் பல்கலைக்கழகத்திலும் 2008ஆம் ஆண்டு தமிழில் முதுகலைமானிப் பட்டத்தை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

- இவர் 2001 ஆம் ஆண்டு சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் III ஐயும் 2007ஆம் ஆண்டு சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I ஐயும் பூர்த்தி செய்து 2009ஆம் ஆண்டிலிருந்து பேராசிரியராகக் கடமையாற்றினார்.

- 2010ஆம் ஆண்டு துறைத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

01. நீங்கள் வணிகத்துறையைச் சார்ந்தவராகக் காணப்பட்டபோதும் தமிழில் ஆர்வம் உடையவராக இருப்பதற்கான காரணங்களைக் கூற முடியுமா?

- நான் தமிழில் ஆர்வம் உடையவராக காணப் பட்டதற்கான பிரதான காரணம் எனது பெரியப்பா மயில்வாகனம் ஆவார். அவர் ஒரு தமிழ்ப்பண்டிதர். அத்துடன் அவர் ஒரு பாடசாலையில் அதிபராகவும் பணிபுரிந்தார். அவரிடம் ஏழாம் வகுப்பிலேயே நன்னெறி, கம்பராமாயணம் மற்றும் இலக்கியங்களை கற்று மனனம் செய்தேன்.
- எனக்கு தமிழில் அதிகம் பற்று ஏற்படக் காரணமாக இருந்தவர் சைவப்புலவர் செல்லத்துரை ஆவர். இவர் எனக்கு 11ம் வகுப்பில் தமிழ் கற்பித்தார். சிறு வயதிலிருந்தே எனக்கு தமிழில் ஆர்வம் காணப்பட்டதனால் நான் எழுதும் கவிதை, கட்டுரை, சிறுகதை போன்றவற்றை அவரிடம் கொடுத்து திருத்துவது வழக்கம். அவர் மேலதிகமாக சேர்க்க வேண்டிய விடயங்களை கூறி என்னை ஊக்குவித்தார்.
- நான் பாடசாலையில் கல்வி கற்கும்போது தமிழ்த்தினப் போட்டிகளான கட்டுரை, பேச்சு, சிறுகதை மற்றும் பட்டிமன்றம் போன்றவற்றில் ஆர்வத்துடன் கலந்து கொள்வேன்.
- க.பொ.த உயர்தரத்தில் வணிகத்துறை பாடங்களுடன் சேர்த்து நான்காவது பாடமாகத் தமிழ்ப்பாடத்தையும் தெரிவு செய்தேன்.
- இவையே நான் தமிழில் கூடிய ஆர்வம் காட்டுவதற்கான காரணங்களாகும். பின்னர் தமிழில் முதுகலைமானிக் கற்கை நெறியைக் கற்றுத் தேறினேன்.

02. க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியெய்திய பெரும்பாலான மாணவர்கள் வணிகத் துறையைத் தெரிவுசெய்கின்றார்கள். இது தொடர்பாக தங்களது கருத்தை கூற முடியுமா?

- தனியார்துறை, அரசதுறை போன்ற இரு துறைகளிலும் வணிகத்துறையைக் கற்க மாணவர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன.
- க.பொ.த உயர்தரக் கல்விக்குப் பிறகு பல்வேறு மேற்படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பு வணிகத்துறையில் கற்ற மாணவர்களுக்கு அதிகம் காணப்படுகின்றது.
- கணிதத் துறையிலும், விஞ்ஞானத்துறையிலும் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கையைவிட வணிகத்துறையில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது.
- கலைத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டபின் வேலைவாய்ப்புக்களைப் பெறுவது மிகவும் கடினமாக இருப்பதுடன், அரசு தற்போது கலைப் பிரிவில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் முகமாகப் புதிய கற்கை நெறிகளை அறிமுகம் செய்திருக்கின்றது. இதனால் வணிகத்துறையைத் தெரிவுசெய்யும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது.

03. வணிகத்துறையில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் மேற்படிப்பை தொடர்வதற்கு ஏதேனும் வழிகள் உள்ளனவா?

- யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் முதல் தடவையிலேயே பல்கலைக்கழக அனுமதி கிடைக்க வேண்டுமென எண்ணுகின்றார்கள்.

ஆனால் அந்த எண்ணம் தவறானது. ஒரு தடவையுடன் க.பொ.த உயர்தரத்தை நிறுத்தாது 2ம், 3ம் தடவைகளும் பயில முயற்சி செய்வது புத்திசாதுரியமானது. ஏனெனில் 1ம் தடவையை விட 2ம், 3ம் தடவைகளில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை நடைமுறையில் அதிகமாக உள்ளது.

- எவ்வாறாயினும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெறாவிடின் மேற்படிப்பைத் தொடர்வதற்குப் பல வழிகள் உள்ளன.
- இவர்கள் க.பொ.த உயர்தரத்தில் 3 பாட சித்தியுடன் வெளிவாரி கற்கைநெறியினை தொடர முடியும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலேயே இந்த வாய்ப்புக்கள் உள்ளன.
- இதனைவிட BBM (Bacholer of Business Management) என்னும் 3 வருட இணைய வழியிலான வெளிவாரி கற்கை நெறியும், தமிழ்மொழி மூலமாக யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கு நிறைந்த போட்டி காணப்படுகின்றது. இதனைவிட திறந்த பல்கலைக் கழகங்களிலும், ஏனைய பல்கலைக்கழகங்களிலும் பல பட்டக் கற்கை நெறிகள் உள்ளன. உயர்தொழில்நுட்பக் கல்லூரிகளில் இணைந்து பல கற்கை நெறிகளைத் தொடர முடியும். (HNDA, IT) மேலும் பல பிறநாட்டு பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பட்டக் கற்கைநெறிகளை இங்கிருந்த வண்ணமும் அல்லது அந்த நாடுகளுக்குச் சென்றும் கற்கமுடியும். ஆண்டு தோறும் இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் பட்டக்கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு அந்த நாடுகள் புலமைப்பரிசில்களை வழங்குவதும் குறிப்பிடத்தக்கது.
- இத்தகைய மாணவர்கள் Chartered, CIMA, CMA, ACCA போன்ற தொழில் தகைமை சார் கற்கை நெறிகளையும் கற்று அதன் மூலம் நல்ல வேலைவாய்ப்புக்க ளைப் பெற்றுக் கொள்ளலாம். இக் கற்கை நெறிகளுக்கு செல்லும் மாணவர்கள் தமது ஆங்கிலக் கல்வியை வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும். பல மாணவர்கள் இக் கற்கை நெறிகளில் இணைந்து கொண்டு அதனை இடையில் கைவிட்டுவிடுவது வழக்கமாக உள்ளது. அப்படியில்லாமல் தொடர்ந்து நிறைவுவரை கற்பது அவர்களது வாழ்வை வளம்படுத்தும்.

04. வணிகத்துறையில் பொருளியல், கணக்கீட்டைத் தவிர வணிகக் கல்வியை மாணவர்கள் கற்பது கடினம் என எண்ணுகின்றனர். இந்த எண்ணத்தை மாற்றியமைக்க நீங்கள் கூறக் கூடிய ஆலோசனைகள் எவை?

- வணிகக் கல்வியிலுள்ள பாட விடயங்களை சுருக்கக் குறிப்பெடுத்து படிக்கவேண்டும்.
- எல்லோருக்கும் சமமான ஞாபகத்திறன் காணப்படாவிட்டாலும் பாடங்களை மீண் டும் மீண்டும் மீள்பார்வை செய்வதன் மூலம் மாணவர்களின் அறிவு மற்றும் ஞாபகத் திறனை வளர்த்துக்கொள்ள முடியும்.
- மூளை களைப்படையும் என உணர்ந்தால் பாடத்தை மாற்றி பொருளியலையோ, கணக்கீட்டையோ படிக்க வேண்டும்.

- அதிகாலையில் எழுந்து பாடப்பரப்பு கூடிய பாடங்களை மனப்பாடம் செய்ய வேண்டும்.
- படித்த பாடங்களுக்கு அருகிலேயே பாட விடயங்களை சிறுகுறிப்பாக எழுதி வைக்க வேண்டும்.
- படிக்க வேண்டிய பாடவிடயங்களின் எண்ணிக்கையை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும்.
- படித்த பாடங்களை கேள்வி விடையாகக் குறித்து வைப்பது சிறந்தது.
- படித்த பாடங்களை மாணவர்கள், கல்வி தவிர்ந்த ஏனைய செயற்பாடுகளில் ஈடு படும் போதும் மீண்டும் மீண்டும் நினைவு படுத்த வேண்டும்.
- விடுமுறை நாட்களை முழுமையாக கற்பதிலேயே செலவிட வேண்டும்.
- கற்கும் வேளைகளில் உரத்து வாசிப்பதன் மூலம் ஏனைய சத்தங்களில் இருந்து விடு பட்டு முழுமையான கவனத்தை பாடத்தில் செலுத்த முடியும்.
- பாடத்தின் மீது ஆர்வமும் விருப்பமும் ஏற்பட்டால் எந்தப் பாடமும் கடினமாக இருக்க முடியாது.

05. பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருக்கும் போதே தொழில்வாய்ப்புக் கிடைத்தால் தொழிலுக்கு செல்வதா அல்லது தொடர்ந்து பல்கலைக்கழக படிப்பை மேற்கொள்வதா? உங்களது கருத்து யாது?

- பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருக்கும் போதே வேலைவாய்ப்பு கிடைத் தால் மாணவர்கள் வேலையைத் தெரிவு செய்வதைவிட பல்கலைக்கழக படிப்பை தொடர்ந்து மேற்கொள்வதே சிறந்தது என்பதே எனது கருத்து. ஏனெனில் பல்கலைக் கழக படிப்பை பூர்த்திசெய்த பின்பு நிச்சயமாக தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- பல்கலைக்கழக காலங்களில் வேலை வாய்ப்பு கிடைக்கப்பெற்ற மாணவர்கள் குடும்ப பொருளாதார நிலைமை பாதகமாக காணப்படுமிடத்து மேற்படிப்பை தொடர்வதைவிட வேலைவாய்ப்பைப் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானது.

06. உங்கள் வளர்ச்சியில் உறுதுணையாக இருந்தவர்கள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

- எனது வளர்ச்சிக்கு முதல்படியாக இருந்தவர்கள் எனது பெற்றோர் அடுத்தது ஆசிரியர்கள்.
- குறிப்பாக நான் தரம் 05இல் கற்ற போது எனது ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு மிக முக்கியமான காரணமாக இருந்தவர் ஆசிரியர் சண்முகநாதன் அவர்கள். பின்னர் செல்வி காராலகுலசிங்கம் அவர்கள்.
- இவரின் வழிகாட்டலின்படி 7ம், 8ம் வகுப்புக்களில் நான் ஆங்கிலப் போட்டிகள் பல வற்றில் கலந்துகொண்டு ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர் ஆனென்.
- எனது தமிழார்வத்திற்கு மிக முக்கிய காரணமாக இருந்தவர் எனது பெரியப்பா மயில்வாகனம் அவர்கள்.
- நான் க.பொ.த உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாக தெரிவுசெய்வதற்கு காரணமாக

இருந்தவர் க.பொ.த சாதாரண தரத்தில் எனக்கு தமிழ் கற்பித்த ஆசான் சைவப் புலவர் செல்லத்துரை ஆவார். நான் இன்று தமிழில் வளர்ச்சி பெற்றதற்கு காரணமும் அவரே ஆவார்.

- இவற்றிற்கு மேலாக எனது முயற்சியும் ஆர்வமும் என்னுடைய வளர்ச்சிக்கு காரண மாகும்.

07. தற்போது வணிகத்துறையின் வளர்ச்சி பற்றி உங்களது கருத்து யாது?

- கல்வி ரீதியாகவும் உலகளாவிய ரீதியாகவும் வணிகத்துறை தற்போது முன்னேறி வருகின்றது.
- க.பொ.த.உயர்தரத்தில் காணப்படும் ஏனைய 3 துறைகளாகிய விஞ்ஞானத்துறை, கணிதத்துறை, கலைத்துறை போன்றவற்றைக் கற்கும் மாணவர்களுக்கும் முகாமைத்துவ கல்வி அவசியமாகின்றது.
- தற்போதைய நிறுவன அமைப்புக்களில் காணப்படக்கூடிய பல்வேறு துறைகளாகிய நிர்வாகத்துறை, கணக்கீட்டுத்துறை, நிதித்துறை, உற்பத்திதுறை, சந்தைப்படுத்தல் துறை, மனிதவளத்துறை போன்றவற்றிற்கு முகாமைத்துவம் அவசியமாகின்றது.

08. வணிகத்துறையில் அதிகூடிய சித்தியெய்தியும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமை யினால் எதிர்கால மாணவ மாணவிகள் வணிகத்துறையை தெரிவுசெய்வார்களா. இது தொடர்பாக உங்களது கருத்து யாது?

- முன்னொரு காலத்தில் வணிகத்துறையில் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளி அதிகமாக காணப்பட்டதால் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது.
- 2011ம் ஆண்டில் க.பொ.த உயர்தரத்தில் வணிகத் துறையில் கற்ற மாணவர்கள் பலருக்குப் பல்கலைக்கழக அனுமதிகள் வழங்கப்பட்டது. இது மாணவர்களை மீண்டும் வணிகத்துறை நோக்கித் தூண்டியது.
- க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களிலும் "A" சித்தியை காட்டிலும் பல்கலைக்கழக அனு மதிக்கு வெட்டுப்புள்ளியே மிக முக்கியமாக கவனிக்கப்படுகின்றது.
- 2012ம் ஆண்டில் வணிகத்துறையில் காணப்படுகின்ற 3 பாடங்களிலும் 6000ற்கு மேற்பட்ட மாணவர்கள் "A" சித்தியை பெற்றுக் கொண்டமையால் குறிப்பிட்ட மாணவர் தொகைக்கே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்டது. இதற்கு காரணம் 2012ம் ஆண்டு பரீட்சை வினாத்தாள்கள் இலகு வானதாக காணப்பட்டமை ஆகும்.
- இதன் விளைவாகவே 2013ம் ஆண்டில் வணிகத்துறையில் அனைத்து பாட வினாத் தாள்களும் ஓரளவு மாற்றியமைக்கப்பட்டன.
- இது தொடர்பாக மாணவர்களுக்கு ஆசிரியர்களால் சரியான வழிகாட்டல் வழங்கப் படல் வேண்டும் என்பது எனது கருத்தாகும்.
- தற்காலத்தில் வணிகத்துறை தொடர்பான வேலைவாய்ப்புக்கள் அதிகமாகக் காணப் படுவதால் எதிர்காலத்தில் வணிகத் துறையைக் கற்கும் மாணவர்களின் எண் ணிக்கை குறைவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பது என் எண்ணம்.

09. தற்போது வணிகத்துறையில் தொழில்நுட்ப கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் வணிகத்துறையில் இருக்கும் 3 பாடங்களில் எப்பாடத்தை கைவிட்டு தொழில்நுட்ப கல்வியை தெரிவுசெய்வது சிறந்தது என்பது தொடர்பாக உங்களது கருத்து யாது?

- முதலாவதாக மாணவர்கள் வணிகத்துறையில் தொழில்நுட்ப கல்வியை ஒரு பாடமாக தெரிவு செய்வதால் தொழில்நுட்பம் சார்ந்த கற்கை நெறிகளுக்கே பல்கலைக்கழக அனுமதியைப் பெறமுடியும். மாறாக முகாமைத்துவம் சார கற்கை நெறிகளுக்கு பல்கலைக் கழக அனுமதியைப் பெறுவது பற்றி ஆராய வேண்டும்.
- வணிகத்துறையில் காணப்படும் 3 பாடங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டிருப்பதால் 3 பாடங்களையும் தெரிவுசெய்து கற்பதே இலகுவானது.
- எனவே மாணவர்கள் விஞ்ஞானத்துறையிலும், கலைத்துறையிலும் தொழில் நுட்ப கல்வியை தெரிவுசெய்வதே சிறந்தது.
- கலைத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்ட பின்னும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது அரிதாக உள்ளது. எனவே இத் துறைகளுக்குச் செல்லும் மாணவர்களைக் குறைத்து தொழில்வாய்ப்பைத் தரக்கூடிய தொழில்நுட்பத் துறைகளை அரசு ஊக்குவித்து வருகின்றது. எனவே மாணவர்கள் பாடங்களையும் அதில் தமக்கிருக்கும் ஆர்வம் ஈடுபாட்டையும், அதனால் கிடைக்கும் வாய்ப்புக்களை யும் மனதிற் கொண்டு தாமே சுயமாகப் பாடங்களைத் தெரிவு செய்து கொள்ளப் பழகிக்கொள் எல் வேண்டும்.

10. க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கும், க.பொ.த உயர்தரத்தில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கும் கல்வியை தொடர்வதற்கு வேறு ஏதேனும் வழி உண்டா? என்பது தொடர்பாக உங்களது கருத்து யாது?

- க.பொ.த சாதாரண தரத்தில் 6 பாடங்கள் மட்டும் சித்தியடைந்த மாணவர்களை Certificate in Enterpreneurship என்ற கற்கை நெறிகளை திறந்த பல்கலைக்கழகத்தில் கற்க முடியும்.
- அதில் சராசரிப் புள்ளியைப் பெற்றால் பட்டப்படிப்பு கற்கை நெறிகளை (Degree courses) மேற்கொள்ள முடியும். சிறப்பாக MBA கற்கை நெறியைக் கற்க முடியும்.
- க.பொ.த உயர்தரத்தில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத 3 பாடங்களிலும் சித்தி யடைந்த மாணவர்கள் க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் "S" தரம் காணப்பட டால் Indian council for cultural Relations (ICCR) என்ற புலமைப் பரிசிலைப்பெற்று இந்தியாவில் பட்டப்படிப் பினைத் தொடர முடியும். இந்தக் கற்கை நெறிக்கு ஒவ்வொரு வருடமும் 50 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். இதனை இணையத் தளத்தின் ஊடாகப் பார்வையிட முடியும்.

  Eg:- South Africa womens university இல் புலமைப்பரிசில் கற்கை நெறி
- ஆகவே வெளிநாடுகளால் வழங்கப்படும் புலமைப்பரிசில்களைப் பயன்படுத்துவது மாணவர்களுக்கு சிறந்த வேலைவாய்ப்புக் களை பெற்றுக்கொடுக்கும்.
- க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடையாத மாணவர்கள் பட்டப்படிப்பு கற்கை நெறிகளை மேற்கொள்வதன் மூலம் முன்னேற முடியும் என்பது எனது கருத்து.

➢ க.பொ.த உயர்தரத்தில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் CBF, DBF கற்கை நெறிகளை கற்பதால் வங்கித் துறை சார்ந்த அறிவைப் பெற்றுக்கொள்ள லாம்.

11. **நீங்கள் மாணவர்களுக்கு கூறும் ஆலோசனைகள் எவை?**

➢ முதலாவதாக மாணவர்கள் கல்வியில் வளர்வதற்கு அவர்களின் நல்லொழுக்கம் இருத்தல் அவசியமானது.

➢ மாணவர்களுக்கு எல்லாவற்றிலும் சுய கட்டுப்பாடு காணப்படவேண்டும்.

➢ வாழ்க்கையில் உயர்ந்த நிலையிலுள்ள பெரியவர்கள், திறமையானவர்கள், ஆற்றல் உள்ளவர்களை தமது முன்மாதிரிகையாக கொள்ள வேண்டும்.

➢ நேர முகாமைத்துவத்தை கடைப்பிடிப்பது மிகவும் அவசியமாகக் கொள்ள வேண்டும்.

➢ மாணவர்களின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலும் உறுதுணையாக இருந்தவர் களை வாழ்க்கையில் எத்தகைய உயர் நிலையில் உள்ள போதும் மறக்கக்கூடாது.

➢ வாழ்க்கையில் மாணவர்களுக்கு அதிக வசதி வாய்ப்புக்கள் காணப்பட்ட போதிலும் அவற்றை அளவோடு பயன்படுத்த வேண்டும்.

➢ மாணவர்கள் தமது ஏழ்மையை வெற்றிகரமாக எதிர்கொண்டு கல்வியில் முன்னேறிச் செல்ல வேண்டும்.

➢ மாணவர்கள் கடின உழைப்பையும், விடா முயற்சியையும், தன்னம்பிக்கையையும், துணிவையும் கொண்டிருந்தால் அவர்களும் வாழ்க்கையில் உயர்நிலையை அடையலாம்.

வணிகக்கல்வி

சர்வதேச தர முறைமை

ட.மேரிஅனுஸ்ரிக்கா
A/L com (2014)

தரம்

தரம் என்பது உற்பத்தியில், வியா பாரத்தில், நுகர்வில் உச்ச செயல்திறனாக விஞ்ஞானத்தின், தொழில்நுட்பத்தின் அனுபவத்தின் விளைவுகளை பொழிப்பாக்கி எல்லா துறையினதும் ஒத்துழைப்புடன் சர்வதேச/வலய/ தேசிய மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் நிறுவனத்தினால் அங்கீகரிக் கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் ஒரு தொழில்நுட்ப நியமம் தரம் எனப்படும்.

எதிர்காலத்தில் உற்பத்தி செய்யப்பட வுள்ள பொருளின் நீளம், அகலம், நிறை போன்ற பண்புகளை உள்ளடக்கிய ஒரு மாதிரி தர நியமம் ஆகும். இது 02 வகைப் படும்.

- தேசிய நியமம் - SLS
- சர்வதேச நியமம் - ISO

ISO தர முறைமை

சுவிஸ்லாந்து நாட்டில் ஜெனீவா நகரத்தில் ISO தர மையம் உள்ளது. சர்வதேச தர நியமத்திற்கமைய உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு வழங்கப்படும் குறியீடு ISO தரச் சான்றிதழ் எனப்படும்.

இந் நியமங்களானவை வியாபார, நிறுவன செயற்பாட்டை வினைத்திறனாக வும், விளைதிறனாகவும் நடைமுறைப்படுத்து வதற்கு உருவாக்கப்பட்டவையாகும்.

இதனை அமுல்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள்

- நிறுவனத்தின் வெளியீட்டை அதிகரித்து இலாபத் தன்மையை உச்சப்படுத்தலாம்.
- வியாபார நிறுவனச் செயற்பாடுகளை நிலை நிறுத்திக் கொள்ளலாம்.
- போட்டிகளுக்கு இலகுவாக முகங் கொடுக்கலாம்.
- சட்டரீதியான பாதுகாப்பைப் பெற்று நன் மதிப்பை உறுதிப்படுத்தலாம்.
- சிறந்த உற்பத்தி கட்டுப்பாட்டை மேற் கொள்ளலாம்.
- நுகர்வோருக்கு தரமான பொருட்களை வழங்கலாம்.
- இடர்களை குறைத்துக் கொள்ளலாம்.

உலகளாவிய ரீதியிலே 19500ற்கு மேற்பட்ட சர்வதேச நியமங்கள் ISO அமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சில வகையான தரங்கள்

1) ISO 9000 – தர முகாமைத்துவம்
   i. ISO 9000 : 2005 – தர நிர்ணயம் தொடர்பான அடிப்படை கோட்பாடு மற்றும் எண்ணக்கருவைக் குறித் துரைத்தல்.
   ii. ISO 9001 : 2008 – தர முகாமைத்து வத்தின் தேவைப்பாடுகளை குறித்து ரைத்தல்.

iii. ISO 9004 : 2009– தர முகாமைத் துவச் செயற்பாட்டினை மேலும் சிறப் பாக, வினைத்திறனாக எவ்வாறு செயற்படுத்துவது என்பதனைக் குறித் துரைத்தல்.

iv. ISO 19011:2011 – தர முகாமைத்துவச் செயற்பாட்டின் உள்ளக மற்றும் வெளியக கணக்காய்விற்கான வழி காட்டல்களை குறித்துரைத்தல்.

2) ISO 4217:2008– நாணயத்தாள்கள் தொடர்பான கோட்பாடுகள்.

3) ISO 10002:2007 – நுகர்வோர் குறைபாடுகள் தொடர்பான முறைப் பாட்டை உள்ளடக்கிய கோட்பாடுகள்.

4) ISO 10003:2007 – வியாபார அமைப்பின் நுகர்வோர் முறைப்பாடுகள் தொடர்பான தீர்வுகளுக்கான வழி காட்டலை உள்ளடக்கல்.

5) ISO 14000 – சூழல் முகாமைத்துவம்

i. ISO 14001:2004 – சூழல் முகாமைத் துவச் செயற்பாட்டின் தேவைப் பாடுகள் தொடர்பான வழிகாட்டல் வழங்கல்.

ii. ISO 14004: 2004 – சூழல் முகாமைத்துவக் கொள்கைகள், செயல் முறைகள், வழிமுறை தொடர் பான பொதுவான வழிகாட்டல்.

iii. ISO 14064-1: 2006 – நிறுவனச் செயற்பாட்டின் ஊடாக பச்சை வீட்டு விளைவு தொடர்பான வழிகாட்டலை நிவர்த்திசெய்யும் முறை தொடர்பான வழிகாட்டல்.

6) ISO 20121 : 2012 – நிலையான நிகழ்வுகள் முகாமைத்துவம் தொடர் பான கோட்பாடு களை உள்ளடக்கும்.

7) ISO 22000 – உணவு பாதுகாப்பு முகாமைத் துவம்

i. ISO 22000:2005 – உணவு பாது காப்பு முகாமைத்துவம் தொடர்பான பொதுவான வழிகாட்டுதல்களை உள்ளடக்கல்.

ii. ISO 22004:2005 – ISO 22000 தொடர்பான பிரயோக முறையை உள்ளடக்கல்.

iii. ISO 22005:2007 – உணவுச் சங்கிலியின் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கல்.

iv. ISO 22002-1 : 2009 – உணவு உற்பத்திக் கோட்பாட்டின் குறிப்பிடத் தக்க முன் தேவைப்பாடுகளை உள்ள டக்கல்.

v. ISO 22002-3:2011 – விவசாய செயற்பாட்டின் குறிப்பிடத்தக்க சிறப் பான முற் தேவைப்பாடுகளை உள்ள டக்கல்

vi. ISO 22003:2007 – உணவு பாது காப்பு முகாமைத்துவத்தின் ஆய்வு தொடர்பான வழிகாட்டல்களை உள்ளடக்கல்

8) ISO 22301 – வணிக அமைப்பின் நிலை யான மற்றும் தெடர்ச்சியான செயற் பாட்டை உறுதிப்படுத்தும் முகாமைத்துவம்.

9) ISO 26000:2010 – சமூகப் பொறுப்பு தொடர்பான வழிகாட்டல்.

10) ISO 27001 – தகவல் பாதுகாப்பு முகாமைத் துவம்

i. ISO 27001:2013 – தகவல் பாது காப்பு முகாமைத்துவம் தொடர்பான பாதுகாப்பு தொழில்நுட்ப முறை, தேவைப்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கல்.

ii. ISO 27002:2013 – தகவல் பாது காப்பு கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பான நடைமுறை கோட்பாடு களை உள்ளடக்கல்.

iii. ISO 27003:2010 – தகவல் பாது

காப்பு முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான வழிகாட்டலை உள்ளடக்கல்.

iv. ISO 27004:2009 – தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பான அள வீடுகள் மற்றும் தொழில்நுட்ப முறையை உள்ளடக்கல்.

11) ISO 31000 – இடர் முகாமைத்துவம்

i. ISO 31010:2009 – இடர் முகாமைத்துவச் செயற்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கான தொழில் நுட்ப முறைகள்.

ii. ISO 31000:2009 – இடர் முகாமைத்துவச் கோட்பாடுகளும் வழிகாட்டல்களும்.

iii. ISO வழிகாட்டி 73:2009 – இடர் முகாமைத்துவத்தில் உள்ளடங்கலான கொள்கைகளும் செயற்பாடுகளும்.

12) ISO 50001:2011 – சக்தி செயல்திறன் முகாமைத்துவ முறைமை தொடர்பான வழிகாட்டுதலும் செயற்பாடுகளும்.

உசாத்துணை : www.ISO standard.com

- தாமரையிலைத் தண்ணீர் போல நிலையில்லாதது இளமை, செல்வம், ஆயுள்
- நேற்று செய்த தவறை உணர்ந்து கொண்டால் இன்று நீ அறிவாளி என்பதை உணர்ந்து கொள்
- ஏற்றம் என்பது இறைவன் வழங்கும் பரிசு. இறக்கம் என்பது அவன் செய்யும் சோதனை
- நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால் உன்னுடைய பலவீனங்களை தெரிந்து கொள்
- அடங்கி வாழ்ந்தால் ஆயுட்காலம் முழுவதும் ஓங்கி வாழலாம்.
- பயனற்ற காரியங்களில் பொழுதை செலவழிப்போர் பயனற்ற பிறவிகளே.

வணிகத்தின் வளர்ச்சி நோக்கி .....

அ.ஜனனி
A/L com (2014)

நம் முன்னோர் முன்னெடுத்த பெரும் முயற்சி பயனாக
வணிகத்தின் வளர்ச்சியிலே பெரும் மாற்றம் நாம் கண்டோம்
விஞ்ஞான வளர்ச்சியுடன் தொழில்நுட்பம் இணைந்து நிற்க
உற்பத்தித் துறையினிலே சாதனைகள் பல படைத்தோம்

சுய தேவைப் பூர்த்திக்காய் உற்பத்தியில் ஈடுபட்டு
சிறப்பான வாழ்வதனை நாம் எல்லாம் முன்னெடுத்தோம்
தொடர்ச்சியாக ஒரு துறையில் விருப்புடனே ஈடுபட்டு
சிறப்புத் தேர்ச்சியதை அத்துறையில் நாம் பெற்றோம்

சந்தைப்படுத்தலினை மையமாக நாம் கொண்டு
பொருட்கள் சேவைகளை மகிழ்வோடு வழங்கி நின்றோம்
உற்பத்திப் பொருளதனை அடுத்தவர்க்கு நாம் கொடுத்து
பண்டங்களை ஈடாக நாம் பெற்று வாழ்ந்திருந் தோம்

கொள்வனவும் விற்பனையும் ஒருங்கே இணைந்து நிற்க
வியாபார செயற்பாட்டை அறிமுகம் செய்து வைத்தோம்
இத்துறையில் இடம்பெற்ற குறைபாட்டை நீங்குதற்கு
பணம் பரிமாற்ற முறையதனை மகிழ்வோடு தொடங்கி வைத்தோம்

காப்புறுதி, வங்கி, களஞ்சியம் போன்ற பல
துணைச்சேவை கைகொடுக்க வளர்ச்சிகளை நாம் கண்டோம்
போக்குவரத் தோடிணைந்த தொடர்பாடல் கைகொடுக்க
வர்த்தகத்தை உயர் நிலைக்குக் கொண்டு சென்றோம்

இயந்திரத்தின் பாவனையால் மனிதவளம் குன்றினாலும்
உற்பத்தித் துறையினிலே புரட்சியினை தொடக்கி வைத்தோம்
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் வந்ததினால்
வர்த்தகத்தில் மாற்றங்கள் பலவற்றை நாம் கண்டோம்

இணையத்தை பயன்படுத்தி வர்த்தகத்தை மேற்கொண்டு
உள்ளங்கையதனில் உலகத்தை கொண்டு வந்தோம்
இலத்திரன் இயலிலே சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி
இலகுவான சேவைகளை மக்களுக்கு வழங்கி நின்றோம்

வணிகம்

செ.யஸ்றினா
A/L com (2015)

வாழ்க்கையின் வரவு செலவிற்கு
வரையறைகாட்டும் வரம்பு
வாழ்வாதாரம் வளம் பெறவே
வழிகாட்டும் சுடரொளி!

பட்டி தொட்டி முதல்
பாரிய வர்த்தக சந்தைவரை
பட்ச பாதமின்றி
பரிணமித்தே மணம் கமழும் ஓர் எடுகோள்

இன்றைய நாளின் கணக்கேடு முதல்
இலத்திரனியல் பணப்பரிமாற்றமென
வீட்டினது மட்டுமல்ல – நம் நாட்டினது
விதியையும் மாற்றி எழுதும் எழுதுகோள்

நவீன உலகில் வலம் வந்த
வணிகத்தாயே!
வறுமை என்னும் இருளை போக்கினாயே
வணிகம் என்னும் ஒளிகொண்டு

காலங்கள் கடந்தாலும்
காலநிலைகள் மாறினாலும்
கட்டிளமைப்பருவம் மாறா முதிர்ச்சியுடன்
அனைத்திலும் ஆளுமை செய்யும்
தலைமைப்பீடம்
எம் வணிகத்தாய்

சர்வதேச வியாபாரத்தில் பயன்படுத்தும் முக்கிய ஆவணங்கள்

பு. ஜன்சிகா
A/L com (2014)

01. ஏற்றுமதி அனுமதிப் பத்திரம்

பொருட்களை ஏற்றுமதி செய்யும் முன் பெற்றுக்கொள்ளும் அனுமதிப்பத்திரம் ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் ஆகும். இதை ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக் களத்தில் பெற்றுக்கொள்ளலாம். இதில் பின்வரும் விபரங்கள் இடம்பெறவேண்டும்.

- ஏற்றுமதி செய்யும் பொருட்கள்
- ஏற்றுமதி செய்யும் திகதி
- ஏற்றுமதி செய்யும் நாடு
- ஏற்றுமதியாளனின் பெயர் விபரம்

02. தோற்றுவாய்ச் சான்றிதழ்/உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்/மூலநாட்டுச் சான்றிதழ்

ஏற்றுமதிப் பொருட்கள் ஏற்றுமதி யாளன் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்தி அந்நாட்டின் வணிக கழகம் / அந்நாட்டின் உயர் அதிகாரியால் வழங்கப்படும் சான்றிதழ் தோற்றுவாய்ச் சான்றிதழ் ஆகும்.

இது இறக்குமதியாளன் தீர்வைச் சலுகைகளை பெறுவதற்கு உதவும்.

இதனை பின்வரும் அமைப்புக்கள் வழங்கு கின்றன

- இலங்கை வணிகர் கழகம்
- தேசிய வணிக கழகம்
- வர்த்தக திணைக்களம்
- புடவை கைத்தொழில் அமைச்சு

03. கப்பல் கேள்வு ஒப்பந்தம்

கப்பலை குத்தகைக்கு அமர்த்தி பொருட்களை இறக்குமதியாளனுக்கு அனுப்பலாம். இது தொடர்பாக அந்த கப்பலை காலம் குறித்து / பயணம் குறித்து ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். இது கப்பல் கேள்வு ஒப்பந்தம் ஆகும். இதில் பின்வருபவை இடம்பெறும்.

- கப்பல் கம்பனியின் பெயர், விபரம்
- ஏற்றுமதியாளன் பெயர் விபரம்
- பொருட்கள் ஏற்றப்படும், இறக்கப்படும் நாட்கள்
- பொருட்கள் ஏற்ற இறக்க தாமதம் ஏற்பட் டால் செலுத்த நேரிடும் கட்டணம்.
- கப்பல் கேள்வு கட்டணம்
- ஏனைய தேவையான விபரங்கள்

04. சுகநல சான்றுப் பத்திரம்

விவசாய உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் போது அவை பக்ரீரியா, பங்கஸ் போன்ற அழிவு ஏற்படுத்தக்கூடிய நோய் நுண்ணங்கிகள் அற்றவை என்பதை பரிசோதித்து உறுதிப்படுத்தி விவசாயத் திணைக்களத்தின் நோய்த்தடுப்புப் பகுதியால் வழங்கப்படும் சான்றிதழ் சுகநல சான்றுப் பத்திரம் ஆகும்.

சில நாடுகளுக்கு இச் சான்றிதழ் இல்லாது ஏற்றுமதி செய்யமுடியாது.

05. சௌக்கியச் சான்றிதழ்

ஏற்றுமதி செய்யப்படும் மாமிச வகைகள் (புதிய மாமிசம், குளிரூட்டப்பட்ட மாமிசங்கள், உலர்த்தப்பட்ட மாமிசங்கள்) தீங்கற்றவை, கிருமிகள் அற்றவை என உறுதிப்படுத்தி மீன்பிடி நீர்வள அபிவிருத்தி அமைச்சின் மீன்பிடி நீர்வள இயக்குநரால் வழங்கப்படும் சான்றிதழ் சௌக்கியச் சான்றிதழ் ஆகும்.'

06. நிறையளவு பற்றிய சான்றிதழ்

ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு நிறையையும் அளவையும் உறுதிப் படுத்தி இலங்கை வணிக கழகத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் நிறையளவு பற்றிய சான்றிதழ் ஆகும். இது கப்பல் கேள்வைத் தீர்மானிக்கவும் தீர்வையை தீர்மானிக்கவும் உதவும்.

07. காப்புறுதிப் பத்திரம்

ஏற்றுமதியாளன் தாம் ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு பயண வேளையில் ஏற்படும் நட்டங்களை ஈடுசெய்ய காப்புறுதி ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளலாம்.

இது தொடர்பாக காப்புறுதி நிறுவனம் வழங்கும் சான்றிதழ் காப்புறுதிப் பத்திரம் ஆகும். இதை பின்வரும் நிறுவனங்களில் மேற் கொள்ளலாம்

- Srilanka Insurance
- ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி
- யூனியன் அசூரன்ஸ்

08. தரச் சான்றிதழ்

ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தி வழங்கும் சான்றிதழ் தரச்சான்றிதழ் ஆகும்.

முன் ஏற்றுமதித் தர சான்றிதழ் பயன் படும் சந்தர்ப்பங்கள்.

1. இறக்குமதி செய்யும் நாடு முன்கூட்டியே இறக்குமதியாளரிடம் இச் சான்றிதழைக் கேட்கும் போது
2. சில குறிப்பிட்ட பொருட்களுக்கு இச் சான்றிதழ் கட்டாயம் தேவைப்படுவதனால் இதனைப் பெற வேண்டும்.

   உதாரணம்:- கடல் உணவு

   தகரத்தில் அடைக்கப்பட்டுள்ள உணவுகள்

09. பிறநாட்டுப் பிரதிநிதி சாட்சிப்பத்திரம்

ஏற்றுமதியாளனின் நாட்டிலுள்ள இறக்குமதியாளனின் நாட்டு பிரதிநிதியால் வழங்கப்படும் பத்திரம் பிறநாட்டு பிரதிநிதி சாட்சிப்பத்திரம் ஆகும்.

இதை தனியான பிரதியாகவோ பட்டியலில் உறுதிப்படுத்துவதன் மூலமோ வழங்கலாம்.

இறக்குமதியாளன் தனது நாட்டின் சுங்கப் பகுதியில் இருந்து இலகுவாக பொருட்களை அப்புறப்படுத்துவதற்கும் சுங்கப்பகுதி தீர்வையை தீர்மானிப்பதற்கும் இது உதவும்.

10. ஏற்றுமதி பதிவு பட்டியல்/ ஏற்றுமதிக் குறிப்பு

ஏற்றுமதியாளன் தான் ஏற்றுமதி செய்யும் பொருட்களின் விபரங்கள் அடங்கியதாக தயாரித்து சுங்கப்பகுதிக்கு சமர்ப்பிக்கும் அறிக்கை ஏற்றுமதி பதிவுப் பட்டியல் ஆகும். சுங்க அதிகாரிகள் இப்பட்டியலை அந்தப் பொருட்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து வரியை தீர்மானிப்பர். இதில் பின்வருபவை இடம்பெறும்.

- ஏற்றுமதியாளனின் பெயர், முகவரி

- இறக்குமதியாளனின் பெயர், முகவரி
- ஏற்றுமதிப் பொருளின் விபரம்
- ஏற்றுமதிப் பொருளின் பெறுமதி
- செலுத்தவேண்டிய தீர்வை

11. சுமைச்சீட்டு / வார்நாமம்

குறிப்பிட்ட பொருட்கள் கப்பலில் ஏற்றப்பட்டுள்ளது எனவும் அவை குறிப்பிட்ட துறைமுகம்வரை எடுத்துச்சென்று ஒப்படைக் கப்படும் எனவும் உறுதிப்படுத்தி கப்பல் கம்பனியால் ஏற்றுமதியாளனுக்கு வழங்கப் படும் ஆவணம் சுமைச்சீட்டு ஆகும்.

இதில் பின்வருபவை இடம்பெறும்.

- ஏற்றுமதியாளனின் பெயர், முகவரி
- இறக்குமதியாளனின் பெயர், முகவரி
- கப்பல் கம்பனியின் பெயர், விபரம்
- ஏற்றப்படும் பொருட்களின் விபரம்
- பொருட்கள் ஏற்றப்பட்ட துறைமுகம்
- பொருட்கள் இறக்கப்பட வேண்டிய துறைமுகம்

சுமைச்சீட்டு 2 வகைப்படும்

1. தூய சுமைச்சீட்டு
2. குற்றமுடைய சுமைச்சீட்டு

12. நட்டஈட்டுப் பத்திரம்

கப்பலில் ஏற்றப்படும் ஏற்றுமதியாளனின் சுமைகள் சேதமடைந்திருந்த போதிலும் அதற்கு தூய சுமைச்சீட்டை வழங்குமாறும் அதனால் கப்பல் கம்பனிக்கு ஏற்படும் ஏதேனும் பிரச்சினை/ நட்டம் தொடர்பாக தாம் பொறுப்பேற்பதாகவும் ஏற்றுமதியாளனால் தயாரித்து கப்பல் கம்பனிக்கு சமர்ப்பிக் கப்படுவது நட்ட ஈட்டுப் பத்திரம் ஆகும்.

13. நாணயக் கடிதம்

இறக்குமதியாளன் நாட்டு வங்கியால் ஏற்றுமதியாளன் நாட்டு வங்கிக்கு இறக்குமதியாளரால் ஏற்றுமதியாளருக்கு செலுத்த உடன்பட்ட பணத்தொகையை உறுதிப்படுத்தி வழங்கும் ஆவணம் நாணயக் கடிதம் ஆகும்.

ஏற்றுமதியாளன் பொருட்களை கப்பலில் / விமானத்தில் ஏற்றி அனுப்பி உரிய ஆவணங்களை வங்கியில் சமர்ப்பிக்கும் போது வங்கி நாணயக் கடிதத்திற்கு பணக் கொடுப்பனவு செய்யும்.

நாணயக்கடிதம் பின்வருமாறு 3 வகைப் படுத்தப்படும்.

1. மாற்றத்தக்க நாணயக் கடிதம்
2. மாற்றத்தகாத நாணயக் கடிதம்
3. உத்தரவாதம் செய்யப்பட்ட நாணயக் கடிதம்

மாற்றத்தக்க நாணயக் கடிதம்/நீக்கக்கூடிய நாணய கடிதம்

ஏற்றுமதியாளருக்கு பணம் செலுத்தப் படும் சந்தர்ப்பம்வரை இறக்குமதியாளன் அந்த நாணயக் கடிதத்தை நீக்கிவிட உரித்து இருந்தால் அது மாற்றத்தகு நாணயக்கடிதம் ஆகும். இது ஏற்றுமதியாளனுக்கு பாதுகாப் பானது அல்ல. இதனால் இது நடைமுறையில் அரிதாகவே உள்ளது.

மாற்றத்தகாத / நீக்கத்தகாத நாணயகடிதம்

நாணயக் கடிதத்துடன் தொடர்புபடும் கட்சியினரின் (இறக்குமதியாளன், அவரது வங்கி, ஏற்றுமதியாளன், அவரது வங்கி) அனுமதிகள் இன்றி அதில் மாற்றம் செய்யவோ/ நீக்கிவிடவோ முடியாவிடின் அதனை மாற்றத்தகாத நாணயக் கடிதம் என்பர். இது பாதுகாப்பானது என்பதனால் மிகவும் முக்கியமானதாக காணப்படுகின்றது.

உத்தரவாதம் செய்யப்பட்ட நாணயக் கடிதம்

வங்கி ஒன்றினால் நாணயக்கடிதம் உறுதிசெய்யப்பட்டிருப்பின் அது உத்தரவாதம் செய்யப்பட்ட நாணயக் கடிதம் ஆகம்.

உசாத்துணை : ஆசிரியர் கைநூல்,
அறிவுத்தேடல்

மனிதவள முகாமைத்துவ பணிகள்

எ.மரீனா ஷாமினி
A/L com (2014)

மனிதவள முகாமைத்துவத்தின் நோக்கம், குறிக்கோள், நோக்கு என்பவற்றை அடைவதற்கு நிறைவேற்ற வேண்டிய கருமங்கள் பல உள்ளன.

1. தொழில் உருவாக்கம்
2. தொழில்ப் பகுப்பாய்வு
3. மனிதவளத் திட்டமிடல்
4. ஆட்சேர்ப்பு
5. தெரிவு செய்தல்
6. இணைத்துக் கொள்ளல்
7. தொழில் அறிமுகம்
8. செயற்பாட்டு மதிப்பீடு
9. கொடுப்பனவு முகாமைத்துவம்
10. பயிற்சியும் அபிவிருத்தியும்
11. ஊழியர் மாற்றம்
12. நலன்புரி நிர்வாகம்
13. சுகநல பாதுகாப்பு
14. ஒழுக்க நிர்வாகம்
15. கஷ்டநஷ்டங்களை நீக்குதல்
16. ஊழியர் தொடர்பு

இவ்வாறான கருமங்களில் ஒன்றான ஆட்சேர்ப்பும் தெரிதலையுமே இக்கட்டுரை ஆராய்கின்றது.

ஆட்சேர்ப்பும் தெரிதலும்

- நிறுவனங்கள் தமது வேலைக்கு தகுதியானவர்களை தேடிக்கொள்ளும் நடவடிக்கை ஆட்சேர்ப்பு எனப்படும்
- புதிய நிறுவனம் ஒன்றை தொடங்கும் போது, நிறுவனத்தை விரிவாக்கும் போது, ஊழியர்கள் வேலையைவிட்டு விலகிச் செல்லும் போது நிறுவனம் ஒன்றிற்கு ஆட்சேர்ப்பு தேவைப்படும்.
- ஆட்சேர்ப்புடன் தொடர்புடைய சில கருமங்கள் வணிகத்திற்கு உள்ளன.

1. வேலைக்கான வெற்றிடங்களை இனங்காணல்
2. வேலைப்பகுப்பாய்வை ஆராய்தல் (வேலை விபரம், வேலை நியமம்)
3. ஆட்சேர்ப்பை பாதிக்கும் காரணிகளை இனங்காணல் (நிறுவனக் கொள்கை, கிரயம், காலம்)
4. வேலை விண்ணப்பத்தைத் தயாரித்தல்
5. ஆட்சேர்ப்பு முறையைத் தெரிதல் (உள்வாரி, வெளிவாரி)
6. வெற்றிடத்தை விளம்பரப்படுத்தி விண்ணப்பம் கோரல்
7. விண்ணப்பங்களை மதிப்பிடல்
8. ஆட்சேர்ப்பு இடம்பெறல்

இங்கு கூறப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு முறையானது 2 வழிகளில் இடம்பெறும்.

01. உள்வாரியான ஆட்சேர்ப்பு

நிறுவனத்திற்கு உள்ளேயிருந்து ஆட்சேர்த்தல் நடவடிக்கையை இது குறிக்கும்.

இதற்கான ஆட்சேர்ப்பு வழிகள்/மூலங்கள்

1. தொழிலில் அமர்த்தல்
2. திறன் அட்டவணை
3. அகத்தேயுள்ள ஊழியரை அறிமுகப் படுத்தல்
4. பதிலாள் திட்டம்
5. பதவியுயர்வு திட்டம்
6. மரபுரிமை

இவ்வாறு நிறுவனத்தின் உள்ளே யுள்ள ஊழியர்களை ஆட்சேர்ப்பதன் மூலம் சிறந்த ஊழியர்த் தொடர்பு, தொழில் இரகசியங்கள் பாதுகாக்கப்படல், ஆட்சேர்ப்பு கிரயம் குறைக்கப்படல் போன்ற அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

02) வெளிவாரியான ஆட்சேர்ப்பு

நிறுவனத்திற்கு வெளியிலிருந்து ஊழியர்களை பெற்றுக்கொள்ள எடுக்கப்படும் நடவடிக்கைகளை இது குறிக்கும்.

இதற்கான ஆட்சேர்ப்பு மூலங்கள்/வழிகள்

1. ஊடக விளம்பரம்
2. கடந்தகால ஊழியர் மூலம்
3. தொழிற்சங்கம்
4. இணைய வலையமைப்பு
5. கல்வி தொழில்சார் நிறுவனம்
6. தொழில் முகவர் நிலையம்

நிறுவனத்திற்கு வெளியே இருந்து ஆட்சேர்ப்பை மேற்கொள்வதன் மூலம் புதிய அறிவு, திறன், தொழில்நுட்பங்கள் நிறுவனத்தை வந்து சேரல், பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்தல் போன்றவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

தெரிவுசெய்தல்

இவ்வாறு ஆட்சேர்ப்பு செய்முறையின் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து தொழிலுக்கு மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரியை இனங்காணும் கருமமே தெரிவு செய்தல் ஆகும்.

ஆட்களை தெரிவுசெய்வதற்கு நிறுவனங்களால் பின்வரும் முறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. விண்ணப்பத்தை மதிப்பிடல்/வாழ்வியல் தரவை மதிப்பிடல்
2. பரீட்சை
3. நேர்முகப் பரீட்சை
4. பின்னணி ஆய்வு
5. மருத்துவப் பரிசோதனை

01) வாழ்வியல் தரவுகள் (CV)

பெரும்பாலான வேலை கொள்வோர் விண்ணப்பம் கோரும்போது வாழ்வியல் தரவுகளை (சுயவிபரக்கோவை) விண்ணப்பத்துடன் கோருவார்கள். இதில் விண்ணப்பதாரியின் பெயர், விலாசம், பால், கல்வித் தகைமை, தொழில் தகைமை, அனுபவம் போன்ற விபரங்கள் உள்ளடங்கியிருக்கும்.

02) பரீட்சை

மதிப்பீட்டு நுட்பங்களில் பரீட்சையும் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது. பல பரீட்சார்த்திகளில் இருந்து திறமையான ஒரு சிலரை தோந்தெடுப்பதற்கான ஒரு சிக்கனத் தன்மை வாய்ந்த நுட்பமாகும்.

தெரிவுக்கு பயன்படும் பரீட்சை முறைகள்

1. புத்திக்கூர்மைப் பரீட்சை (IQ Test)
   விண்ணப்பதாரியின் நுண்ணறிவை மதிப்பிடல்
2. தகைமைப் பரீட்சை (Proficiency Test)
   பரீட்சார்த்தியிடம் விவேகம், மொழித் திறன், பொது அறிவு ஆகிய மூன்றும் ஒரே தடவையில் பரீட்சிக்கப்படும்

3. ஆளுமைப் பரீட்சை (Personality Test)
இதன்மூலம் பரீட்சார்த்தியின் மன உறுதி, ஆளுமை பண்புகள் மதிப்பிடப்படும்

4. செய்முறை பரீட்சை (Practical Test)
வேலை தொடர்பான அறிவை அளவிடும் பரீட்சை

3) நேர்முகப்பரீட்சை

விண்ணப்பதாரி வேலைக்கு பொருத்த மானவரா என்பதை அவரது தோற்றம், தொடர்பாடல் திறன், சமூக இசைவாக்கம், பழக்கவழக்கம் என்பவற்றை வைத்து தீர்மானித்தல்.

4) பின்னணி ஆய்வு

இதன்மூலம் விண்ணப்பதாரியினுடைய குடும்ப பின்னணி, கல்விப் பின்னணி, நிதிப் பின்னணி போன்றவை மதிப்பிடப் படும்

5) மருத்துவப் பரிசோதனை

விண்ணப்பதாரியின் உடல்நிலை தொழிலுக்கு பொருத்தமானதா என்பது இப்பரிசோதனை மூலம் கண்டறியப்படும்.

இவ்வாறு பல விண்ணப்பதாரிகளில் இருந்து பொருத்தமான விண்ணப்பதாரியை தெரிவு செய்யும் முறையை பின்வரும் பாச்சற்கோட்டுபடம் மூலமும் காட்டலாம்.

1. பணக்கொள்கை
12. திகதி
13. நோக்கம்
14. நுகர்வோர் தினம்
15. ஐந்தொகை
16. அமைப்பு
17. திட்டம்

மேலிருந்து கீழ்

அங்கீகார வணிகம்
Franchises

சி.சௌமியா
A/L com (2014)

குறித்த பொருளை அல்லது சேவையை வழங்கும் ஒரு வணிக நிறுவனம் அப்பொருளை அல்லது சேவையைக் குறித்த ஒரு சந்தையில் விற்பனை செய்வதற்கு மற்றொரு வணிக நிறுவனத்திற்குச் சந்தர்ப்பம் அளிப்பதற்காகப் பயன்படுத்தும் வணிக அமைப்பு முறைமை "அங்கீகார வணிகம்" ஆகும்.

- அங்கீகார வணிகமொன்றை ஆரம்பிக்கும் போது கட்டாயமாக அங்கீகாரமளிப்பவருக்கும் அங்கீகாரம் பெறுபவருக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்படும். இவ் ஒப்பந்தம் "அங்கீகார ஒப்பந்தம்" எனப்படும்.

ஒப்பந்தத்தின் படி,

- அங்கீகாரமளிப்பவருடைய வணிகப் பெயர்
- வியாபாரப் பெயர்
- வியாபாரக்குறி

என்பவற்றை அங்கீகாரம் பெற்றவர் பயன்படுத்த அனுமதியளிக்கப்படுகின்றது.

வணிகத்தை நடாத்திச் செல்வதற்குரிய

- சட்டதிட்டங்கள்
- விதிகள்
- அளிக்கப்படும் சேவைகள்
- நிதியளிப்புக்கள்

போன்ற நிபந்தனைகள் யாவும் அந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படும்.

அங்கீகார வணிகம் (வகைகள்)

- உற்பத்திப் பொருள் அங்கீகார வணிகம் (Product Franchises)
- உற்பத்தி அங்கீகார வணிகம் (Manufacturing Franchises)
- வணிக முறைக்கான அங்கீகார வணிகம் (Business Format Franchises)

அங்கீகாரம் பெற்றவரால் செலுத்தப் படவேண்டிய கொடுப்பனவுகளும், கட்டணங் களும் மாதாந்தம் செலுத்த வேண்டிய இறை யும் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

உற்பத்திப்பொருள் அங்கீகார வணிகம்

அங்கீகாரமளிப்பவரிடம் இருந்து அவருடைய வியாபாரக் குறியுடன் பொருட் களை கொள்வனவு செய்யும் அங்கீகாரம் பெற்றவர் மீள் விற்பனை செய்வதற்கான உரிமையளிக்கும் அங்கீகார வணிகம் "உற்பத்தி பொருள் அங்கீகார வணிகம்" ஆகும்.

Eg:- பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் போன்ற உற்பத்திகளை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள்.

உற்பத்தி அங்கீகார வணிகம்

அங்கீகாரமளிப்பவருடைய வியாபாரக் குறியுடன் பொருட்களை உற்பத்தி செய்து தானே விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் பெற்றவருக்கு அனுமதிவழங்கும் அங்கீகார வணிகம் "உற்பத்தி அங்கீகார வணிகம்" ஆகும்.

Eg:- கொக்ககோலா, பெப்சிகோலா போன்ற குளிர்பானப் போத்தல் களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிறுவனங்கள்.

வணிக முறைக்கான அங்கீகார வணிகம்

அங்கீகாரம் அளித்தவருடைய பெயரிலும் அவருடைய முறையிலும் வணி கத்தை நடத்துவதற்கு அங்கீகாரம் பெற்ற வருக்கு அதிகாரம் அளிக்கும் அங்கீகார வணிகம். "வணிக முறைக்கான அங்கீகார வணிகம்" ஆகும்.

Eg:- உற்பத்தி செய்யப்பட்ட உணவுகளை வழங்கும் Pizza HUT, KFC போன்ற வியாபார நிறுவனங்கள்.

அங்கீகார வணிக முறையின் அனுகூலங்கள்

- அங்கீகாரம் அளிப்பவர் முதலிடாம லேயே வணிகத்தை விரிவாக்க முடியும்
- அங்கீகாரம் பெற்றவர் பெருந்தொகை இலாபம் பெற வாய்ப்பு ஏற்படுகிறது.
- வணிகத்தின் பூரணமான இயலுமையை விரைவாக அடைய முடியும்.
- அங்கீகாரம் பெற்றவருடைய முயற்சிக்கு உயர்ந்த அங்கீகாரம் கிடைக்கும்.
- அங்கீகாரம் பெற்றவர் வணிகச் செயற் பாடுகளினால் மனப்பூரிப்படைய முடியும்.
- சில வேளைகளில் அங்கீகாரம் அளிப்ப வர் அங்கீகாரம் பெற்றவருக்கு நிதியுதவி களை மேற்கொள்ளலாம்.
- அங்கீகாரம் அளிப்பவருடைய முகா மைத்துவப் பயிற்சி உதவிகளை அங்கீ காரம் பெற்றவர் பெற்றுக்கொள்ளமுடியும்.

அங்கீகார வணிகத்தின் பிரதிகூலம்

- அங்கீகாரம் அளிப்பவருடைய கட்டுப் பாடு ஏற்படுவதால் அங்கீகாரம் அளிப்ப வருக்குப் பூரணமான கட்டுப்பாடு அதி காரம் இல்லை.
- அங்கீகார வணிக உரிமையைப் பெறுவ தற்கு அதிக செலவு ஏற்படும்.
- அங்கீகார வணிக செயற்பாடுகள் தொடர்பில் அங்கீகாரமளிப்பவருடைய வரையறைகளும் நிபந்தனைகளும் காணப்படுவதால் வணிக கருமங்களில் பூரண சுதந்திரத்துடன் செயல்பட முடியாது.
- முதலீடு தொடர்பில் அதிக நட்ட அச்சமும் காணப்படலாம்.
- இலாபம் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை காணப்படலாம்.

அங்கீகாரம் அளித்தவருக்கான நலன்கள்

For The Franchisor

1. அவருடைய வணிகம் விரிவடையும்
2. விளம்பரச் செலவுகளை அங்கீகாரம் பெற்றவருடன் பகிர்ந்து கொள்ளப் படலாம்.
3. அங்கீகாரம் பெற்றவர் முதலிட இவரும் இலாபமடைவர்
4. விளம்பரத்தைக் குறிப்பிட்ட பிரதேசத்திற்கு மட்டுப்படுத்த முடிவதால் கிரயம் குறையும்.
5. அங்கீகாரம் பெற்றவர் ஊக்கமடையும் போது இவருக்கும் தானாகவே இலாபம் அதிகரிக்கும்.
6. அங்கீகாரம் பெற்றவரிடமிருந்து இறையும் அங்கீகாரம் பெற்றவரின் இலாபம் அதிகரிக்கும் போது அதிகரித்த நலனையும் பெறுவார்.

அங்கீகாரம் பெற்றவருக்கான நலன்கள்

For The Franchisee

1. ஆரம்பத்திலேயே பெரிய வியாபாரத்தில் பிரவேசிப்பார்
2. ஆரம்பத்திலிருந்து வணிகத்தை வளர்த்து வரவேண்டிய அவசியமில்லை
3. தோல்வியடையக்கூடிய சந்தர்ப்பம் மிகக் குறைவாகும்.
4. நல்ல நன்மதிப்புள்ள பிரசித்தி பெற்ற வியாபாரப் பெயருடைய பொருட்களை விற்பனை செய்வதால் விளம்பரம் குறைவு.
5. தேவையான பயிற்சியினை அங்கீகாரம் அளிப்பவர் வழங்குவார்.
6. விசேடத்துவ ஆலோசனைகளை அங்கீகாரம் அளிப்பவர் வழங்குவார்.
7. மூலப்பொருட்களைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.
8. அங்கீகாரம் அளிப்பவர் கடன் உதவிகளையும் அளிக்கலாம்.
9. வேறு மூலகங்களிலிருந்து நிதி பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் அதிகமாகும்
10. வணிகத்தின் உரிமையாளர் அவரேயாகும் உழைக்கும் இலாபம் அவருக்கே உரித்தாகும்.

உசாத்துணை : ஆசிரியர் கைநூல்

கீர்த்தி என்பது சம்பாதிக்க வேண்டிய ஒன்று கௌரவம் என்பது இழக்கக்கூடாத ஒன்று.

பொய்யால் கவரப்பட்டவன் மனம் நல்ல விசயங்களில் சுவை காணாது

தரம் (Quality)

ச.சுகன்ஜா
A/L com (2014)

தரம் பற்றிய வரைவிலக்கணம்

நுகர்வோரின் தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவு செய்வதற்கு பொருள் ஒன்றில் அல்லது சேவை ஒன்றில் காணப்படுகின்ற இயலுமை அல்லது ஆற்றல் தரம் எனப்படும்.

தரம் பல பிரிவுகளின் சேர்க்கையினால் ஆனது இது பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்.

- சிறந்த செயற்பாடு
- நீண்டகாலம் நிலைத்திருத்தல்
- நம்பிக்கைத்தன்மை கொண்டிருத்தல்
- நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல்
- உரிய கருமத்திற்கு பொருத்தமானதாயிருத்தல்

தரக்கட்டுப்பாடு (Quality Control)

குறித்த தரம் நியமங்களுக்கு அமைய உற்பத்தியை பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் அனைத்துக் கருமங்களும் தரக்கட்டுப்பாடு ஆகும். தற்காலத்தில் நிறுவனங்களின் கடும் போட்டி, வாடிக்கையாளரின் தரத்திற்கான அதிகமான எதிர்பார்க்கை, நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான கடுமையான சட்டங்கள், உலகமயாக்கல், நுகர்வோரின் கல்வி அறிவு, வளர்ச்சி போன்ற காரணங்களினால் நிறுவனங்கள் உற்பத்திகளின் மீது அதிக தரத்தினை பேணுவதற்கு முக்கியத்துவத்தை அளித்து வருகின்றன.

நிறுவனங்களில் பின்பற்றப்படும் பொதுவான தரக்கட்டுப்பாட்டு முறைகள்

1. தர வட்டம் (Quality Circle)
2. முழுத்தர முகாமைத்துவம் (Total Quality Management)
3. குறித்த நேர தந்திரோபாயம் (Just-In-Time)
4. கெய்சன்முறை (The Kaizen System)
5. கென்பான் முறை (The kanban system)
6. 5S முகாமைத்துவ நுட்பம் (Short, set, shine, Standardise, and sustain)
7. நேர அடிப்படையிலான முகாமைத்துவம் (Time Based Management)
8. அதிகார அளிப்பு (Empowerment)
9. குழுவேலை (Team working)
10. ஆறு சிக்மா (Six sigma)
11. ஸ்மெட் (Single minute exchange of Dies)

1) தரவட்டம் (Quality Circle)

இங்கு ஊழியர்களை ஊக்குவிக்கும் முகமாக ஒரே தொழிலில் ஈடுபடும் ஊழியர்கள் குறித்த கால இடைவெளியில் சந்தித்து, உற்பத்தியின் போது தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் மேற்கொள்வதன் மூலம் தரத்தினை பேணுகின்ற ஓர் முறை இதுவாகும்.

2) முழுத்தர முகாமைத்துவம்
(Total Quality Management)

இங்கு அனைத்து நிறுவன செயற்பாடுகளிலும், ஊழியர்களது ஒத்துழைப்பினையும் பெற்று தரக்கட்டுப்பாட்டினை மேற்

கொள்ளும் முறை இதுவாகும். இம்மட்டத்தில் செயற்படும் அனைத்து ஊழியர்களும் தமது பணிகளை சரியாக மேற்கொள்வதன் மூலம் பொருளில் தரத்தைப் பேணலாம். இது செலவுகூடிய மற்றும் வினைத்திறன் வாய்ந்த கட்டுப்பாட்டு முறை ஆகும்.

3) குறித்த நேர தந்திரோபாயம் (Just In Time)

நுகர்வோரின் கட்டளைகளைப் பெற்ற பின் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் தந்திரோபாயம் ஆகும். இங்கு உற்பத்திக்கான உள்ளீடுகளை சரியான நேரத்தில், சரியான இடத்தில், சரியான அளவில் பயன் படுத்துவதன் மூலம் தரத்தினை பேணும் நடவடிக்கை இதுவாகும். இம் முறையில் இருப்பு வைத்தல், களஞ்சிய இடவசதி, இருப்புக்கள் மீதான நிதிமுடக்கம், இருப்பு பழமையடைதல் போன்றவற்றை தவிர்க்கலாம்.

4) கெய்சன் முறை (The kaizen system)

நிறுவனத்தின் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக அபிவிருத்தியினை பேணுவதன் மூலம் தரத்தினை அதிகரிக்கும் நுட்பம் இதுவாகும். இதன்படி குறித்த ஓர் தினத்தில் நிறுவனத்தில் ஏதாவது ஓர் நடவடிக்கையில் அபிவிருத்தியை ஏற்படுத்தாமல் அந்நாளில் பணிகளை நிறைவு செய்தல் கூடாது. இம் முறையை நடைமுறைப்படுத்துவதில் கெய்சன் குடை எண்ணக்கரு பயன்படுத்தப்படுகின்றது. தொடர்ச்சியான அபிவிருத்திக்கான கெய்சன் குடை எண்ணக் கருக்களில் சிலவற்றை குறிப்பிடலாம்.

உதாரணம் : கெய்சன் குடை

- வாழ்க்கையாளர் சார்ந்த தன்மை
- முழுத்தர முகாமை
- தரவட்டம்
- யோசனைத் திட்டம்
- தன்னியக்க ரோபோக்கள்

5) கென்பான் முறை (The kanban System)

தேவையான வளங்களை, தேவையான இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு ஊழியர்களுக்கான சமிக்ஞையை அல்லது தகவல்களை வழங்கும் ஓர் அட்டை கென்பான் ஆகும். JIT முறையில் உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முக்கிய பங்கினை வகிக்கின்ற ஓர் நுட்பமாக பயன் படுகின்றது. இந்த நுட்பமுறையின் மூலம்

1. ஊழியர்களுக்கு உற்பத்தியின் முந்திய கட்டத்தினை அறிவித்தல்
2. உற்பத்தியை ஆரம்பிக்க ஊழியர்களுக்கு தகவல் வழங்கல்.
3. குறித்த இடத்தில் பாகங்களை விநியோகிப்பதற்கு வெளிவழங்குநர்களுக்கு தகவலை வழங்கல் போன்ற செயற்பாடுகள் இடம் பெறுகின்றது.

6) நேர அடிப்படையிலான முகாமைத்துவம் (Time Based Management)

குறித்த இலக்குகளை அல்லது பணிகளை நிறைவுசெய்வதற்காக நேரத்தினை வரையறுத்து குறித்த நேரத்தில் பணிகளை நிறைவு செய்வதன் மூலம் நேர விரயத்தினை நீக்குவதற்கான முறை ஆகும்.

நேர அடிப்படை முகாமைத்துவத்தின் நன்மைகள்

1. வாடிக்கையாளர்கள் உச்ச அளவில் பயனடைவர்
2. வளங்கள் வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் பயன்படுத்தப்படும்.
3. உற்பத்தியின் தரம் அதிகரிக்கும்.
4. குறித்த காலத்தில் பொருட்களின் அபிவிருத்தி, பொருட்களை அறிமுகம் செய்தல் போன்றன மேற்கொள்ளப்படும்

7) ஜப்பானியன் 5S முகாமைத்துவ நுட்பம் (5s Management)

ஊழியர்களின் மன உழைச்சலையும், வேலைப்பளுவையும் பெருமளவில் குறைப்பதற்காகவும் தரத்தில் உற்பத்தித் திறன், வினைத்திறன், விளைதிறன் என்பவற்றை அதிகரிப்பதற்கு அறிமுகப்படுத்தப்பட ஓர் முகாமை நுட்பம் இதுவாகும்.

ஜப்பானிய 5S முகாமை நுட்பத்தில் 5Sகளும் பின்வருமாறு விளக்கம் அளிக்கப் படுகின்றன.

ஜப்பானிய மொழி	ஆங்கிலம்	விளக்கம்
1. செய்ரி (Seiri)	Short	தேவையற்ற கழிவு களை அகற்றுதல்
2. செய்தோன் (Seition)	Set	தேவையானதை தேவையான இடத்தில் வைத்தல்
3. செய்சோ (Saiso)	Shine	நன்றாக தூய்மை செய்தல் அல்லது சுத்தம் செய்தல்
4. செய்கெட்சு (Seiketsa)	Standed	தரப்படுத்தல்
5. சிக்சுகே (Shiksuka)	Sustain	பயிற்சியும் கட்டுப்பாடும்

8) அதிகார அளிப்பு (Empowerment)

ஊழியர்கள் நிறுவன செயற்பாடுகளில் தீர்மானத்தை மேற்கொள்வதற்காக அதிகாரத்தினை கீழ்மட்ட ஊழியர்களுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் வாடிக்கையாளருடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அவர்களின் தேவைக்கு ஏற்ப கட்டளைகளில் மாற்றத்தை ஏற்படுத்த அதிகார அளிப்பு நுட்பம் உதவியாக அமைகின்றது.

9) குழுவேலை (Team working)

நிறுவனத்தின் ஊழியர்படையை சிறு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவும் உற்பத்தி செயற்பாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் அதிக கவனத்தினை செலுத்தி உற்பத்தியை மேற்கொள்ளும் முறை இதுவாகும். இங்கு ஊழியர்களுக்கும், முகாமைக்கும் இடையில் சிறந்த தொடர்பு காணப்படும்.

10) ஆறு சிக்மா (Six Sigma)

ஓர் செயன்முறையில் காணப்படும் குறைபாடுகளை நீக்குவதன் மூலம் தரத்தினை பேணுவதற்கான ஓர் புள்ளி விபரவியல் அடிப்படை முறையாக இது காணப்படுகின்றது. நிறுவனங்களில் குறித்த செயன்முறையில் காணப்படும் குறைபாடுகளை இரண்டு சிக்மா அணுகு முறையில் தீர்க்க முடியும் அவையாவன.

1. DMAIC முறை:- நடைமுறையில் பல குறைபாடுகளைக் கொண்ட செயன்முறைகளை விருத்தி செய்வதற்கு பொருத்தமான முறையாகும்.

   இங்கு வரையறுத்தல், அளவிடல், ஆய்வு, விருத்தி, கட்டுப்படுத்தல் என்பன இடம் பெறும்.

2. DMADV முறை:- புதிதாக உருவாக்கும் செயன்முறைக்கு மிகவும் பொருத்தமானதாகும். இங்கு வரையறுத்தல், அளவிடல், ஆய்வு, வடிவமைத்தல், உறுதிசெய்தல் என்பன இடம் பெறும்.

11. MED முறை

இது நேரத்தினை குறைப்பதன் மூலமும் வெளியீடுகளின் தரவீழ்ச்சியினை குறைப்பதன் மூலமும் உற்பத்திகளை ஒழுங்கமைப்பதற்காகவும், தரத்தினை பேணிக் கொள்ளவும் உருவாக்கப்பட்ட முறை ஆகும். இம்முறை பின்வரும் ஒழுங்குமுறையில் நடை முறைப்படுத்தப் படுகின்றது.

1. கைகளினால் மேற்கொள்ளும் செயற்பாடுகளை இயந்திரப்படுத்தல்.
2. பொறுப்பையும், இணைப்பையும் இலகுவாக்கல்.
3. கூட்டாக வேலைசெய்தல்.
4. பரிசோதனை மற்றும் திருத்தத்தை கீழ் மட்டத்தில் பேணல்.

காசோலைகளும் பணநோட்டுக்களும் சமூக விரோதிகளா?

ம.மக்சினா
A/L com (2014)

பல்வேறு பரிணாம வளர்ச்சிகளில் உருமாறி தோன்றிய இன்றைய மனிதர்கள் சுயதேவைப்பூர்த்தி, பண்டமாற்று பொருளாதார முறை என பல பரிமாணங்களின் பின் பணப்பரிமாற்றல் முறையினை அறிமுகப் படுத்திப் பண்டமாற்று பொருளாதார குறைபாடுகளை நிவர்த்தி செய்து இன்று மேலும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு அறிவு வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி, சுய இலாப நோக்கம் வியாபார தந்திரங்கள் காரணமாக தள்ளப் பட்டுள்ளான். வியாபார செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு மறைமுக தடைகளை ஏற்படுத்தும் அளவிற்கு அவன் செயற்பாடுகள் அமைந்துள்ளன என்றால் மிகையாகாது. சர்வதேச வர்த்தக பார்வையில் வியாபாரம் என்பது நம்பிக்கை எனும் தூண்களில் மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் இன்றைய வியாபார நடவடிக்கைகள் சில ஏமாற்று வித்தைகளை எப்படி அரங்கேற்றுவது என்பதை கற்றுக்கொடுப்பதாகவும், நிதி பிரச்சினைகளுக்கான நீதிசார் நடவடிக்கைகளிற்கு அதிக நிதியினை ஒதுக்கும் கட்டாயத்திற்கும் பிரபல வியாபார நிறுவனங்கள் தள்ளப்படுகின்றன.

இலங்கையை பொறுத்தவரை மத்திய வங்கியானது அவற்றின் சொத்துக்களை அடிப்படையாக கொண்டு நாணயக் குற்றிகளையும், தாள்களையும் அச்சிட்டு பணச்சுற்றோட்டத்தில் ஈடுபடுத்துகின்றது. ஆனால் இன்று பல தனிநபர்கள் சுய இலாபங்களிற்காக பெறுமதிகூடிய நாணயத் தாள்களை அச்சிட்டு சுற்றோட்டத்தில் ஈடுபடுத்தி விடுகின்றனர். இதனால் பலரும் வயது வேறுபாடு, அறிவு வேறுபாடின்றி பாதிக்கப்படும் நிலை அதிகரித்து காணப்படுகின்றன. பல அப்பாவிகள் குற்றவாளிகளாக தலைகுனியும் நிலையும் ஏற்பட்டுள்ளது. பலர் பெறுமதி கூடிய நாணயத்தாள்களை (ரூபா 5000, ரூபா 2000, ரூபா 1000, ரூபா 500) மாற்றுவதற்கும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுத்தவும், தயங்கவும், நாணயத்தாள்களின் உண்மை நிலையை சரிபார்க்கவும் தள்ளப் பட்டுள்ளனர். இந்நிலையானது வியாபார உரிமையாளர்கள், வாடிக்கையாளர் உறவுகளில் விரிசலை ஏற்படுத்துவதாக உள்ளன.

இந் நிலைகளை மாற்ற என்ன செய்ய வேண்டும் என்று சிந்திப்போமானால், இதற்கு பல தீர்வுகளை முன்வைக்கலாம். அவையாவன

- நாணயத்தாள்களை பெரிய பெறுமதிகளில் அச்சிடுவதை கட்டுப்படுத்தல் (உ+ம் ரூபா 5000)
- போலிகளை உருவாக்கமுடியாத அளவிற்கு அவற்றை வடிவமைத்தல்
- போலிகளை அச்சிடுபவர்களிற்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்தல்

- போலி நாணயத்தாள்களை இலகுவாக அடையாளம் காணக்கூடிய உபகரண தொகுதிகளை உரிய பாதுகாப்புடன் பொதுமக்கள் பாவனைக்கு அறிமுகப் படுத்தல்
- பொது மக்களிற்கு போதிய விழிப் புணர்வை ஏற்படுத்தல்
- சந்தேகத்திற்கு இடமான நாணயத் தாள்களை பெற்றுக்கொள்ளும் போது உரியவரின் சில அவசிய தகவல்களை பெற்றுக் கொள்ளல் என்பவற்றின் மூலம் போலி நாணய புழக்கத்தை கட்டுப்படுத்த முடிவதுடன் சந்தேகமற்ற வர்த்தக நட வடிக்கைகளிற்கு அடித்தளமிட முடியும்.

மற்றைய பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தும் ஒரு கருவி யாக காசோலை வர்த்த கம் மாறியுள்ளது.

இதற்கு வாடிக்கையாளர்களை மட்டும் குறைசொல்ல முடியாது. காசோலை களை வழங்குவதை சில வங்கிகள் தமது சுய இலாபத்திற்காக நடைமுறைகணக்கை பேணுபவரின் நிதிநிலைமைகள், வியாபார செயற்பாடுகளை கருத்தில் கொள்ளாது முகாமையாளர்களின் தனிப்பட்ட பதவியு யர்வுகள், வியாபார போட்டிகள் காரணமாக எதிர்கால பிரச்சினைகளை கருத்தில் கொள்ளாது சில குறைந்த நிபந்தனைகளு டன் காசோலை புத்தகத்தை வழங்கி விடு கின்றன. இதனால் காசோலை புத்தகத்தை பெற்றுக்கொண்டவர்கள் உரிய திட்டமிடப் படாத நிதிசார் கொடுக்கல் வாங்கல்களில் காசோலைகளை முற்திகதியிடல், பிற்திகதி யிடல், பணம் இல்லாது காசோலை வரைதல், வங்கி மேலதிக பற்று வசதிக்கு கோருதல் போன்று சிக்கல்களிற்கு தள்ளப்படுகின்றனர். இதனால் பலர் தற்கொலைகள், தலைமறை வாதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடு வதை இன்று அதிகம் காணக் கூடியதாக உள்ளது. இதற்கு வங்கிகள் என்ன செய்ய வேண்டும், ஏன் சுயநல மௌனத்தில் இன்னும்? காசோலைகள் திருப்பப்படும் போது அவர்களிற்கு கிடைக்கும் தண்டப் பணம் கிடைத்தால் போதுமா, வங்கி மேலதிக பற்று வழங்கி வாடிக்கையாளரை காப்பாற்றுவதாக சாக்கடையில் தள்ளி மேலதிக பற்று அதிகரித்த வட்டியினை உழைப்பதா? அல்லது வாடிக்கையாளரை சரியான நிதிபாதையில் செல்ல வழிகாட்டு வதா? எது பொருத்தமானது.

மக்கள் சமூக அக்கறையில் ஈடு பாட்டை காட்டும் வங்கிகள் ஏன் பின்வரும் நடைமுறைகளை பின்பற்ற கூடாது.

- வாடிக்கையாளர் வரையும் காசோலை களின் பெறுமதியை அவர் நிதி நிலை மைக்கு, வியாபார மூலதனத்திற்கு ஏற்ப வரையறுத்தல்.
- பணமின்றி வரையப்படும் காசோலை களிற்கு கடுமையான கட்டுப்பாடுகள் வரையறைகளை விதித்தல்.
- சிறந்த காசோலை கொடுக்கல் வாங்கல் களை மேற்கொள்ளும் வாடிக்கையாளர் களை தரப்படுத்தி கௌரவித்தல்.
- தேவையற்ற செயற்பாடுகளிற்கு காசோலைகள் வழங்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தல் (வட்டி)
- காசோலைகளை குறுக்கு கோடிட்டு வழங்குவதை கட்டாயப்படுத்தல்
- தொகை குறிப்பிடாமல் வழங்கப்படும் காசோலை வாடிக்கையாளரை இனம் கண்டு தண்டப்பணம் அறவிடல்.

- ✍ இன்றைய கணினித் தொழில்நுட்ப உதவியுடன் ஒரு வங்கியில் நடைமுறைக் கணக்கில் சீரான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளாத வாடிக்கையாளரை இன்னொரு வங்கியில் பிறிதொரு நடை முறை கணக்கை திறக்காது நிபந்தனைகள், ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்.
- ✍ இத்தகை வாடிக்கையாளர்கள் மோசடிகள், பிற நாடுகளிற்கு தப்பி செல்வதை தடுக்கும் பொருட்டு விசா பெறமுனையும் போது வங்கிகளின் மீதியினை செவ்வை பார்ப்பதையும் கருத்தில் கொள்ளுதல்

ஒவ்வொரு வாடிக்கையாளர் நிதி சார் செயற்பாடுகளையும் உன்னிப்பாக அவதானித்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் வங்கிகள் தமது சமூக ஒவ்வொரு உறுப்பினரையும் பாதுகாத்து சிறந்த வியாபார நடவடிக்கைகளிற்கு அடித்தளம் அமைத்துக் கொடுக்கலாம்.

ஆயிரம் ஆயுதங்களால் வெல்ல முடியாததை அறிவென்னும் ஆயுதத்தால் வெல்ல முடியும்.

உன்னிடம் காணப்படும் சக்தியை உலகிற்குக் காட்ட கல்வியே சிறந்தவழி.

உன் வாழ்நாளில் உன்னால் முடிந்ததை சாதிக்க முயற்சி செய்.

ஆலமரமாக வாழாவிடினும் ஆலமரத்தின் கீழ் வாழும் உறுதியான அறுகு போலாவது வாழ கல்வியை ஒரு கடப்பாக்கி கொள்.

வணிக முகாமைத்துவத்திற்கு அதிகாரம், பொறுப்பு, வகை கூறுதல், கையளிப்பு, வலு என்பவற்றின் பங்கு

யோ.சுபாசினி
A/L com (2014)

அதிகாரம் / ஆணையுரிமை (Authority)

ஒரு உத்தியோகத்தர் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கும், ஊழியர்களைக் கொண்டு வேலைகளை செய்விப்பதற்கும், வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கும், இலக்கினை அடைவதற்குமுள்ள வலு அதிகாரம் ஆகும்.

பொறுப்பு (Responsibility)

ஒரு உத்தியோகத்தர் பணிகளை செய்து முடிக்க வேண்டிய கடப்பாடு பொறுப்பு ஆகும். ஒருவர் பதவிக்கு நியமிக்கப்பட்டு அவருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்ட பின்னர் அவர் பொறுப்புக்கு கட்டுப்பட்டவராகிறார்.

வகைகூறல் / பதிலளிக்கத்தக்க பொறுப்பு / கணக்கு கொடுக்க வேண்டிய பொறுப்பு (Accountability)

ஒரு உத்தியோகத்தர் ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்ட பின் அவருக்கு பொறுப்புக்களை நிறைவேற்ற அதிகாரம் அளிக்கப்பட்ட பின்னர் அவரது செயற்பாடுகள் தொடர்பாக மேலதிகாரிக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய கடப்பாடு வகைகூறல் ஆகும்.

பொறுப்பும் வகைகூறலும்

- பொறுப்பு மேலிருந்து கீழ்நோக்கி பதவி வழி ஏற்படும், ஆனால் வகைகூறலானது கீழிருந்து மேல்நோக்கி ஏற்படும்.
- பொறுப்பைவிட பரந்ததாக வகைகூறல் காணப்படுகின்றது.
- பொறுப்பு இல்லாவிடின் வகைகூறல் ஏற்படமாட்டாது.
- பொறுப்பை நிறைவேற்றிக் கொள்வதுடன் தொடர்பான செயலாக வகைகூறல் உள்ளது.
- ஒருவர் அர்ப்பணிப்புடன் செயற்படும் போது வகைகூறல் இயல்பாகவே ஏற்படுகின்றது.

வலு (Power)

தனிப்பட்டவர்களின் / குழுக்களின் நடத்தையில் / எண்ணங்களில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஆற்றல் வலு ஆகும்.

ஒரு தலைவரிடம் வலு இருந்தால் அவர் கீழ்ப்பணியாளர்கள் மீது செல்வாக்குச் செலுத்தி ஊழியரின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.



வலுவிற்கும் அதிகாரத்திற்கும் இடையிலான வேறுபாடு

- அதிகாரம் பதவிவழி மூலம் ஏற்படுகின்றது. வலுவானது வேறுபட்ட வழிகள் மூலம் ஏற்படுகின்றது.
- அதிகாரத்தைவிட வலு பரந்தது.
- வலுவினுள் அதிகாரத்தை அடக்கலாம். இதனை பின்வருமாறு படத்தில் காட்டலாம்.



அதிகாரமும் பொறுப்பும் எவ்வாறு காணப்பட வேண்டும்?

அதிகாரமும் பொறுப்பும் சம அளவில் காணப்பட வேண்டும் என Henry Fayol எனும் அறிஞர் குறிப்பிடுகின்றார். அதாவது அதிகாரம் குறைந்தளவில் காணப்பட்டால் பொறுப்பை நிறைவேற்ற முடியாது. அதிகாரம் கூடியளவில் காணப்பட்டாலும் பொறுப்பை நிறைவேற்ற முடியாது.

கையளிப்பு (Delegation)

ஒரு உயர்நிலை முகாமையாளர் கீழ்ப் பணியாளர்களுக்கு கருமங்களை நிறைவேற்றுவதற்கான அதிகாரத்தை ஒப்படைத்தல் கையளிப்பு ஆகும். இதை பின்வருமாறு படிமுறை ஒழுங்கில் காட்டலாம்.



கையளிப்பின் முக்கியத்துவங்கள் / நன்மைகள்

1. உயர் முகாமையின் வேலைப்பழு குறைவடையும்.
2. கீழ்ப்பணியாளர்கள் ஊக்குவிக்கப் படுவர்.
3. விரைவான தீர்மானங்களை மேற்கொள்ளலாம்.
4. எதிர்கால முகாமையாளர்களை பயிற்றுவிக்கலாம்.
5. உயர் முகாமைக்கு கூடிய வேலைச் சுமையினால் எழக்கூடிய தவறுகளை தவிர்க்க கையளிப்பு உதவும்.

அதிகாரக் கையளிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

1. நிறுவனத்தின் அளவு
2. கட்டுப்பாட்டின் அளவு
3. பின்பற்றும் முகாமைத்துவ முறை
4. எடுக்கவேண்டிய தீர்மானத்தின் முக்கியத்துவம்

அதிகாரம், பொறுப்பு, வகைகூறல் ஆகிய எண்ணக்கருக்கள் எவ்வாறு கையளிப்புடன் தொடர்புபடுகின்றது

ஒரு உத்தியோகத்தர் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கும், ஊழியர்களை கொண்டு வேலைகளை செய்விப்பதற்கும், வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கும், இலக்கினை அடைவதற்குமுள்ள வலு அதிகாரம் ஆகும். உத்தியோகத்தர் ஒருவர் பணிகளை நிறைவேற்றுவது தொடர்பான கடப்பாடு பொறுப்பு ஆகும்.

அதிகாரத்தை பெற்றுக்கொண்டவர் தமது வேலை செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையினை தமது மேலதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டிய கடப்பாடு வகை கூறல் ஆகும்.

கையளிப்பு என்பது ஒரு உத்தியோகத்தர் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான அதிகாரத்தை கீழ்ப் பணியாளர்களுக்கு ஒப்படைத்தல் கையளிப்பு ஆகும். இவ்வாறு கையளிப்பினால் தான் அதிகாரம், பொறுப்பு, வகைகூறல் என்பன ஏற்படுகின்றன. கையளிப்பு இல்லையேல் இவை ஏற்பட மாட்டாது.

இதை பின்வருமாறு வரைபடத்தில் காட்டலாம்.



உசாத்துணை நூல் :

அறிவுத் தேடல், ஆசிரியர் கைநூல்

உன்னுள் மாபெரும் சக்தியுண்டு, உன்னால் எதனையும் எங்கேயும் சாதிக்க முடியும்.

மற்றவனை குறை கூறுவதால் உன்னிடம் உள்ள திறமைகளும் வீணடிக்கப்படும். எத்தனை இடர்கள் வந்தாலும் நீ உடைத்தெறிந்து உன் இலக்கை நோக்கி நகர் வெற்றி உனக்கே

எழுந்திடு! விழித்திரு! உன் இலக்கை அடையும் வரை விடாமுயற்சி செய்! வெற்றி உனக்கே!

கணக்கீடு

எண்ணக்கருக்களின் கருக்கள்

அ.நிஷாந்தினி
A/L com (2014)

நிறுவனமும் நீயும்
வேறு வேறு
இதுவே **"அலகுசார்ந்த"**
எனது கருத்து

வருட அனைத்து வருமானமும்
வருட அனைத்து செலவும்
நிதிக்கூற்றில் காட்டு
இதுவே **"அட்டுறுவாகிய"** எனது கருத்து

நிறுவனம் தொடர்ந்து இயங்கி
தனது இலக்கை அடையும் என்ற
அஸ்திவாரத்தில் நிதிக்கூற்றை செய்
என்பதே **"தொடர்ந்தியங்குமாகிய"** என் அபிப்பிராயம்

எதிர்கால நட்டம் தெரிந்தால் உடனே காட்டு
எதிர்கால வருமானத்தை கவனத்தில் எடுக்காதே
இதுவே என் கவனமான
"பாதுகாப்பின்" கருத்தாகும்

வருமானத்தையும் செலவையும் ஒப்பிடு
வெவ்வேறு ஆண்டில் வருமானம் செலவு ஏற்பட்டாலும்
அதனை ஏற்பாடு செய்து நடப்பாண்டு வருமானத்திற்கு
எதிராக காட்டு இதுவே **"இணைத்தலாகிய"** என் எண்ணம்

வருமானம் கிடைத்த பின்னே
வருமானமாக காட்டு
இதுவே **"தேறலாகிய"**
என் சிந்தனை

முக்கியமான விடயங்களுக்கு முக்கியம் கொடு
முக்கியமற்ற கொடுக்கல் வாங்கல் முக்கியப்படுத்தப்படுமாயின்
முக்கியமான கொடுக்கல் வாங்கலின் முக்கியத்துவம்
குறைந்து விடும் இதுவே **"முக்கிய அளவீடாகிய"** என் முக்கியத்துவம்

நிறுவனத்தின் உண்மை பெறுபேற்றை அறிய
உன் கொள்கைகளை அடிக்கடி மாற்றாதே
மாற்றினால் தகுந்த காரணத்தை முன்வை
இதுவே **"கொள்கை மாறாமையாகிய"** என் கொள்கையாகும்

பணத்தினால் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களை
இனங்காண் அதனை பதிவுசெய்
இதுவே **"பண அளவீடாகிய"**
என் எண்ணத்தின் கருவாகும்

நிறுவன கால அளவு நீண்டது
பொறுத்திருந்து கணக்கீடு செய்வது சாத்தியமற்றது
ஆயுள்களை துண்டாக்கி கணக்கீடு செய்
என்பதே **"கணக்கீட்டு கால அளவாகிய"** என் கருவாகும்

சட்டரீதியான தன்மையை விட
பொருளாதார ரீதியான தன்மைக்கு
முக்கியம் கொடு இதுவே
"தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவமாகிய" நான் கூறுவது

சொத்துக்கும் சேவைக்கும் ஏற்பட்ட
உண்மை கிரயத்தை கணக்கீட்டில்
காட்டு என்பதே
"வரலாற்று கிரயமாகிய" நானாகும்

வணிக செயற்பாடுகளை
பயன்பாட்டாளர் மதிப்பிடுவதற்கு
உதவக்கூடிய அனைத்து தகவலையும் வெளிப்படுத்து
என்பதே **"வெளிப்படுத்தலாகிய"** என் வெளிப்படுத்தலாகும்

கணக்கீட்டு தகவல்கள் பல
பயன்பாட்டாளர்களின் பொதுவான

தேவையை திருப்தி செய்ய வேண்டும்
ஒரு கட்சியினரிடம் பக்க சார்பாக இராதே
என்பதே **“நோக்கமாகிய”** என் நோக்கமாகும்

ஒவ்வொரு கணக்கீட்டு உள்ளீடுகளுக்கும்
வரவு செலவு என்று பதியும்
இரட்டை விளைவு உண்டு
என்பதே **“இரட்டை விளைவாகிய”** என் கருத்தாகும்

கணக்கீட்டு முறையில் வழங்கப்படும்
தகவல் அந்நிறுவனத்தின் விற்பனையாற்றலுக்கும்
நிதி நிலமைக்கும் சம்பந்தமானதை கூறு
என்பதே **“சம்பந்தமாகிய”** என் எண்ணமாகும்

கீழிருந்து மேல்

7. நன்மதிப்பு
11. இடர்
18. இசுறு
19. சைகை

இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) - 16உம் பெறுமானத் தேய்வும்

ஜெ.லிழயா ரிஹானா
A/L com (2014)

கிரயம்

ஒரு சொத்து அடையப்படும் போது செலுத்தப்படுகின்ற காசு அல்லது காசுக்கு சமனான தொகை அல்லது விட்டுக்கொடுக்கின்ற சன்மானத்தின் நியாயமான பெறுமதி ஆகும்.

கீழ்க் கொண்டுசெல் தொகை

கீழ்க் கொண்டு செல் பெறுமதி என்பது ஒரு சொத்திலிருந்து அதன் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் திரண்ட மதிப்பிழப்பு நட்டங்கள் என்பன கழிக்கப்பட்ட பின் கிடைக்கும் பெறுமதி ஆகும்.

சொத்தின் ஏற்பிசைவு

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்தை சொத்தாக அங்கீகரித்து ஏடுகளில் பதிவுசெய்ய 02 நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

அவையாவன

- சொத்திலுள்ள பொருளாதார நலன்களானவை நிறுவனத்திற்கு கிடைக்கக் கூடியதாய் இருத்தல்
- சொத்தின் கிரயத்தினை நம்பகமான அடிப்படையில் மதிப்பீடு செய்யக்கூடியதாக இருத்தல்

சொத்தின் பாவனைக் காலம்

ஒரு சொத்தை பயன்படுத்தி பயனைப் பெற்றுக்கொள்ளக் கூடிய காலம் அல்லது அச்சொத்தினை பயன்படுத்தி உற்பத்தி செய்கின்ற அலகுகளின் எண்ணிக்கை பாவனைக் காலம் எனப்படும்.

பாவனைக் காலத்தினை தீர்மானிக்கும் காரணிகள்

- சொத்தின் உபயோக விரயம்
- வழக்கிழப்பு
- பௌதீக அழிவுகள்
- சொத்தின் உபயோகம் தொடர்பான சட்டக் கட்டுப்பாடு

பெறுமானத் தேய்வு

ஒரு சொத்தின் பெறுமானத் தேய்விடக் கூடிய பெறுமதியை அதனது பாவனைக் காலம் முழுவதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறையில் ஒதுக்கீடு செய்வது ஆகும்.

பெறுமானத் தேய்விடத்தக்க தொகை

ஒரு சொத்தின் பெறுமானத் தேய்விடத்தக்க தொகை என்பது அச்சொத்தின் கிரயம் அல்லது மீள்மதிப்பிடப்பட்ட பெறுமதியில் இருந்து அச்சொத்தின் இறுதி/முடிவுப் பெறுமதியினைக் கழிக்கவரும் தொகையைக் குறிக்கும்.

பெறுமானத் தேய்வு தொகையினை தீர்மானிக்கும் காரணிகள்

- சொத்தின் கிரயம்
- சொத்தின் எச்சப் பெறுமதி
- சொத்தின் பாவனைக் காலம்

பெறுமானத் தேய்வு செய்வதன் நோக்கம்

- ✍ ஆண்டுக்கான சரியான இலாபநட்டத்தை அறிந்துகொள்ள
- ✍ சொத்தின் பாவனைக்கால முடிவில் புதிய சொத்தினைப் பெற
- ✍ நிலையான சொத்தின் சரியான பெறுமதியைக் காட்ட

இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கமைய பெறுமானத் தேய்வுக்கு அதாவது பின்வருவன அடையாளங்காணப்படல் வேண்டும் அவையாவன.

1. சொத்தின் பெறுமானத் தேய்விடத்தக்க தொகை
2. சொத்தின் இழிவுப் பெறுமதி
3. பயன்தரு ஆயுட்காலம்

கிரயத்தின் உள்ளடக்கம்

ஆதனம், பொறி, மற்றும் உபகரணம் என்பனவற்றின் ஒவ்வொரு உருப்படிகளினதும் கிரயத்தின் பகுதிகளாவன.

1. கொள்விலை
2. நேரடியாகத் தொடர்பு கொண்ட கிரயம்

பெறுமானத் தேய்வு செய்யும் முறைகள்

1. நேர்கோட்டு முறை
2. குறைந்து செல் முறை
3. இலக்கங்களின் கூட்டுத்தொகை முறை

இவற்றுடன் தொடர்புடைய இரட்டைப் பதிவு

நிலையான சொத்தொன்றை விற்பனை செய்யும் போது அல்லது அகற்றும் போது அதற் குரிய நாட்குறிப்பேடு.

நிலையான சொத்தகற்றல் கணக்கு வரவு	XXX	
நிலையான சொத்துக் கணக்கு செலவு		XXX

(அகற்றப்படும் சொத்தின் கொள்விலையை நிலையான சொத்த கற்றல் கணக்கிற்கு மாற்றுதல்)

பெறுமானத் தேய்வு ஏற்பட்டுக் கணக்கு வரவு	XXX	
நிலையான சொத்தகற்றல் கணக்கு செலவு		XXX

(அகற்றப்படும் சொத்துக்கு இதுவரை செய்யப் பட்ட தேய்வினைச் சொத்தகற்றல் கணக்கிற்கு மாற்றுதல்.)

காசுக் கணக்கு வரவு	XXX	
நிலையான சொத்தகற்றல் கணக்கு செலவு		XXX
இலாப நட்டக் கணக்கு செலவு		XXX

(நிலையான சொத்தகற்றல் மூலம் பெற்ற இலாபத்தை or நட்டத்தை இலாப நட்ட கணக் கிற்கு மாற்றுதல்)

நட்டம் ஏற்பட்டால்

இலாப நட்டக் கணக்கு வரவு	XXX	
நிலையான சொத்தகற்றல் கணக்கு செலவு		XXX

சொத்தின் பகுதி மாற்றல்

ஏற்கனவே உள்ள சொத்தொன்றினையும் பணத்தினையும் வாங்குதல் அல்லது சொத்தை வழங்கி புதிய சொத்தையும், காசினையும் வாங்குதல் பகுதி மாற்றல் எனப்படும்.

அதற்கான நாட் குறிப்பேடு வருமாறு

சொத்து பகுதி மாற்றல் கணக்கு வரவு	XXX	
சொத்துக் கணக்கு செலவு		XXX
(பழைய சொத்தினை அகற்றல்)		
பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு வரவு	XXX	
சொத்துப் பகுதி மாற்றல் கணக்கு செலவு		XXX
(கைமாற்றும் சொத்தின் திரண்ட தேய்வை அகற்றல்)		
புதிய சொத்துக் கணக்கு வரவு	XXX	
காசுக் கணக்கு செலவு		XXX
சொத்து பகுதி மாற்றல் கணக்கு செலவு		XXX
(பழைய சொத்தும், காசும் கொடுத்து புதிய சொத்தை கையேற்றல்)		

இலாபம் எழும் நிலையில்

சொத்து பகுதி மாற்றல் கணக்கு வரவு	XXX	
இலாப நட்டக் கணக்கு செலவு		XXX
(கைமாற்றலால் எழும் இலாப நிலையிலாகும்)		

நட்டம் எழும் நிலையில்

இலாப நட்டக் க/கு வரவு	XXX	
சொத்து பகுதி மாற்றல் க/கு செலவு		XXX
(கைமாற்றலால் நட்ட நிலை ஏற்படும் போதாகும்.		

உதாரணமாக

நிறுவன மொன்றின் கணக்காண்டு மார்ச் 31 இல் முடிவடைகிறது. இந் நிறுவனத்தின் தளபாடம் தொடர்பான தகவல்கள் வருமாறு,

2010.04.01 முதலாவது தளபாடக் கொள்வனவு 400 000
2012.01.01 இல் இரண்டாவது தளபாடக் கொள் வனவு 300 000 ஆக இருந்தது.

இன் நிறுவனம் தளபாடத்துக்கு ஒடுங்கு பாக முறையில் ஆண்டிற்கு 20% பெறுமானத் தேய்விடப்படுகிறது.

வேண்டப்படுவது

1. 2011.03.31, 2012.03.31, 2013.03.31 ஆகிய ஒவ்வொரு கணக்காண்டு இறுதித் திகதியிலும் தளபாட பெறுமானத் தேய்வு தொகையை கணிப்பிடுக.
2. 2010/2011, 2011/2012, 2012/2013 ஆகிய 03 ஆண்டுகளுக்கும் கணக்குகளில் உரிய பதிவுகளைத் தருக?

அ. தளபாடக் கணக்கு

ஆ. தளபாட பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு

இ. தளபாட பெறுமானத் தேய்வுக் கணக்கு

தீர்வு

1. 2011.03.31ல் தளபாட பெறுமானத் தேய்வு = $400000 \times \frac{20}{100}$

= 80000/=

2012.03.31ல் தளபாட பெறுமானத் தேய்வு = $(400000 - 80\,000) \times \frac{20}{100}$

= $320000 \times \frac{20}{100}$

= 64000

2013.03.31ல் தளபாட பெறுமானத் தேய்வு

1வது தளபாடம் = $(400000 - 144000) \times \frac{20}{100}$

= $256000 \times \frac{20}{100}$

= 51200/=

2வது தளபாடம் = $300000 \times \frac{20}{100} \times \frac{6}{12}$

= 30000/=

51200 + 30 000 = 81200/=

தளபாடக் கணக்கு

2010/04/01		2011/03/31ல்	
காசு	400 000	மீ/செ	400 000
	400 000		400 000
2010/04/01		2012/03/31	
மீ/வ	400 000	மீ/செ	400 000
	400 000		400 000
2012/04/01			
மீ/வ	400 000		
2012/04/01		2013/04/01	
காசு	300 000	மீ/வ	700 000
	700 000		700 000
2013/04/01			
மீ/வ	700 000		

தளபாட பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் க/கு

2011.03.31 மீ/செ	80 000	2011.03.31 பெ.தேய்வு க/கு	80000
			80000
	80 000	2011.04.01 மீ/வ	80000
2012.03.31		2012.03.31 பெ/தேய்வு	
மீ/செ	144 000	க/கு	64000
	144 000		144000
		2012.04.01 மீ/வ	144 000
2013.03.31		2013.03.31	
மீ/செ	225 200	பெ.தே.க/கு	81 200
	225 200	2013.04.01 மீ/வ	225 200
			225 200

தளபாட பெறுமானத் தேய்வு க/கு

2011.03.31		இலா/நட்	
பெ/தே/ஏ க/கு	80 000	க/கு மாற்றியது	80 000
2012.03.31		இலா / நட்ட	
பெ/தே/ஏ க/கு	64 000	க/கு மாற்றியது	64 000
2013.03.31		இலாப/நட்ட	
பெ/தே/ஏ க/கு	81 200	க/கு மாற்றியது	81 200

உசாத்துணை : குமாரசாமி கலைச்செல்வன்
உயர் கணக்கீடு

உன் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள்.
இங்கே ஒரு புத்தகப்புழு உறங்குகின்றது என்று

துப்பாக்கிகளை விட பயங்கரமான ஆயுதங்கள் புத்தகங்கள்

சம்பளப் பட்டியல்

சி.துர்க்காயினி
A/L com (2014)

சம்பளப்பட்டியல் என்பது குறித்த கால எல்லையினுள் வேலையில் அல்லது பணியில் ஈடுபட்ட ஒவ்வொரு தொழிலாளிக்கும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ஊதியக் கணிப்பீட்டையும், தேறிய ஊதியத்தினையும் உள்ளடக்கிய பட்டியலாகும். சம்பளப்பட்டியலில் அனைத்துத் தொழிலாளிகளினதும் சம்பள விபரங்கள் தனித்தனியான நிரல்களில் பதியப்பட்டிருக்கும். கிரய நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனி சம்பளப் பட்டியல்கள் தயாரிக்கப்படுவதுண்டு. இதனால் பாதீடு செய்யப்பட்ட சம்பளக் கிரயங்களை உண்மையான கிரயங்களுடன் ஒப்பிட்டு பார்த்துக்கொள்ள முடிகின்றது.

பாரிய நிறுவனங்களில் சம்பளப் பட்டியல் தயாரித்தல் என்பது தனியான துறையினால் மேற்கொள்ளப்படுகின்றது. நேரப்பதிவு, வேலைப்பதிவு என்பவற்றின் அடிப்படையில் சம்பளப்பட்டியல் தயாரிக்கப்படுகின்றது. தற்பொழுது நிறுவனங்களின் சம்பளம் வழங்கும் கொள்கைக்கு ஏற்ப (நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம்) ஒவ்வொரு பணியாளரும் பெற வேண்டிய அடிப்படைச் சம்பளம், சம்பள ஏற்றத் திகதி, சம்பள ஏற்றத்தொகை, மேலதிக நேர வேலைக்கான மணித்தியால அளவு, மணித்தியால விகிதம் என்பன நியமப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டிருக்கும். இதனால் குறித்த மாத காலத்தில் அவ் ஊழியன் தொடர்பான உண்மை விபரங்களை உள்ளடக்கியதாக சம்பளப் பட்டியல் தயாரிக்கப்படும்.

சம்பளப்பட்டியலின் முக்கியத்துவம்

01. சம்பளம் அல்லது கூலி தொடர்பான விபரங்களை தேவையானபோது பெற்றுக் கொள்வதற்கு முடியும்.
02. சம்பளம் அல்லது கூலி அவற்றுக்குரிய நேரப்பதிவு, வேலைப்பதிவு, துண்டு வேலைப்பதிவு ஆகியவற்றிற்கு அமைவாக கணிப்பிடப்பட்டமையை உறுதி செய்தல்.
03. பேரேட்டில் சம்பளம் தொடர்பான பதிவுகளைச் செய்வதற்கு உதவுதல்.
04. சம்பளப்பட்டியலை கணக்குப்பதிவுக்கு மூல ஆவணமாகப் பயன்படுத்துவதற்கு முடியும்.
05. சம்பளம் அல்லது கூலி தொடர்பான தகவல்களை விபரமாக வெளிப்படுத்தல்.
06. ஊழியருக்கு ஊதியம் வழங்கப்பட்டமையை உறுதி செய்தல்

சம்பளம்/கூலி வழங்குதலில் கணக்கீட்டுத் துறையின் பணிகள்

01. ஒவ்வொரு வேலையாட்களுக்கும் துறைவாரியாக ஊதியப் பதிவுகளைப் பராமரித்தல்
02. நேரப்பதிவு, வேலைப்பதிவுகளுடன் சம்பளப்பட்டியல் விபரங்கள் ஒத்திருக்கின்றதா என்பதைச் சரிபார்த்தல்.

03. ஒவ்வொரு பணியாளருக்கும் உரிய சம்பளத்தை மொத்தமாகவும் தேறிய தாகவும் கணக்கிடல்.
04. மொத்தக் கூலி/மொத்தச் சம்பளத்தில் இருந்து உரிய கழிவுகளை மேற்கொண்டு அக் கழிவுகளை துறைக்கு அல்லது நிறுவனத்துக்கு அனுப்பி வைத்தல்

சம்பளம் / கூலி வழங்கலில் ஏற்படக் கூடிய மோசடிகள்

01. சம்பளப்பட்டியலில் வேலையாட்களின் எண்ணிக்கை கூடுதலாக காட்டப்படலாம்.
02. வேலைக்கு சமூகம் அளிக்காதவர்களை சமூகம் அளித்தவர்களாகக் காட்டலாம்
03. தாமதமாக வேலைக்கு சமூகம் அளித் தோரை கவனத்தில் எடுக்காது விடுதல்.
04. கூலிக் கொடுப்பனவை மிகைப்படுத்திக் காட்டல்.
05. மேலதிக வேலை நேரத்தை மிகைப் படுத்திக் குறித்தல்.
06. கழிவுகளை பதிவாக்காமல் தவிர்த்தல்.

சம்பளம்/கூலி வழங்கலில் மோசடிகளை தடுத்தல்

01. துறைத் தலைவர்களின் முன்னிலையில் சம்பளம் தொழிலாளருக்கு வழங்கப் படுதல்.
02. சம்பளப்பட்டியல் பதிவுகளை நேரப் பதிவு, வேலைப்பதிவுகளுடன் சரி பார்த்தல்.
03. ஒவ்வொரு தொழிலாளருக்கு அவர் களின் பெயர் குறித்த ஊதிய உறை தனித் தனியாக தயாரிக்கப்படல்
04. சம்பளம்/கூலி உரிய நபருக்கு நேரடி யாக வழங்கப்படுதல் வேண்டும்
05. கொடுப்பனவு செய்யப்படாத சம்பளம் / கூலி செலுத்தப்படாத சம்பளக் கணக்கில் சேர்த்தல் வேண்டும்.

சம்பளப்பட்டியலில் உள்ளடக்கப்பட வேண்டிய உருப்படிகள்

01. தொழிலாளர் பெயர், தொழிலாளர் இலக்கம், தொடர் இலக்கம்
02. தொழிலாளர்களுக்கான கொடுப்பனவுகள்
அடிப்படைச் சம்பள துண்டுக் கூலி
மிகை ஊதியக் கொடுப்பனவுகள்
03. தொழிலாளர்களிடம் இருந்தான அறவீடுகள்:-
    கடன்கள், வட்டி முற்பணம்
    வங்கி அறவீடுகள்
    ஊழியர் சேமலாபநிதி
    முத்திரைக் கட்டணம்
04. தொழில் வழங்குனர் அறவீடுகள்:-
    ஊழியர் சேமலாபநிதி (EPF)
    ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF)

சம்பளப்பட்டியலைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப் படும் ஆவணங்கள்

i. ஊழியர் நியமனக்கடிதம்
ii. வரவுப்பதிவேடு
iii. நேர அட்டை
iv. துண்டு வேலை அட்டை
v. மேலதிக வேலை நேர கொடுப்பனவு ஆவணம்
vi. சுற்றுநிருபம்

ஊழியர் கூலிக்கிரயத்தை கணிப்பிடப்படும் போது பயன்படுத்தப்படும் பேரேட்டு கணக்குகள்

1. சம்பளம் அல்லது கூலிக் கட்டுப்பாட்டு கணக்கு
2. சம்பளக் கணக்கு
3. கழிவுகள் தொடர்பான பேரேட்டுக் கணக்குகள்
    அ. ஊழியர் சேமலாப நிதிக் கணக்குகள்
    ஆ. ஊழியர் கடன் கணக்கு
    இ. கடன்வட்டி கணக்கு
    ஈ. (உழைக்கும் போதே) வரி செலுத்தும் கணக்கு

சம்பளப்பட்டியல் ஒன்றின் மாதிரி

x நிறுவனத்தின் சம்பளப்பட்டியல்

ஆண்டு:................. **வாரம்/ மாதாந்தம்:................**

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23
தொடர் இலக்கம்	ஊழியர் இலக்கம்	ஊழியர் பெயர்	வேலை செய்த நேரம்	கூலி விகிதம்	அடிப்படைச் சம்பளம்	பிறபடிகள்	மேலதிக நேரச் சம்பளம்	மொத்த சம்பளம்	EPF	விழா முற்பணம்	கடன் அறவீடு	கடன் வட்டி	சம்பள முற்பணம்	உழைக்கும் போதான வரி	தொழிற் சங்க சந்தா	மேலதிக கொடுப்பனவு	முத்திரை கட்டணம்	மொத்த அறவீடு	தேறிய லாபம்	கையொப்பம்	EPF பங்களிப்பு	ETF பங்களிப்பு
		மொத்தம்																				

❖ கூலிக்கிரயத்துடன் தொடர்புடைய பதிவுகள்

01. மொத்தச் சம்பளம் / மொத்தக் கூலி
    - சம்பளம் / கூலி கணக்கு — வரவு
    - சம்பளம் / கூலிகட்டுப்பாட்டு கணக்கு — செலவு

02. சம்பளம் / கூலி மீதான கழிப்பனவுகள்
    - சம்பளம்/கூலி கட்டுப்பாட்டுக் கணக்கு — வரவு
    - ஊழியர் கடன் கணக்கு — செலவு
    - சம்பள முற்பண கணக்கு — செலவு
    - ஊழியர் சேமபலாப நிதிச் செலவு கணக்கு — செலவு

03. பணமாக ஊழியருக்கு செலுத்திய தேறிய சம்பளம்
    - சம்பளம்/கூலி கட்டுப்பாட்டுக் கணக்கு — வரவு
    - காசு/வங்கி கணக்கு — செலவு

    1) தொழில் வழங்குனரின் சேமலாப நிதியம்
       - ஊழியர் சேமலாப நிதிச் செலவு கணக்கு — வரவு
       - ஊழியர் சேமலாப நிதிக் கணக்கு — செலவு

    2) ஊழியர் நம்பிக்கை நிதிப்பங்களிப்புக்கான பதிவு
       - ஊழியர், நம்பிக்கை நிதிச் செலவு கணக்கு — வரவு
       - ஊழியர் நம்பிக்கை நிதிக் கணக்கு — செலவு

"X" நிறுவனமொன்றின் 20XXம் ஆண்டு ஜனவரிமாத சம்பளப்பட்டியல்

	அடிப்படைச் சம்பளம்	கொடுப்பனவு	மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு	ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்பு	சம்பள முற்பணம்	ஊழியர் கடன்	மொத்தக் கழிவு	தேறிய சம்பளம்	ஊழியர் சேமலாப நிதி வேலை கொள்வோர் பங்களிப்பு	ஊழியர் நம்பிக்கை நிதி வேலை கொள்வோர் பங்களிப்பு
பி. குமரன்	4500	800	1200	6500	424	150	120	694	5806	636
செ. வினோதன்	4000	800	—	4800	384	150	—	534	4266	576
சி. பாலன்	5200	800	1000	7000	480	150	100	730	6270	720
யே. பியதாச	3500	600	—	4100	328	—	—	328	3772	492
	17200	3000	2000	22400	1616	450	2286	328	20114	2424

(கற்பனையான எண்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன)

இங்கு ஊழியர் சேமலாப நிதிப்பங்களிப்பு, அடிப்படைச் சம்பளமும் படிகளும் சேர்க்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் ஊழியர் 8%மும் வேலை கொள்வோர் 12%மும் பங்களிப்புக் தொகை மதிப்பிட்டதாகும்.

சம்பளம்/கூலி கட்டுப்பாட்டு கணக்கு

ஊழியர் சேமலாப நிதி க/கு	1616	சம்பளம்/ கூலி கணக்கு	22400
சம்பள முற்பணக் கணக்கு	450		
ஊழியர் கடன் கணக்கு	220		
காசு கணக்கு	20114		
	22400		22400

சம்பளம்/கூலி கட்டுப்பாட்டு கணக்கு

சம்பள கட்டுப்பாட்டு க/கு	22400	இலாப நட்டக் க/கு	22400

ஊழியர் சேமலாப நிதிக் கணக்கு

காசு க/கு	4040	சம்பள கட்டுப்பாட்டு க/கு	1616
		ஊழியர் சேமலாப நிதி செலவு க/கு	2424
	4040		4040

சம்பள முற்பண கணக்கு

மீதி/வ	25000	சம்பள கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி/செ	450
		ஊழியர் சேமலாப நிதி செலவு க/கு	24550
மீதி/வ	25000		25000
	24550		

ஊழியர் நம்பிக்கை நிதி கணக்கு

காசு க/கு	1010	ஊழியர் நம்பிக்கை நிதி செலவு க/கு	1010

ஊழியர் சேமலாப நிதி செலவு கணக்கு

ஊழியர் சேமலாப நிதி க/கு	2424	இலாப நட்டக் க/கு	2424

ஊழியர் கடன் கணக்கு

மீதி/வ	1000	சம்பள கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி/செலவு	220
			780
மீதி/வ	1000		1000
	780		

ஊழியர் நம்பிக்கை நிதிச் செலவு கணக்கு

ஊழியர் நம்பிக்கை நித க/கு	1010	இலாப நட்டக் க/கு	1010

உசாத்துணை நூல்கள்:-

உயர் கணக்கீடு பகுதி II
குமாரசாமி கலைச்செல்வன்
கிரய கணக்கீடு
எஸ்.சிவநேசராசா

கணக்கீட்டு எண்ணக்கருக்கள்
Accounting Concepts

கு.சாதனா
தே.அருள்டிசாறா
A/L com (2014)

கணக்கீட்டு எண்ணக்கருக்கள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க பயன்படுத்தப்படுகின்ற அடிப்படைக் கணக்கு பதிவு விதிகள், முறைகள், மரபுகள், சட்டங்கள் என்பவையே "கணக்கீட்டு எண்ணக்கருக்கள்" ஆகும்.

கணக்கீட்டு எண்ணக்கருக்கள் தோற்றம் பெற்ற முறை

கணக்கீட்டின் வளர்ச்சியானது பல்வேறு மரபு ரீதியான கருத்துக்கள் மூலம் ஏற்பட்டன. பின்னர் அவை சில அடிப்படைத் தத்துவங்களாக தோற்றம் பெற்றன. இந்த மரபுரீதியான கருத்துக்களும் தத்துவங்களும் கணக்கீட்டு அறிஞர்களைத் தூண்டி அவை எண்ணக்கருக்கள், கொள்கைகள், விதிகள் எனத் தோன்றின.

கணக்கீட்டு எண்ணக்கருக்களின் (அவசியம்)

அனைத்து நிறுவனங்களும் ஒரே மாதிரியான நிதிக்கூற்றினைத் தயாரிக்கவும், நம்பகத் தன்மையுடையனவாக அமைவதற்கும் இவ் எண்ணக்கருக்களை பின்பற்ற வேண்டும்.

கணக்கீட்டு எண்ணக்கருக்களின் வகைகளாவன,

01. தொழில் முழுமைக்கூறு எண்ணக்கரு

Business Entry Concept

(அலகுசார் எண்ணக்கரு, உளதாந்தன்மை எண்ணக்கரு)

நிறுவனம் வேறு உரிமையாளர், வேறு என்ற அடிப்படையிலேயே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும் என இவ் எண்ணக்கரு கூறுகின்றது. அதாவது உரிமையாளரின் தனிப்பட்ட நடவடிக்கைகள் நிறுவனத்தின் செயற்பாட்டினைப் பாதிக்கக் கூடாது என்பதற்காகும்.

இவ் எண்ணக்கரு தனிவியாபாரம், பங்குடமை போன்ற வியாபார அமைப்புகளுக்கும் தனிமனித அந்தஸ்து வழங்கப்படுகின்றது.

உ+ம்:-

1. உரிமையாளரால் செலுத்தப்பட்ட வருமானவரி இலாப நட்டக் கணக்கில் செலவாக காண்பிக்கப்படவில்லை.
2. உரிமையாளரால் சொந்தபாவனைக்கு என கொள்வனவு செய்யப்பட்ட கணினிகள் ஐந்தொகையில் நடைமுறையல்லாச் சொத்தாகக் காண்பிக்கப்படவில்லை.

02. பண அளவீட்டு எண்ணக்கரு

Money Mesaurement Concept

பணத்தினால் அளவீடு செய்யப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவேண்டும் என இவ் எண்ணக்கரு கூறுகின்றது.

இவ் எண்ணக்கரு பின்வரும் வரையறைகளைக் கொண்டு செயற்படுகின்றது.

i. பணப் பெறுமதி மாற்றமடைவதில்லை

ii. பணத்தினால் அனைத்தையும் அளவீடு செய்யலாம்.

உ+ம்:-

1 ஊழியரின் வினைத்திறன், முகாமையாளரின் அனுபவம் என்பன ஐந்தொகையில் சொத்தாகக் காண்பிப்பதில்லை.

2. பொது விலைமட்ட மாற்றங்கள் கணக்குகளில் சேர்த்துக்கொள்வதில்லை

உ+ம்:- 5 வருடத்துக்கு முன் 100,000/= கொள்வனவு செய்யப்பட்ட தளபாட பெறுமதி அதிகரித்து வருகின்றது.

03. தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

Going Concern Concept

(செயற்படு அமைப்பு எண்ணக்கரு)

நிறுவனம் தொடர்ச்சியாக பல ஆண்டுகள் செயற்பட்டு தனது இறுதி நோக்கத்தை அடைந்துகொள்ளும் என்ற அடிப்படையிலேயே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் என இவ் எண்ணக்கரு கூறுகின்றது.

இவ் எண்ணக்கருவைப் பின்பற்றுவதால் நிறுவனம் ஒன்று தனது சொத்துக்களை நடைமுறைச்சொத்து அல்லது நடைமுறையல்லாச் சொத்து என்றும் பொறுப்பை நடைமுறைச் பொறுப்பு அல்லது நடை முறையல்லா பொறுப்பு எனவும் கருதி கணக்கறிக்கைகளை தயாரிக்கும்.

(**குறிப்பு:-** கிரய எண்ணக்கரு, கால அளவு எண்ணக்கரு, அட்டுறு எண்ணக்கரு என்பன இவ் எண்ணக் கருவின் காரணமாகவே தோற்றம் பெற்றன.)

உ+ம் :- 1. பெறுமானத் தேய்வு

04. பொருண்மை எண்ணக்கரு

Materiality Concept

(முக்கிய அளவு எண்ணக்கரு)

முக்கியமான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நிதிக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும் என இவ் எண்ணக்கரு கூறுகின்றது. அதாவது முக்கியம் எனக்கருதும் விடயங்களினை நிதிக்கூற்றுக்களை காட்டாது விடுவதனையோ அல்லது முக்கியமற்ற விடயங்களைத் தனித்துக் காட்டுவதனையோ இவ் எண்ணக்கரு தடுக்கின்றது.

உருப்படிகள் வருமானம் சார்ந்ததா? மூலதனம் சார்ந்ததா? என வகைப்படுத்தும் எண்ணக்கரு.

உ+ம்:-

i. 15/= செலுத்தி கொள்வனவு செய்த பேனா ஒன்றின் பாவனைக் காலம் 5 ஆண்டுகளாகக் காணப்படினும் இவ் எண்ணக் கருக்கமைய குறிப்பிட்ட ஆண்டிலேயே செலவாகக் காட்டப்பட வேண்டும்.

ii. கடிதகோவை உறைகள் காரியாலயத்தில் பல வருடங்கள் பயன்படுத்தக் கூடியது. எனினும் நடைமுறையல்லாச் சொத்தாகக் காட்டப்பட முடியாது.

05. இணைத்தல் எண்ணக்கரு

Matching Concept

(பொருந்தச் செய்யும் எண்ணக்கரு, ஒப்புமை எண்ணக்கரு)

வருமானமும் செலவும் ஒப்பிடக் கூடியதாக அதே ஆண்டிலேயே கணக்குகளில் காட்டப்பட வேண்டும் என இவ் எண்ணக்கரு கூறுகின்றது.

இவ் எண்ணக்கருக்கமைய வருமான மொன்று ஓராண்டில் ஏற்பட்டு அதற்கான செலவு எதிர்வரும் இன்னுமொரு ஆண்டில் ஏற்பட்டாலும் கூட அதனையும் ஏற்பாடு செய்து நடப்பாண்டு வருமானத்திற்கு எதிராகக் காட்டப்பட வேண்டும்.

உ+ம்:- i. பெறுமானத் தேய்வு
ii. ஐயக்கடன் ஏற்பாடு
iii. விற்பனையும், விற்பனைத் தரகும்

ஐயக்கடன், பெறுமானத்தேய்வு என்பன பாதுகாப்பு எண்ணக்கருவுக்கு அமையவே ஏற்பாடு செய்யப்பட்டபோதிலும் இவ் இணைத்தல் எண்ணக்கருவிற்கமை வாகவே குறித்த ஆண்டின் வருமானத்திற்கு எதிராக செலவாகக் காட்டப்படும்.

06. அட்டுறு எண்ணக்கரு

Accrual Concept

(சேர்மதி எண்ணக்கரு)

குறிப்பிட்ட ஆண்டில் உழைக்கப்பட்ட வருமானம் ஏற்பட்ட செலவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும் என்பதை இவ் எண்ணக்கரு கூறுகின்றது.

அதாவது பெற்றதுடன் பெற வேண்டிய வருமானங்களும் கொடுத்ததுடன் கொடுக்க வேண்டிய செலவீனங்களும் கருத்திற் கொள்ளப்படும்.

உ+ம்:-

i. வாடகை செலுத்தியது 10,000/= சென்மதி 2000/= எனின் இலாப நட்டக் கணக்கில் 12,000/= எனக் காட்டல்.

ii. ஐந்தொகையில் கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் மீதிகள் காட்டப்படல்.

07. தேறல் எண்ணக்கரு

Realization Concept

(கைக்கெட்டிய எண்ணக்கரு, வருமானக் கோட்பாட்டு எண்ணக்கரு)

பொருட்கள் எக்காலப்பகுதியில் விற் பனை செய்யப்பட்டதோ அவை அக்காலப் பகுதிக்குரிய வருமானமாகக் கருதப்பட்டு கணக்குகளில் வைப்புக்கள் இடம்பெற வேண்டுமென இவ் எண்ணக்கரு கூறுகின் றது.

அதாவது விற்கப்பட்ட பொருட்கள் அனுப்பப்படும் வரையோ அல்லது அதற்கான பணம் கிடைக்கப்பெறும் வரையோ காத் திருக்காமல் அவை விற்பனை இடம்பெற்ற திகதிலேயே வருமானமாகக் காட்டப்பட வேண்டும்.

உ+ம்:-

I. ஜனவரி மாதத்தில் விற்பனைசெய்தது (பணம்) மார்ச் மாதத்தில் பெறப்படு மாயின் ஜனவரிமாதக் கணக்குகளில் விற்பனையாகக் காட்டப்படும்.

08. பாதுகாப்பு எண்ணக்கரு

Prudence Concept

(முன்னெச்சரிக்கை எண்ணக்கரு, குறைத்துக் கூறும் எண்ணக்கரு, கூர்ந்த மதி எண்ணக்கரு, செயலறிவு எண்ணக்கரு, புத்திக்கூர்மை எண்ணக்கரு)

நிறுவனங்கள் இலாபங்கள், வரு மானங்கள் என்பவற்றினை எதிர்பார்த்து ஒரு போதும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப் படக்கூடாது என இவ் எண்ணக்கரு கூறுகின் றது. இவ் எண்ணக்கருவிற்கமைய இலாபங் கள், வருமானங்களைக் கணக்குகளில் காட்டுவதாயின் அவை காசாகத் தேறியிருத் தல் வேண்டும் அல்லது தேறக்கூடிய சொத்து வடிவில் காணப்படுவதுடன் அதன்

பெறுமதியும் மதிப்பீடு செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும். ஆனால் பொறுப்புக் களிற்கு தொகை சரியாகத் தெரியாவிடினும் கிடைக்கக் கூடிய தகவல்களைக் கொண்டு அதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

உ+ம்:-

i. வரையறுத்த நிசா கம்பனி நிதிக் கூற்றுக்களில் ஐயக்கடன் ஏற்பாடாக 150,000/= உள்ளடக்கப்படல்.

ii. வியாபாரத்திற்கு எதிராக வழக் கொன்று போடப்பட்டது. நிறுவன வழக்கறிஞர், இந்த வழக்கில் தோல்வி யடைவதற்கான சாத்தியக்கூறு அதிகம் இருப்பதாக நம்புகின்றார். ஆரம்ப ஏற்பாடு செய்தல் வேண்டும்.

09. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு

Historical Cost Concept

(கிரய எண்ணக்கரு)

நிலையான சொத்துக்கள் எவ்விலை யில் பெறப்பட்டதோ அவ் விலையிலேயே தொடர்ந்து பேணப்பட வேண்டும் என இவ் எண்ணக்கரு கூறுகின்றது. இதற்கமைய கால மாற்றங்களினால் சொத்தின் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களைக் கருத்திற்கொள்ளா மல் கணக்கு வைப்புக்கள் காணப்படும்.

நன்மைகள்

1. நிலையான சொத்துக்களினை உண்மைப் பெறுமதியில் காட்டும்.
2. நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத் தேய்வு செய்வது இலகு.

தீமைகள்

1. காலம் செல்லச் செல்ல நிலையான சொத்தின் பெறுமதி குறைந்து செல்வது வெளிப்படாது.
2. பணக்கொள்வனவு சக்தி மாறுபடும் போது நிலையான சொத்தின் சரியான பெறுமதி வெளிப்படாது.

உ+ம்:-

i. இயந்திரக் கொள்விலை 150,000/= சந்தைவிலை 200,000/= எனின் 150,000 ஐந்தொகையில் காண்பிக் கப்படும்.

ii. கம்பனி 2 வருடங்களுக்கு முன்பு 100,000/= கொள்வனவு செய்த காணித்துண்டொன்றை 10,00,000/= விற்பனை செய்யுமாயின் 900,000/= க்கு தேறாத இலாபமாகையால் இலாப மாகக் காட்ட முடியாது தொடர்ந் தும் 100,000/= கணக்குகளில் பேண வேண்டும்.

10. தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கிய எண்ணக்கரு.

Substance Over Form Concept

நடவடிக்கைகளினை நிதிக்கூற்றுக் களில் காட்டும் போது அதன் உள்ளார்ந்த தன்மைக்கே முக்கியம் வழங்கி கணக்கு வைப்புக்கள் இடம்பெற வேண்டும் என இவ் எண்ணக்கரு கூறுகின்றது.

இங்கு தோற்றம் என்பது சட்ட உடன் பாடு ஆகும். கருத்து என்பது தற்போது உள்ள நிலையினைக் குறிக்கும்.

உ+ம்:- குத்தகையடிப்படையில் ஒரு சொத்து பெறப்பட்டு இருப்பின் அதன் உடமை குத்தகைக்கு...

11. கொள்கை மாறாமை எண்ணக்கரு

Consistency Concept

(பழமை பேணல் எண்ணக்கரு, மாறாநிலை எண்ணக்கரு)

நிறுவனம் தனது செயற்பாட்டுக் காலங்களில் தனது கொள்கைகளை அடிக்கடி மாற்றக்கூடாது என இவ் எண்ணக் கரு கூறுகின்றது. ஏனெனில் இக் கொள்கை

மாற்றங்கள் கூட நிறுவனத்தின் பெறுபேறில் செல்வாக்குச் செலுத்தும். கொள்கைகள் அடிக்கடி மாற்றப்படுமாயின் கடந்தகால பெறு பேறுகளினை நிகழ்கால பெறுபேறுகளுடன் ஒப்பீடுசெய்து சிறந்த முடிவுகளைப் பெறமுடி யாது. கொள்கையினை மாற்றுவதாயின் புதிய கொள்கையினை பின்பற்றுவதனால் ஏற்படுகின்ற நன்மைகளினை நியாயப் படுத்துவதுடன் அவை தொடர்பான ஒரு முழுமையான வெளிப்படுத்தல்களும் வேண்டப்படும்.

உ+ம்:–

i. பெறுமானத்தேய்வு நேர்கோட்டு முறையிலிருந்து ஒடுங்குபாகை முறைக்கு மாற்றப்படல்

ii. இருப்பு மதிப்பீட்டுக் கொள்கை

12. ஆவர்த்தன எண்ணக்கரு

(Period Concept)

(காலநேர எண்ணக்கரு)

நிதிக்கூற்றுக்களினைப் பயன்படுத்து கின்ற நபர்களுக்குத் தேவையான தகவல் களினை ஒரு ஒழுங்கான கால இடைவெளி யில் தயாரித்து வழங்கப்படல் வேண்டும் என இவ் எண்ணக்கரு கூறுகின்றது. இதற்கமைய நிறுவனங்கள் பொதுவாக 12 மாதங்களுக்கு மான வருமானங்கள், செலவுகள் தொடர் பான விடயங்களினை 12ஆம் மாத முடிவி லும், அத் தினத்தில் காணப்படுகின்ற நிதி நிலைமைகள் தொடர்பான விபரங்களையும் தயாரித்து வழங்குகின்றது. மேலும் பல்வேறு காரணிகள் நிதிக்கூற்றின் கால வரையினை தீர்மானிக்கின்றது.

1. இலங்கை கணக்கீட்டு நியமங்கள்
2. 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டம்
3. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிக்கொள்கை

உ+ம்:–

1. கிரிஸ் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் 31ஆம் திகதி இறுதி மாதத்தில் ஒவ் வொரு வருடமும் தயாரிக்கப்படும்.

13. இரட்டை விளைவு எண்ணக்கரு.

Dual Aspect Concept

ஒரு வியாபார நடவடிக்கைக்கு இரு விளைவுகள் காணப்படும் அவையாவன.

1. வரவு விளைவு
2. செலவு விளைவு

இவ் இரட்டைப்பதிவு அடிப்படையி லேயே கணக்கு வைப்புக்கள் பேணப்படுகின் றன. நிறுவனத்தின் வளங்கள் சொத்துக்கள் என அழைக்கப்படுவதுடன் இச் சொத்துக் களுக்கெதிரான கோரிக்கைகள் உரிமைகள், பொறுப்புக்கள் என அழைக்கப்படுகின்றன. இதற்கமைய,

சொத்துக்கள் = உரிமை + பொறுப்புக்கள்

உ+ம்:–

i. உரிமையாளரின் தனது சொந்த தேவைக்கென காசு பற்றும் போது சொத்து மூலதனம் குறையும்

- கணக்கீட்டுச் சமன்பாடுடன் தொடர்பு டைய 02 எண்ணக்கருக்கள்
  - ➢ அலகுசார் எண்ணக்கரு
  - ➢ இரட்டை விளைவு எண்ணக்கரு

- ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்வதுடன் தொடர்புபடும் 02 எண்ணக்கருக்கள்
  - ➢ பாதுகாப்பு எண்ணக்கரு
  - ➢ இணைத்தல் எண்ணக்கரு

காசு அடிப்படையிலான கணக்குகளைத் தயாரிக்கும்போது மீறப்படும் எண்ணக்கரு

- அட்டுறு எண்ணக்கரு

நடைமுறையல்லாச் சொத்து ஐந்தொகையில் கிரயத்தில் காட்டப்படாமல் தேறிய புத்தகப் பெறு மதியில் இருப்பதால் மீறப்படும் எண்ணக் கரு

- வரலாற்றுக்கிரய எண்ணக்கரு

சொத்தொன்றை சொத்தாக ஏற்பிசைவு செய்வதற்கு பூர்த்திசெய்ய வேண்டிய எண்ணக்கரு

- இணைத்தல் எண்ணக்கரு
- பாதுகாப்பு எண்ணக்கரு
- பொருண்மை எண்ணக்கரு
- பண அளவீட்டு எண்ணக்கரு

உசாத்துணை நூல்:

New Accounting Serial II

ஒரு புத்தகத்தை திறக்கும் போது உலகினை நோக்கிய ஒரு யன்னலை திறக்கிறோம்.

சேவை செய்பவனிடம் வேற்றுமை கிடையாது

முரண்பாடுகள் இல்லாமல் வாழ்க்கை இல்லை.

நல்லெண்ணம் நற்செயலை உருவாக்கும்.

தன்னடக்கம் தலைசிறந்த குணம்.

பிரசுர முடிவுக் கணக்கும் விசாலமான வருமானமும்

பா.யுனெக்ஸ் றொணசியா
A/L com (2014)

புதிய இலங்கை கணக்கீட்டு நியமத் திற்கமைய (LKAS -1) முன்பு நாம் தயாரித்த நிதிக் கூற்றுக்களுடன் விசாலமான வருமானத்தையும் சேர்க்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் காலங்களில் க.பொ.த(உ/த) பரீட்சை வினாப்பத்திரத்திலும் இது இடம்பெறக் கூடும் என்பதால் அதை மட்டும் இங்கு கருத்தில் கொள்கிறேன்.

விசாலமான வருமானம் (Comprehensive Income)

வழமையாக வருமானக்கூற்றில் உள்ளடங்காத வருமானம் மற்றும் செலவுகள் விசாலமான வருமானமாகும். LKAS இன்படி இதில் அடங்கும் விடயங்கள் ஆவன

1. மீள்மதிப்பீட்டுத் தாக்கம் (LKAS – 16,38)
2. தொழிலாளர்களுக்கான அனுகூலங்கள் தொடர்பான மதிப்பீட்டுத் தாக்கம் (LKAS19)
3. வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கான தாக்கம் (LKAS- 21)
4. நிதி உபகரணங்களை அங்கீகரித்தலும் அளவீடு செய்தலும் தொடர்பில் நிதிச் சொத்துக்களின் விற்பனைக்கான மீள் மதிப்பீட்டுத் தாக்கம் (LKAS – 39)
5. காசுப்பாய்ச்சலில் எல்லைப்படுத்தல் தொடர்பாக எல்லைப்படுத்தல் உப காரணங்களில் ஏற்பட்ட தாக்கம் (LKAS -39)

விசாலமான வருமானக்கூற்று

உரிமையாளரின் தலையீடு இல்லாத விடயங்களால் உரிமையாண்மையில் தாக்கம் ஏற்படுத்தும் விடயங்களைக் கொண்டு தயாரிக்கும் வருமானக் கூற்று விசாலமான வருமானக் கூற்று ஆகம்.

விசாலமான வருமானக்கூற்றின் மாதிரி

வரையறுத்த XYZ கம்பனியின் 31.03.2013ல் முடிவடைந்த ஆண்டிற்கான விசாலமான வருமானக்கூற்று

விபரம்	குறிப்பு	ரூபா (மில்லியன்)
விற்பனை		x
விற்பனைக் கிரயம்		(x)
மொத்தலாபம்		x
ஏனைய செயற்பாட்டு வருமானம்	01	x
		x
விநியோகச் செலவுகள்		(x)
நிர்வாக செலவுகள்		(x)
நிதிச் செலவுகள்		(x)
ஏனைய செயற்பாட்டு செலவு		(x)
வரிக்கு முன் லாபம்	02	x
வருமான வரி		(x)
இந்தாண்டிற்கான இலாபம்		y
விசாலமான வருமானம்		x
மொத்த விசாலமான வருமானம்		z

- உரிமை அசைவுக் கூற்றிற்கு இந்தாண்டிற்கான இலாபமே (Y) மாற்றப்படும்
- க.பொ.த (உ/த) பரீட்சையைப் பொறுத்த வரை விசாலமாக வருமானத்தில் மறுமதிப்பீட்டு மிகை அல்லது குறை மட்டுமே இடம்பெறக் கூடும்.

நிதி நிலைக்கூற்றின் மாதிரி

வரையறுத்த XYZ கம்பனியின் 31.03.2013ல் நிதிநிலைக் கூற்று

நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதனம், பொறி, உபகரணம்	03		X
முதலீடுகள்			X
ஏனைய நிதிச் சொத்துக்கள்			X
நடைமுறைச் சொத்துக்கள்			
கையிருப்பு		X	
வியாபார கடன்பட்டோர்		X	
பங்கு நிலுவை		X	
ஏனைய வருமதிகள்		X	
முற்பணக் கொடுப்பனவுகள்		X	
காசும், காசுக்கு சமனானவையும்		X	X
			X
கூறப்பட்ட மூலதனம்		X	
ஒதுக்கங்கள்			
மறுமதிப்பீட்டு மிகை		X	
பொது ஒதுக்கம்		X	
பகிரப்படாத லாபம்		X	
ஏனைய ஒதுக்கங்கள்		X	X
நடைமுறையல்லா பொறுப்புக்கள்			
தொகுதிக் கடன்கள்		X	
வங்கிக் கடன்கள்		X	
ஏனைய கடன்கள்		X	X
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வியாபார கடன் கொடுத்தோர்		X	
குறுங்காலக் கடன் பெறுவனவு		X	
முற்பண வருமானங்கள்		X	X
			X

உரிமை அசைவுக் கூற்றுமாதிரி

வரையறுத்த XYZ கம்பனியின் 31.03.2013ல் முடிவடைந்த ஆண்டுக்கான
உரிமை அசைவுக் கூற்று

விபரம்	கூறப்பட்ட மூலதனம்		மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	பொது ஒதுக்கம்	பகிரப்படாத இலாபம்	மொத்தம்
	சாதாரண பங்கு	முன்னுரிமை பங்கு				
ஆரம்ப மீதி	X	X	X	X	X	X
இந்தாண்டு லாபம்					X	X
ஒதுக்கங்களுக்கு மாற்றல்				X	(X)	-
பங்குலாபம் வழங்கல்					(X)	(X)
பங்கு வழங்கல்	X					X
உபகார வழங்கல்	X		(X)			
மீள் மதிப்பீட்டு மிகை			X			X
	X	X	X	X	X	XX

குறிப்புகள்

01 ஏனைய செயற்பாட்டு வருமானம்

முதலீட்டு வருமானம்	X
சொத்து விற்பனை இலாபம்	X
	X

02 வரிக்கு முன் இலாப கணிப்பீட்டில் பின்வரும் செலவுகளும கருத்தில் கொள்ளப்பட்டன.

ஆதனம், பொறி, உபகரண தேய்வு	X
ஆதனம், பொறி உபகரண நன்கொடை	X
சொத்து முடிவுசெய்தல் நட்டம்	X
இயக்குனர் கொடுப்பனவுகள்	X
கணக்கீட்டு செலவுகள்	X
முகாமைக் கட்டணம்	X
குத்தகையிலாதனக் கழிவு	X
அசாதாரண விடயங்கள்	X

விபரம்	காணி கட்டிடம்	பொறி	மோட்டார் வாகனம்	அலுவலக உபகரணம்	தளபாடம்	மொத்தம்
கிரயம்						
ஆரம்ப மீதி	X	X	X	X	X	X
கொள்வனவு	X	X	X	X	X	X
முடிவு செய்தல்	(X)	(X)	(X)	(X)	(X)	(X)
மறுமதிப்பு	X	X	X	X	X	X
	X	X	X	X	X	X
ஏற்பாடு						
ஆரம்பம்	X	X	X	X	X	X
நிகழாண்டு	X	X	X	X	X	X
முடிவு செய்தல்	(X)	(X)	(X)	(X)	(X)	(X)
	X	X	X	X	X	X
	X	X	X	X	X	X

உசாத்துணை :

இலங்கை பட்டயக் கணக்கறிஞர்
நிறுவனத்தின் கற்கை நெறிகள்
பிரிவு CBA 01

இடமிருந்து வலம்

1. பதிப்புரிமை
2. காசு
3. சக்தி
4. வணிகம்
5. நிதி
6. அதிகாரம்
7. நட்டம்
8. கையளிப்பு

குறுக்கெழுத்து

எ.சிரோமினி
யோ.சுமிர்தா
A/L com (2014)

மேலிருந்து கீழ்

1. பணநிரம்பல், பணவீக்கம் தொடர்பான அரச கொள்கை (6)
12. காசோலையின் அடியிதழில் காணப்படக்கூடியது (3)
13. அமைப்பின் எதிர்பார்த்த விளைவு (4)
14. March 15ம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச தினம் (8)
15. கணக்கீட்டு வெளியீடாக கருதப்படக்கூடியது (4) (குழம்பியுள்ளது)
16. முகாமைத்துவத்தின் மையம் (4)
17. திட்டமிடுதலின் பெறுபேறு (4) (குழம்பியுள்ளது)

கீழிருந்து மேல்

07. தொட்டுணர முடியாத சொத்தாக கருதப்படக்கூடியது (6) (குழம்பியுள்ளது)
11. சொத்துக்களிற்கு பண இழப்பை ஏற்படுத்தக்கூடிய சம்பவம் (குழம்பியுள்ளது) (3)
18. சிறு வணிகத்திற்கு வழங்கப்படும் கடன் திட்டங்களில் ஒன்று (3) (குழம்பியுள்ளது)
19. பேச்சு ஆற்றல் அற்றவர்களுடன் தொடர்பு கொள்ள உதவுவது (2)



இடமிருந்து வலம்

1. பாதுகாக்க வேண்டிய விவேகச் சொத்து (6)
2. குறுங்கால முதலீட்டுத் தீர்மானங்களில் ஒன்று (2)
3. போக்குவரத்தின் அடிப்படை அம்சம் (குழம்பி) (3)
4. கைத்தொழில் + வர்த்தகம் (4)
5. வணிகம் ஒன்றின் செயற்பாட்டிற்கு தேவையான பணம் (2)
6. முகாமையாளரை இதன் அடிப்படையில் வகைப்படுத்தலாம் (5)
7. மொத்த செலவை விட மொத்த வருமானம் குறைவாக காணப்படல் (4)
8. ஒழுங்கமைத்தல் தத்துவங்களில் ஒன்று (குழம்பி) (5)

வலமிருந்து இடம்

9. பாவனைக்குரிய நாணய அலகு (2)
10. வணிகத்துடன் தொடர்புடைய பிரதான சூழல் காரணி (5)
11. சந்தைப்படுத்தல் கலவையின் 4P களில் ஒன்று (3)

ஞானம் வளர நல்ல ஆசான் வேண்டும்

உன் கண்கள் தான் உன் உடலுக்கு விளக்கு

வார்த்தைகள் இதயத்தில் இருந்து வரவேண்டும்

இறைவன் கையில் நீ ஒரு கருவி

விகிதங்கள் மூலம் நிதிக்கூற்றுக்களை பகுப்பாய்வு செய்தல்

அ.வசந்தினி
A/L com (2014)

இரு கணக்கீட்டு தகவல்களுக்கு இடையிலான தொடர்பினை அளவீடு செய்வதுடன் தொடர்புடைய அளவு கோலினையே கணக்கீட்டுவிகிதம் எனலாம்.

அதாவது நிதிக் கூற்றுக்களில் உள்ள தகவல்களின் / தகவல் தொகுதிகளின் தொடர்பினை மதிப்பீடு செய்து அறிக்கை இடும் செயற்பாடாகும் நிறுவனத்தின் நடத்தை பற்றிய ஆய்வு புள்ளிவிபரஆய்வு என்பவற்றுக்கு கணக்கீட்டு விகிதப் பகுப்பாய்வினை பயன்படுத்திக் கொள்ளலாம்.

கணக்கீட்டு விகிதாசாரங்களில் அக்கறை கொள்ளும் தரப்பினர்களாக பின்வருவோரை குறிப்பிடலாம்

உரிமையாளர் / பங்குதாரர்
கடன் கொடுத்தோர்
ஊழியர்
போட்டியாளர்கள்
நீண்டகாலகடன்வழங்கும்நிறுவனங்கள்

கணக்கீட்டு விகிதங்களில் இருந்து நிறுவனங்களில் அக்கறை கொண்டுள்ளோர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் பின்வருமாறு

- நிதிக்கூற்றுக்களை இலகுவில் விளங்கக் கூடிய வகையில் வெளிப்படுத்தல்
- ஒப்பீட்டுத் தன்மையினை மேம்படுத்தல்
- முகாமை கருமங்களுக்கு வழிகாட்டியாக அமைதல்
- தகவல்களை தொடர்புபடுத்துவதன் மூலம் வழிகாட்டல்
- தகவல்களைப் பெறுதல்
- நிதி நிலமையின் வினைத்திறனை வெளிப்படுத்தல்

நிறுவனங்களில் அக்கறை கொண்டுள்ள நபர்களின் நோக்கங்களுக்கும் பயன் படுத்தப்படும் தகவல்களுக்கேற்ப கணக்கீட்டு விகிதங்களை பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ளமுடியும்

இலாபத்தன்மை விகிதம்
திரவத் தன்னை விகிதம்
நிதியின் நிலைத்தன்மை விகிதம்

இலாபத்தன்மை விகிதங்கள்

முதலீட்டாளவுகள் நிறுவனங்களில் முதலீடு செய்வதன் நோக்கம் நமது முதலீட்டின் வாயிலாக இலாபம் என்ற மிகையினை பெறுவதே ஆகும் இதன் மூலம் நிறுவனங்களின் இலாபத்தன்மை என்பது நிறுவனங்களினால் இலாபத்தினை உழைக்கக்கூடிய இயலுமை ஆகும்.

நிறுவனத்தில் இலாபத்தன்மையினை மதிப்பீடு செய்ய பின்வரும் விகிதங்கள் பயன்படுத்தப்படுகின்றது.

- மொத்த இலாப வீதம்
- தேறிய இலாப வீதம்

- மொத்த சொத்துக்கள் மீதான வருவாய் வீதம்
- உரிமை (மூலதனத்தின்) மீதான வருவாய் வீதம்
- முதலீட்டுக்கான உழைப்பு வீதம்
- பங்குதாரர் முதல் மீதான வருவாய வீதம்

திரவத் தன்மை விகிதங்கள்

நிறுவனங்களின் குறுங்காலக் கடன்களை உரிய தவணையில் கொடுப்பனவு செய்யக்கூடிய ஆற்றலினையும் நிறுவனம் தாம் பெற்ற கடனை குறித்த காலத்தில் கொடுத்து தீர்க்க வேண்டிய ஆற்றலினையும் புலப்படுத்தும் வகையில் கணிப்பீட்டுக் கொள்ளும் விகிதங்கள் திரவத்தன்மை விகிதங்கள் ஆகும்.

நிறுவனங்களின் திரவத்தன்மையினை மதிப்பீடு செய்ய பின்வரும் விகிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன

- நடைமுறை விகிதம்
- விரைவு விகிதம்
- கடன்பட்டோர் புரள்வு விகிதம்
- கடன்பட்டோரிடம் இருந்து பணம் சேகரிக்கும் காலம்
- கடன்கொடுத்தோர் புரள்வு விகிதம்
- கடன் கொடுத்தோருக்கு பணம் செலுத்தும் காலம்
- இருப்பு புரள்வு விகிதம்
- இருப்பு பேணும் காலம்

நிதியின் நிலைத் தன்மை விகிதம்

நிறுவனங்களின் நீண்டகால நிதி உறுதிப்பாட்டினையும் மூலதனக் கட்டமைப்பினையும் மதிப்பாய்வு செய்வதற்கு பயன்படுத்தப்படும் விகிதங்கள் நிதியின் நிலைத் தன்மை விகிதம் ஆகும்.

நிதியின் நிலைத்தன்மையினை மதிப்பீடு செய்ய பின்வரும் விகிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன

கடன் விகிதம்
உரிமை விகிதம்
கடன் உரிமை விகிதம் / இணைப்பு விகிதம்
வட்டிக் காப்பு விகிதம்
மொத்த சொத்து புரள்வு விகிதம்

இதனை பின்வரும் உதாரணங்கள் மூலம் கணிப்பிடலாம்.

வரையறுக்கப்பட்ட லங்கா பொதுக்கம்பனியின் கணக்குகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு

வருமானக்கூற்று

விற்பனைகள்		5000
விற்பனைக்கிரயம்		(3000)
மொத்த இலாபம்		2000
செயற்பாட்டுச் செலவுகள்	800	(800)
வட்டிக்கு முன் தேறிய இலாபம்		1200
வட்டி	200	(200)
வரிக்கு முன் தேறிய இலாபம்		1000
வருமானவரி	300	(300)
வரிக்கு பின் தேறிய இலாபம்		700

நிதிநிலைக்கூற்று

நடைமுறை அல்லாத சொத்துக்கள்		
காணி கட்டிடம்		4300
நன்மதிப்பு		300
நடைமுறைச் சொத்துக்கள்		
இறுதி இருப்பு	1000	
கடன்பட்டோர்	2500	
காசும் வங்கியும்	500	4000
		9000
கூறப்பட்ட மூலதனம்		
சாதாரணபங்கு மூலதனம்		3500
ஒதுக்கங்கள்		
பொது ஒதுக்கம்	1000	
இலாப நட்ட கணக்கு மீதி	1500	2500
நடைமுறை அல்லா பொறுப்பு		
10% தொகுதிக்கடன்		200
நடைமுறை பொறுப்புக்கள்		
கடன் கொடுத்தோர்	800	
அட்டுறுச்செலவுகள்	200	1000
		9000

குறிப்பு : விற்பனை அனைத்தும் கடனுக்கே மேற்கொள்ளப்பட்டது

வேண்டப்படுவது : நிதிநிலைமை பகுப்பாய்வு செய்வதற்கான விகிதங்கள்

இலாபத்தன்மை விகிதங்கள்

மொத்த இலாப விகிதம் $= \frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$

$= \frac{2000}{5000} \times 100$

$= 40\%$

தேறிய இலாப விகிதம் $= \frac{\text{தேறிய இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$

$= \frac{1000}{5000} \times 100$

$= 20\%$

முதலீட்டுக்கான திரும்பல் விகிதம் $= \frac{\text{வரிக்கு பின் தேறிய இலாபம்}}{\text{மொத்த சொத்து}} \times 100$

$= \frac{700}{9000} \times 100$

$= 7.78\%$

உரிமைமூலதன திரும்பல் விகிதம் $= \frac{\text{வரிக்கு பின் தேறிய இலாபம்}}{\text{உரிமை மூலதனம்}} \times 100$

$= \frac{700}{6000} \times 100$

$= 11.67\%$

திரவத்தன்மை விகிதங்கள்

நடைமுறை விகிதம் $= \frac{\text{நடைமுறைச் சொத்து}}{\text{நடைமுறைப் பொறுப்பு}}$

$= \frac{4000}{100}$

$= 4.1$

விரைவு விகிதம் $= \frac{\text{திரவச் சொத்து}}{\text{நடைமுறைப் பொறுப்பு}}$

$= \frac{3000}{1000}$

$= 3.1$

சரக்கிருப்பு புரள்வு விகிதம் $= \frac{\text{விற்பனைக் கிரயம்}}{\text{சராசரி கையிருப்பு}}$

$= \frac{3000}{1000}$

= 3 தடவை

இருப்பு சுழற்சி விகிதம் $= \frac{365}{\text{இருப்பு புரள்வு விகிதம்}}$

$= \frac{365}{3/1}$

= 121.67 நாட்கள்

கடன்பட்டோர் புரள்வு விகிதம் $= \dfrac{\text{கடன் விற்பனை}}{\text{சராசரி கடன்பட்டோர்}}$

$= \dfrac{5000}{2500}$

= 2 தடவை

சராசரி கடன் சேகரிப்புக் காலம் $= \dfrac{365}{\text{கடன்பட்டோர் புரள்வு விகிதம்}}$

$= \dfrac{365}{2}$

= 182.5 நாட்கள்

நிதியின் நிலைத்தன்மை விகிதங்கள் $= \dfrac{\text{மொத்த விற்பனை}}{\text{மொத்த சொத்து}}$

$= \dfrac{5000}{9000}$

= 0.56 தடவை

வட்டிக் காப்பு விகிதம் $= \dfrac{\text{வரிக்கு முன் இலாபம்} + \text{வட்டி}}{\text{வட்டி}}$

$= \dfrac{1000 + 200}{200}$

$= \dfrac{1200}{200}$

= 6 தடவை

2012 ஜனவரி மாதம் தொடக்கம் இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் பரீட்சைகளுக்கு பிரயோகிக்கப்படும் கணக்கீட்டு நியமங்கள்

செ.குபேதினி
A/L com (2014)

கணக்கீட்டு நியமங்களின் மீளாக்கம்

கணக்கீட்டு நியமங்கள் வியாபாரத் துறையில் ஏற்படும் மாற்றங்களிற்கு ஏற்ப காலத்திற்குக் காலம் மீளாக்கம் செய்யப்படுகின்றன. பூகோள ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படும் இணக்கப்பாட்டினை அடையும் பொருட்டு பொதுவாகவும் பூகோள ரீதியாகவும் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள அவ்வாறான நியமங்களை ஒரு நாட்டில் ஏற்றுக் கொள்வதற்கான சாத்தியம் மிகவும் அவசியமானதாகும். 2012 ஜனவரி 1ம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை மீளாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் மேற்கொண்டுள்ளது. 2012 ஜனவரி 01ம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் இந்த நியமங்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLRS) என பெயரிடப்பட்டுள்ளன.

1987ம் ஆண்டில் சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் குழுவானது (தற்போது சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் சபை என அழைக்கப்படும்) அப்போது நிலவிய புற நிலைகளுக்கமைய அப்போதிருந்த கணக்கீட்டு நியமங்களை சர்வதேச கணக்கீட்டு அறிக்கையிடல் நியமங்களாக கடைப்பிடிக்கத் தீர்மானித்தது. 2008ம் ஆண்டின் மட்டில் 100 நாடுகள் சர்வதேச நிதி பிரகடனப்படுத்தின் or அவற்றுடன் ஒத்திசைவதற்கான தேர்வு உரிமையினை அமைந்திருந்தன.

2012 ஜனவரி 01ம் திகதியில் இருந்து நடைமுறைக் வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் நோக்கம் நிறுவனமொன்றின் நிதிக் கூற்றினை சீர்மதிப்புக் கணக்கீட்டின் (Fair Value) அடிப்படையில் தயாரிப்பதன் மூலம் சிறந்த தோற்றப்பாட்டினை முன்னிலைப்படுத்துதல் ஆகும். தற்போது கணக்கீடு வரலாற்றுக்கிரய அடிப்படையில் மேற்கொள் எப்படுவதுடன் ஆண்டொன்றின் இறுதியில் உரிமமொன்றின் உண்மையான நிலைமை இந்த வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்க ளில் இருந்து தீர்மானிக்கப்பட முடியாதென்பதனை நாம் அறிவோம். அதற்கான காரணம் சொத்துக்களும் பரிப்புக்களும் வரலாற்றுக் கிரய அடிப்படையில் காட்டப்படுவதாகும். புதிய நியமங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சொத்துக்களும் பரிப்புக்களும் அவற்றின் சீர்மதிப்புகளில் காட்டப்படுகின்றன.

புதிய இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் 2012 ஜனவரி 01ம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருகின்றன.

மார்ச் 31ம் திகதியில் முடிவடையும் காலங்களுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் நிறுவனங்கள் புதிய கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவான அவற்றின் முதலாவது நிதிக்கூற்றுக்களை 2012/2013

இனால் அடக்கப்படும் ஆண்டிற்கு அதாவது 2012 ஏப்ரல் 01ம் திகதி முதல் 2013 மார்ச் 31ம் திகதி வரையான ஆண்டு காலத்திற்கு தயாரிக்கப்படுகின்றது. டிசம்பர் 31ம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் நிறுவனங்கள் புதிய கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவான அவற்றில் முதலாவது நிதிக்கூற்றுக் களை தயாரிக்கும் நிதிக்கூற்றுக்களை 2012ம் ஆண்டிற்கு அதாவது 2012 டிசம்பர் 31ம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்கு தயாரிக்கும்.

2012 ஜனவரி 01ம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் 37 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் உள்ள அதேவேளை அவற்றுள் 08 நியமங்கள் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களின் அடிப்படையில் அமைவதனால் அவை இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் எனவும் எஞ்சிய 29 நியமங்களும் சர்வதேச கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதன் காரணமாக இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) எனவும் அழைக்கப்படுகின்றன. SLFRS மற்றும் இரண்டும் இலங்கை கணக்கீட்டு நியமங்களாக அடையாளம் காணப்படுகின்ற போதிலும் அவற்றின் தோற்றுவாய் பற்றிய எண்ணத்தினை வாசகர்களிற்கு வழங்கும் பொருட்டு அவை இரு வேறு பெயர்களினால் அழைக்கப்படுகின்றன. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பற்றிய கீழ்வரும் குறிப்பினை வாசித்து அறிய முடிகின்றது.

2012 ஜனவரி 1ம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

இலங்கை நிதியறிக்கையிடல் நியமங்கள்

- SLFRS 1 – இலங்கை கணக்கீட்டு நியமங்களின் முதற்தடவை யான கடைப்பிடிப்பு
- SLFRS 2 – பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு
- SLFRS 3 – வியாபார இணைப்புக்கள்
- SLFRS 4 – காப்புறுதி ஒப்பந்தங்கள்
- SLFRS 5 – விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்களும் முடிவுக்கு கொண்டு வரப்படும் தொழிற்பாடுகளும்
- SLFRS 6 – கனிப்பொருள் வளங்களின் அகழ்வாய்வும் மதிப்பீடும்
- SLFRS 7 – நிதிச் சாதனங்கள் வெளிக் காட்டல்கள்
- SLFRS 8 – தொழிற்பாட்டுப் பிரிவுகள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

- A/L-LKAS 1 – நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்
- A/L-LKAS 2 – தொக்குகள்
- A/L-LKAS 7 – காசுப்பாய்ச்சல் கூற்று
- A/L-LKAS 8 – கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்
- A/L-Lkas 10 – அறிக்கையிடல் காலத்திற்கு பிந்திய நிகழ்வு
- LKAS 11 – நிர்மான ஒப்பந்தம்
- LKAS 12 – வருமான வரிகள்
- A/L-LKAS 16 – ஆதனம், பொறி, உபகரணம் பெறுமானத் தேய்வு
- A/L-LKA 17 – குத்தகைகள்
- LKAS 18 – வருமானம்
- LKAS 19 – ஊழியர் பயன்கள்
- LKAS 20 – அரச கொடைகளிற்கான கணக்கீடும், அரச உதவி

களின் வெளிக்காட்டல்

LKAS 21 – அந்நிய நாணயமாற்று விகிதங்களில் மாற்றங்களின் தாக்கம்

LKAS 23 – கடன் படுக்கைக் கிரயம்

LKAS 24 – உறவுமுறை சார்ந்தோர் வெளிக்காட்டல்கள்

LKAS 21 – அந்நிய நாணயமாற்று விகிதங்களில் மாற்றங்களின் தாக்கம்

LKAS 23 – கடன் படுக்கைக் கிரயம்

LKAS 24 – உறவுமுறை சார்ந்தோர் வெளிக்காட்டல்கள்

LKAS 26 – ஓய்வுபெறல் பயன்பாட்டு திட்டங்களின் படி அறிக்கைகளும் கணக்குகளும்

LKAS 27 – ஒன்றித்த மற்றும் வேறான நிதிக் கூற்றுக்கள்

LKAS 28 – கூட்டுக்கம்பனிகளின் முதலீடுகள்

LKAs 29 – உக்கிரமான பணவீக்க பொருளாதாரம் ஒன்றின் நிதி அறிக்கையிடல்

LKAs 31 – கூட்டுத் தொழில் முயற்சிகளின் நாட்டங்கள்

LKAs 32 – நிதிச் சாதனங்களை முன்னிலைப்படுத்தல்

LKAS 33 – பங்கு ஒன்றிற்கான வருவாய்

LKAs 34 – இடைக்கால நிதிஅறிக்கையிடல்

LKAS 36 – சொத்துக்களின் சேத இழப்பு

A/l LKAs 37 – ஏற்பாடுகள், உறப்புரிமைப் பொறுப்புக்கள் மற்றும் உறுப்புரிமைச் சொத்துக்கள்

LKAs 38 – அருவச் சொத்துக்கள்

LKAs 39 – நிதிச்சாதனங்களின் ஏற்பிசைவு

LKAS 40 – முதலீட்டு ஆதனம்

LKAs 41 – விவசாயம்

Note: க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு மேற் காட்டப்பட்ட 08 கணக்கீட்டு நியமங் கள் மட்டும் போதுமானது.

தற்போதுள்ள பரீட்சை பாடத்தின்படி உரிய கணக்கீட்டு நியமத்தின் பெயர்	2012 ஜனவரி 01ம் திகதியின் பின்னர் உரிய நியமத்தின் பெயர்
SLAS 03 – நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப் படுத்தல்	LKAS 01 – நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப் படுத்தல்
SLAS 09 – காசுப் பகுப்பாய்வுக் கூற்றுக்கள்	LKAS 07 – காசுப்பாய்வுக் கூற்றுக்கள்
SLAs 10 – கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்கீட்டு மதிப்பீடுகளில் மா்மங்கள் மற்றும் வழுக்கள்	LKAS 08 – கணக்கீட்டுக் கொள்கைகள் மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்
SLAs 12 – ஐந்தொகைத் திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்	LKAS 10 – அறிக்கையிடற் காலத்திற்கு பிந்திய நிகழ்வுகள்
SLAS 13 – நிர்மாண ஒப்பந்தங்கள்	LKAS 11 – நிர்மாண ஒப்பந்தங்கள்
SLAS 14 – வருமான வரிகள்	LKAS 12 – வருமான வரிகள்
SLAS 19 – குத்தகைகள்	LKAS 17 – குத்தகைகள்
SLAS 25 – வியாபார இணைப்புக்கள்	LKAS 23 – கடன்படுகைக் கிரயம்
SLAS 26 – ஒன்றித்த மற்றும் வேறான நிதிக் கூற்றுக்கள்	LKAS 03 – வியாபார இணைப்பு

SLAS 29 – வருமானம்

SLAS 36 – ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்

SLAS 37 – அருவச் சொத்துக்கள்

LKAS 27 – ஒன்றித்த மற்றும் வேறான நிதிக் கூற்று

LKAS 18 – வருமானம்

LKAS 37 – ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்

LKAS 38 – அருவச் சொத்துக்கள்

2012 January 01ம் திகதியிலிருந்து பிரயோகத்திற்கு வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

08. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRS)

↓

சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களின் (IFRS) அடிப்படையில் அமைந்தவை

29 – இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS)

↓

சர்வதேச கணக்கீட்டு நியமங்களின் (IAS) அடிப்படையில் அமைந்தவை

தற்போது பிரயோகிக்கப்படும் SLAS 03 மற்றும் 2012 January 01ம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட LKAS 01 ஆகிய இரண்டும் நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல் எனப் பெயரிடப்பட்ட போதிலும் இவை இரண்டிற்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன. மேலும் SLFRS 03 ஆனது SLAS 25 வியாபார இணைப்புக் களை பிரதியீடு செய்கின்ற போதிலும், அதே போல 2012 துயரெயசல 01ம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட LKAS 23 ஆனது தற்போதுள்ள SLAs 20 கடன்படுகைக் கிரயத்தினை பிரதியீடு செய்கின்ற போதிலும் அவை ஒவ்வொன்றிற்கும் இடையே பாரிய வேறுபாடுகள் உள்ளன.

மேலே கூறப்பட்டுள்ள கணிசமான வேறுபாடுகளைக் கொண்ட நியமங்களுக்கு அப்பால் தற்போது உபயோகிக்கப்படும் நியமங்களிற்கும் அவற்றிற்குப் பதிலாக நடைமுறைக்கு வரவுள்ள நியமங்களுக்கும் இடையே கணிசமான வேறுபாடுகள் எதுவும் இல்லை. எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் புதிய AATSL கற்கைப் பாடப் புத்தங்களில் பழைய கணக்கீட்டு நியமங்களுக்கு புதிய நியமங்களிற்கும் இடையேயான வேறுபாடுகள் விபரமாக ஆராயப்பட வுள்ளதுடன் அது வரையில் தற்போது நடைமுறையில் உள்ள உரிய கணக்கீட்டு நியமங்களே பரீட்சைகளில் பரீட்சிக்கப்படும்.

Refresh : S.L.பட்டயக் கணக்காளர் நிறுவன வெளியீடு
உயர் கணக்கீடு – 02 (Advance Accounting 2) Mr.K.B.Kajendran

பொருளியல்

J/HOLY FAMILY CONVENT
LIBRARY
DATE:-
NATIONAL SCHOOL JAFFNA.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியும் கல்வியும்

திருமதி.ஜெ.ஜெபநேசன்

அபிவிருத்தி என்பது சகல மக்களினதும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் செயன்முறையாகும். அதாவது மக்களின் வருமானம், நுகர்வு, சுகாதாரம், கல்வி போன்றன உயர்வதுடன் சுய கௌரவத்தை பேண உதவும் அரசியல் சமூக பொருளாதார சூழலையும் அதன் பொருட்டான தாபனக் கட்டமைப்பினையும் ஏற்படுத்தல் அபிவிருத்திச் செயன்முறையின் மிக முக்கிய அம்சங்களாகும். இது ஓர் பல்பரிமான (Multidimensional) எண்ணக்கருவாகும்.

இப்பொருளாதார அபிவிருத்தியினை ஓர் நாடு முன்னெடுக்கும் போது கல்விக்கும் மிகுந்த பொறுப்புண்டு என்பதனை யாவரும் அறிவர். அதே சமயம் கல்வி பொருளாதார அபிவிருத்தியினை செயற்படுத்தும் நேரத்தில் தனியாளினதும் சமூகத்தினதும் கலாசாரத்தினதும் அபிவிருத்திக்காக செயற்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு அபிவிருத்தியில் கல்வியின் பங்களிப்பு பேசப்பட்டு வருவதற்கு முக்கியமாக இரு காரணங்கள் உண்டு. அதில்
ஒன்று கல்வி ஓர் நுகர்வாக நோக்கப்படல்
இரண்டு கல்வி ஓர் முதலீடாக நோக்கப்படல் என்பனவாகும்.

அடம்ஸிமித் காலத்திலிருந்தே கல்விக்கும் பொருளியலுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது என கூறப்பட்டு வந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் கல்வியினை ஓர் நுகர்வாக கருதி வந்தனர். கல்வி தனியாளினை அலங்கரிக்கின்ற அழகுபடுத்துகின்ற ஆபரணத்தினை ஒத்திருந்தது என்றும் கல்வியின் மூலம் நடத்தை அபிவிருத்தி, அறவொழுக்க அபிவிருத்தி, ஆன்மீக அபிவிருத்தி, கலாசார அபிவிருத்தி, ஒழுக்கக் கட்டுப்பாடுள்ள நற்பிரஜைகளை உருவாக்கல் போன்ற நோக்கங்களினை நிறைவேற்றும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இதனால் மக்கள் கல்வியினை சமூக சேவையாகவும் மனித உரிமையாகவும் கருதி தேவையான அளவிற்கு நுகர்வு செய்தனர். இவ்வாறான நுகர்ச்சி சமூகத்தின் நலனை உயர்த்தி அபிவிருத்திக்கு இட்டு சென்றதால் கல்வி பொருளாதார அபிவிருத்திக்கு பின்னே செல்கின்றது என்று கூறப்பட்டது.

மாறாக Theodors shultz (1961) என்ற பொருளியலாளர் கல்வி என்பது உற்பத்திக்கு உதவும் முதலீடு கல்வித் தேர்ச்சியுடைய மக்கள் பொருளாதார மற்றும் கைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மனித வலுவினை வழங்குகின்றார்கள் என்பதிலிருந்து கல்வி ஓர் முதலீடு என்ற வரைவிலக்கணம் கொடுக்கின்றனர்.

மேலும் கல்விக்காக உள்ளிடப்படும் வளங்களிலிருந்து கூடுதலான விளைவுகளைப் பெறுவதே கல்வியின் முக்கிய செயலாற்றுகை என்ற கருத்து பிரபல்யமடையத் தொடங்கியதிலிருந்து கல்வியானது ஒருவரின் தொழிற்திறன்களை வளர்த்துக் கொள்ளவும் அதன் மூலம் அவரது உற்பத்திதிறன் விருத்தியடைந்து வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதனால் கல்வி ஓர் முதலீடு எனப்படுகிறது என்று கூறப்பட்டது. எனவே இவ் முதலீட்டின் மூலம் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து அதனூடாக அபிவிருத்தியடையும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

ஆக கல்வி நுகர்வாகவோ அல்லது முதலீடாகவோ இருந்து பொருளாதாரத்தின் அபிவிருத்தியில் பங்களிக்கின்றது என்ற முடிவுக்கு வர முடியும். இவ்வாறான கருத்தாடல்களுடன் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியும் கல்வியும் என்ற தலைப்பில் இக்கட்டுரையூடாக ஆராயலாம்.

இலங்கையின் கல்வி முறையானது தொகை ரீதியான அம்சத்தில் கல்வி வாய்ப்புக்களை விரிவாக வழங்குவதில் பல முன்னேற்றங்களை கொண்டுள்ளது. கலப்பு பொருளாதார முறையினால் ஈட்டப்படும் வருமானம் குறைவு எனினும் கடந்த காலங்களில் கல்வித்துறைக்கு இடப்படும் மேலதிக முதலீடு சிறந்த விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் இலங்கை வளர்முக நாடாக இருப்பினும் மனித மூலதன அபிவிருத்தி மட்டம் உயர்வாகவே உள்ளது.

மனித அபிவிருத்திச் சுட்டெண் 2012 இன் மத்தியவங்கி அறிக்கையின்படி 0.715 ஆக உள்ளதும் இச் சுட்டெண்ணின்படி 186 நாடுகளில் 92வது நாடாக இலங்கை உள்ளதும் இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்க விடயம். சார்க் நாடுகளில் மிக உயர்ந்த மட்டத்தில் மனித அபிவிருத்திச் சுட்டெண்ணை கொண்டுள்ள நாடு இலங்கையாகும். இது சமூக நலன்புரி நடவடிக்கைகளின் ஒரு விளைவு எனலாம்.

எனவே மனித அபிவிருத்திச்சுட்டெண்ணில் உள்ளடங்கும் ஒரு அம்சமான கல்வியறிவு வீதம் காரணமாகவே இலங்கையின் மனித அபிவிருத்தி சுட்டெண் அதிகரித்தமையும் அதன் மூலம் இலங்கையின் பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்து வருகின்றது எனலாம்.

அடுத்து அரசின் கொள்கை ஆவணமான பத்தாண்டு அபிவிருத்திக் கட்டமைப்பினை நோக்கும்போது (2006-2016) இவ் ஆவணத்தில் விதந்துரைக்கப்பட்டவாறு நடுத்தர காலத்தில் 8%ற்கும் கூடுதலான நீடித்து நிற்கக் கூடிய உயர் வளர்ச்சியினை பேணுவதற்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி கல்வித்துறைக்கு பெரும் பயனைக் கொடுத்தது என்றும் அபிவிருத்திக் கட்டமைப்பில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியது என்றும் கூறப்பட்டது.

இதில் பொதுக்கல்வி, இரண்டாம் நிலைக் கல்வி, உயர்கல்வி என மூன்றாக வகுக்கப்பட்டு விரைவான பொருளாதார வளர்ச்சிக்கும் தேசிய அபிவிருத்திக்கும் வேண்டப்படும் தொழில்நுட்ப ஆற்றல்களை மேம்படுத்தும் ஒன்றாக கல்வித்துறை மாற்றியமைக்கப்பட வேண்டும் எனப்பட்டது. இப் பொதுக்கல்வி மூலமாக பிரதேச ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட்டு ஆசிரிய கிராமங்கள் அமைத்தல், பெருமளவிலான ஆசிரியர்கள்

சேர்க்கப்பட்டு கிராமங்கள் கல்வியில் முன்னேற்றமடைய செய்தமையும் இலங்கையின் அபிவிருத்தியின் மைல்கல் எனப்படுகின்றது.

மேலும் இரண்டாம் நிலைக்கல்வியினை மேம்படுத்த எடுத்த நடவடிக்கைகளும் இலங்கையின் அபிவிருத்தியில் பெரும் பங்களிப்பினை செய்தன எனலாம். ஆளுகை, வினைத்திறன் மற்றும் பணி விநியோகத்தினை மேம்படுத்தல், தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்சார் நிறுவனங்களின் பிரவேசம் போன்றவற்றுடன் தகவல் தொழில்நுட்ப பாடங்கள் க.பொ.த (சா/த), (உ/த)ங்களில் புகுத்தப்பட்டமை, க.பொ.த(உ/த)ற்குரிய ஒரு பாடத்துறையாக தகவல் தொழில்நுட்பத்துறை அறிமுகப்படுத்தப்பட்டமை போன்றனவும் தொழில்நுட்ப கல்வி அறிவுடைய மாணவர்களை இன்றைய உலகமயமாக்கல் கொண்ட பூமியில் சவால்களை சமாளிப்பதற்கும் நவீனமயமாகி வரும் தொழில் சந்தர்ப்பங்களை பயன்படுத்துவதற்கும் ஏதுவாகியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயம். இதன் மூலம் ஏற்படும் பயன் பொருளாதாரத்தில் கசிந்துருக தொடங்கியுள்ளதை யாவரும் அறிவர்.

இன்றும் தெனசல (அறிவு நிலையம்) செயற்றிட்டத்தினூடாக இலங்கையிலுள்ள சகல பிரஜைகளும் தகவல்களை தடையின்றி பெற்றுக்கொள்ளவும் E-Srilanka வேலைத் திட்டத்தின்கீழ் 700 அறிவு நிலையங்கள் உருவாக்கப்பட்டு கிராமியப் பகுதியில் இலத்திரனியல் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை உலக வங்கியின் அனுசரணையின் கீழ் அமைக்கப்பட்டதன் மூலம் கிராமப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு சமூக பொருளாதார அபிவிருத்தி, அமைதியான சமாதானச் சூழல் போன்றன உருவாக்கப்படுவதும் மாணவர் மத்தியில் தகவல் தொழில்நுட்பத்துறை பற்றிய அறிவினை மேலும் விரிவாக்க உதவியது எனலாம். யாழ்ப்பாண மாவட்டத்தில் 41 அறிவு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

உயர் கல்வியினை நோக்கும் போது இன்றும் அரச பல்கலைக்கழகங்கள் உள்ளமையும் பட்டதாரிகளை வெளியேற்றும் இம்மையங்கள் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்றன. 2012இல் பல்கலைக்கழக அனுமதி பெற்றோரின் விகிதம் 59% உயர்வடைந்தமையும் அபிவிருத்திக்கு ஒரு சான்றாகும்.

அடுத்து பத்தாயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகளை நோக்கும்போது புரட்டாதி 2000 ஆண்டில் நடைபெற்ற ஐ.நா.சபையின் புத்தாயிரமாண்டு உச்சி மகாநாடும் அங்கு குறிக்கப்பட்ட எட்டு இலக்குகளில் ஒன்றான அனைவருக்கும் ஆரம்பக் கல்வியை வழங்கல் என்பதில் இலங்கை பரந்தளவில் 98% அடையப்பெற்றது சாதனைக்குரிய விடயமும் ஆகும்.

இவற்றுடன் அறிவுசார் பொருளாதாரம் என்ற புதிய ஓர் எண்ணக்கருவுடன் தொடங்கப்பட்டுள்ள உபாயத்தினை இலங்கை தனக்குப் பொருத்தமாக்கிக் கொள்ள பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது. இங்கு அறிவுசார் பொருளாதாரம் என்பது பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஊக்குவிக்கும் பொருட்டு அறிவினை உருவாக்கல், விரிவாக்கல் நிலைநிறுத்தல் போன்றவற்றை

ஏற்படுத்த விளையும் பொருளாதாரமாகும். இதன் பொருட்டு கல்வி கற்ற திறன்படைத்த மக்கள் கூட்டத்தினை உருவாக்கி இலங்கைப் பொருளாதாரம் சேவைத்துறை சார் பொரு ளாதாரமாக மாறியமை, தாராளமயமாக்கல், வெளிநாட்டு நிறுவனங்களை வரவழைத்தல், யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டமை போன்றவற்றை எடுக்கப்பட்ட முயற்சிகளு க்கு உதாரணமாகக் கூறலாம்.

மேலும் ஆசியாவின் அதிசயமாக இலங்கையை மாற்றுவதற்காக தலாவரு மானத்தினை இரட்டிப்பாக்கி பாரிய உட்கட்ட மைப்பு அபிவிருத்தியின் ஊடாக அறிவு மையங்களையும் விருத்தி செய்ய நடவடி க்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இவை மட்டுமன்றி கல்விச் சீர்திருத் தம், பாடவிதானங்களில் ஏற்பட்ட மாற்றம், தேர்ச்சி சார்ந்த பாடங்கள், மாணவர் மையக் கல்வி, கணீப்பீட்டு முறைகள், தனி, குழு செயற்றிட்டங்கள், 5E மாதிரிக் கற்பித்தல் முறைகள், பண்புசார் விருத்திச் செயற்பாடு கள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், ஆங்கில மொழி போதனா மொழியாக்கப் பட்டமை போன்றவற்றால் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தி பெறு வதும் இலங்கையின் தொழிலின்மை வீதம் 2012ல் 4% ஆக குறைவதற்கு பங்களித்தன.

எனவே தொகுத்து நோக்குமிடத்து இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி யில் கல்வியின் பங்களிப்பு பாரியளவில் பெறப்பட்டது எனலாம்.

எனினும் இப்புள்ளி விபரங்கள் ஒரு புறமிருக்க சில இடைவெளிகளையும் இங்கு சுட்டிக்காட்ட முடியும். 25% பிள்ளைகள் 9ஆம் வகுப்புவரை படித்து முடிப்பதில்லை. பின் தங்கிய பிரதேசங்கள், கிராமப்புறங்களது பெருந்தோட்டப்பகுதிகளில் கல்வி வாய்ப் புக்கள் போதியளவில் விருத்தியடை யவில்லை. பால் சமத்துவமின்மையும் இங்கு காணப்படுவது கல்வி வாய்ப்புக்களில் காணப்படும் இடைவெளியாகும்.

மேலும் உலக வங்கியின் மதிப் பீடுகளின் படி ஒரு பாடசாலை மாணவனுக்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ ரூ 65000/= வரை அரசாங்கம் செலவு செய்யும் போது கற்பித் தல் தராதரங்களினை மேம்படுத்துவதற்கான தராதர உள்ளீடுகளிற்கான செலவுகள் குறை வாகவுள்ளன. இவ்வளவு மலிவாக வழங்கப் படும் கல்வியில் பெரிய தராதரங்களினை எதிர்பார்க்க முடியாது. மேலும் ஆசிரியருக்கு வழங்கப்படும் சம்பளங்கள் இந்தியா, பாகிஸ் தான், மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது குறைவானது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடு களில் இலங்கை வறுமையினை குறைப்ப தில் ஓரளவு வெற்றிகண்ட போதிலும் கடந்த சில தசாப்தங்களாக கல்வித்துறையின் எல்லா மட்டங்களிலும் பண்டரீதியாகவும் தர ரீதியாகவும் பாரிய வீழ்ச்சியினை காட்டி நிற்கின்றன. கட்டாயக்கல்வி பெற வேண்டிய 14% ஆனவர்கள் பாடசாலைக்கு செல்வ தில்லை என்பதிலிருந்து இலங்கையின் ஆரம்பக் கல்வியின் நிலை பற்றி சிந்திக்க வேண்டிய விடயமாகின்றது.

மேலும் இலங்கையின் கல்வி வரலாற்றில் காணப்பட்டுவந்த மாசுக்கள் கல்வியின் இரட்டைத்தன்மையை வளர்த்து வலுப்பெறச் செய்துள்ளன. இலங்கையின் கல்வியில் ஆரோக்கியமான முற்போக்கான

விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியாக முழுமையான வளர்ச்சியேற்படாததன் விளைவாக கல்வியில் சம வாய்ப்பு என்பது பிறந்தவுடன் மரணித்த சிசுப் போல் ஆகிவிட்டது. இலவசக் கல்வியில் ஏற்பட்ட தாக்கம் ஆரம்பகால கட்டங்களில் ஓர் சமூகப் பெயர்ச்சியினை உண்டு பண்ணினாலும் கூட மீண்டும் வசதி படைத்தவருக்கு கல்வி வாய்ப்பு என்பது தற்போது பெருகி வருவது மறுக்க முடியாத உண்மை.

மேலும் அறிவுப் பொருளாதாரமாக இலங்கை தனது பொருளாதாரத்தினை மாற்றியமைக்க முனைகின்ற போதிலும் 186 நாடுகளில் இலங்கையின் அறிவுப் பொருளாதாரச் சுட்டெண் 101 நிலையில் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

இவை மட்டுமன்றி இலங்கையின் பொருளாதாரத்தின் குறைவான செயலாற்றுகைக்குரிய காரணங்களாக மனிதவள அபிவிருத்திக்குரிய சாதகமான கல்விக் கொள்கைகள் வகுக்கப்படாமை, பலவீனமான அரச நிதி ஒழுக்கம் (Poor fiscal disipline) கல்வியின் மீதான செலவு 1.8 மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் (2012) குறைவாக காணப்படுகின்றமை, நீண்டகால யுத்தமும் யுத்தத்திற்கான பொருளியற் செலவுகளும், வன்முறைகள் அதிகரிக்கின்றமை போன்றன இலங்கையின் கல்வியில் பின்னடைவினை ஏற்படுத்துவதுடன் அதனூடாக பொருளாதாரக் கொள்கைகளிலும் பொருளாதார அபிவிருத்தியிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

எனவே தொகுத்து நோக்குமிடத்து பொருளாதாரத்தின் செழிப்பினையும் சமூகத்தில் அதிகாரத்தினையும் பெறுவதற்கான முதன்மையான விசை கல்வியாகும். இதனால் உலகின் கல்வி என்பது இன்று அறிவுசார் சமூகத்தினை உருவாக்குவதற்கும் அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்குமான அடித்தளமாகின்றமையில் இலங்கையும் தனது கல்வித் துறையின் மூலம் ஆளுமை அறிவு, ஒழுக்கம், தர்க்க ரீதியான சிந்தனை போன்றவற்றை வளர்க்கும் மாணவ சமுதாயத்தினை உருவாக்குவதில் முழுக் கவனத்தையும் செலுத்துமானால் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி என்பது கல்வி மூலம் அடையப்பட்டு அதனூடாக ஆசியாவின் அதிசயமாகவும் மாறமுடியும் என்பது திண்ணம்.

உசாத்துணைகள் :-

மத்தியவங்கி அறிக்கை 2012
குறிப்பேடுகள் – மத்திய வங்கியின் வெளியீடு
அகவிழி – (2006 – 2010)
கல்வியின் அடிப்படைகள் – இலங்கை திறந்த பல்கலைக் கழகம்
பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும். வே.கருணாகரன்
இணையத்தளம் – www.cbsl.lk
www.wikipedia.com

நுகர்வோர் விலைச்சுட்டெண்

அ.மேரியுடெக்சி
A/L com (2014)

- பணவீக்கப் பெறுமதியினை மதிப்பீடு செய்து கொள்வதற்காக தயாரிக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ முதன்மையான விலைச் சுட்டெண் நுகர்வோன் விலைச் சுட்டெண் ஆகும்.
- நுகர்வோன் விலைச்சுட்டெண் பல்வேறு நோக்கங்களுக்காக தயாரிக்கப்படுகின்றன. அவையாவன,
  - சமூக பொருளாதார ஆய்வுகளுக்கும், கொள்கை நோக்கத்திற்காகவும் கூட நுகர்வோன் விலைச்சுட்டெண் தயாரிக்கப்படுகின்றன.
  - மற்றும் ஊழியத்தினுடைய கூலி போக்குகளை இனங்காண்பதற்கும் இவை உதவுகின்றன.
  - இவற்றைவிட பிரதானமாக வருமான, பணகொள்கை வகுப்புகளுக்கு இவை உதவுகின்றன.

புதிய கொழும்பு நுகர்வோன் விலைச் சுட்டெண்

New Colombo Consumers Price Index

- புதிய கொழும்பு நுகர்வோன் விலைச் சுட்டெண் May 2011 வரையிலான உத்தியோகபூர்வ விலைச்சுட்டெண்ணாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் அடியாண்டு 2002 ஆகும்.
- June 2011 இலிருந்து 2006 / 2007 ஐ அடியாண்டாக கொண்டுள்ளது.

  அடியாண்டு 2002 – 2006 / 2007ற்கு மாற்றமடைந்ததன் காரணம்:

- ✓ 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை செலவு கட்டமைப்பு வடிவம் மாற்றமடைவதாலும் சேவைகள் சந்தையில் பெருமளவில் கிடைப்பதாலும் அடியாண்டை மாற்ற வேண்டிய தேவையுள்ளது. இவை வீட்டுத் துறை வருமானத்தையும் செலவு கட்டமைப்பையும் அடிப்படையாக கொண்டவை.
- மேலும் இவ் கொழும்பு நுகர்வோன் விலைச் சுட்டெண் தொடர்பாக அடிப்படை ஆண்டை மீளாய்வு செய்தல், பொருட்களின் நிறையை துப்பித்தல், புதிய பொருட்களை சேர்த்தல், தேவை ஏற்படின் ஏற்கனவே உள்ள பொருட்களை நீக்குதல் போன்ற செயற்பாடுகளை தற்போது தொகை மதிப்பு திணைக்களம் மேற்கொள்கின்றது.

கொழும்பு நுகர்வோன் விலைச் சுட்டெண்ணின் பிரதான பண்புகள்

- அடியாண்டு:–

  Janury 2006 - December 2007வரை அடியாண்டு கவனத்தில் கொள்ளப்படும்.

  (Base 2006/2007 = 100) அடியாண்டில் 27, 972.11/= செலவீனமானது மொத்த செலவீனத்தில் 55.4%ற்கு மேற்பட்டது.

  (Base 2002=100) அடியாண்டில் 17,996.38/= செலவீனமாக காட்டப்பட்டுள்ளது.

வருமானம், விலை அதிகரிப்பதனால் நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிற்குரிய கூடை மாற்றப்பட்டுள்ளது.

- **பொருட்கள் சேவைகளின் கூடை:-**
  (Base 2006/2007) அடியாண்டில் 95 உப பிரிவும் 10 பிரதான பிரிவுகளும் காணப் பட்டன.

  (Base 2002) அடியாண்டில் 83 உப பிரிவு களும் 10 பிரதான பிரிவுகளாகவும் பொருட்கள் சேவைகளின் கூடை காணப்பட்டது.

- **நுகர்வுச் செலவினத்தின் வருடாந்த எல்லை:-**
  வருடாந்த எல்லை Jan 2006 - Dec 2007 வரை அடிப்படையாண்டு கவனத்தில் கொள்ளப்படும்.

- **கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச எல்லை:-**
  ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாநகரசபை, தெகிவல மாநகரசபை, மொறட்டுவ மாநகரசபை, கொலன்னாவ நகரசபை, சீதாவாக்கபுர நகரசபை, மகரகம நகர சபை, கெஸ்பாவ நகரசபை, பொறலஸ்க முவ நகரசபை.

- **விலைசேகரிப்பு நிலையங்கள்:-**
  விலை சேகரிப்பு நிலையங்களாக 14 இடங்கள் காணப்பட்டன. அவையாவன, புறக்கோட்டை, மருதானை, வெள்ள வத்தை, கிருளைப்பனை, தெஹிவளை, கோட்டை, நுகேகொட கொலண்ணாவ, இரத்மலானை போன்றவற்றுடன் நாரேன்பிட்டிய மற்றும் இரத்மலானையி லுள்ள விசேட பொருளாதார நிலையங் கள் உள்ளடக்கப்படுகின்றன.

- **நுகர்வோன் கூடையில் போதைப்பொருட்கள் விலக்கப்பட்டமை :**
  மதுபானம், புகையிலை மற்றும் போதை தரும் பொருட்கள் நீக்கப்பட்டது.

- **தயாரிக்கப்பட்ட முறை :-**
  லாஸ்பியர் (Laspeyres) சமன்பாட்டை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப் பட்டது.

புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிற்கும் பழைய கொழும்பு நுகர்வோன் விலைச்சுட்டெண்ணிற்கும் இடையிலான வேறுபாடு

அடிப்படைக் கூறு	கொழும்பு நுகர் விலைச்சுட்டெண்	புதிய கொழு.நுகர் விலைச்சுட்டெண்	புதிய கொழு.நுகர் விலைச்சுட்டெண்
அடிப்படைக் காலம்	காலங்கடந்தது 1952	அண்மையானது 2002	மிக அண்மையானது (2006/2007)
பிரதிநிதித்துவப்படுத்தும் சனத்தொகை	வரையறுக்கப்பட்டது தொழில் வகுப்பு	அதிகரிப்பின் பங்கு அனைத்தும் நகரம்	அதிகரிப்பின் பங்கு அனைத்தும் நகரம்
புவியியல் பரப்பு உள்ளடக்கம்	குறுகியது கொழும்பு நகரம்	விரிவானது கொழும்பு மாவட்டம்	விரிவானது கொழும்பு மாவட்டம்
விலை சேகரிப்பு நிலையங்கள்	07	12	14
பொருட்களின் எண்ணிக்கை	05 தொகுதி	12 தொகுதி	10 தொகுதி
நிறையிடப்பட்ட சராசரி 1. உணவு 2. உணவு தவிர்ந்தவை	62 38	46.71 53.29	41.03 58.97
சுட்டெண் பெறுமதி	202.24	179.96	279.72
அடியாண்டின் மொத்த செலவீனம்	202.224	17,996.38	27, 972.11

கொழும்பு நுகர்வோன் விலைச் சுட்டெண்ணின் நன்மைகள்

- இலங்கை பொருளாதாரத்தின் உத்தி யோக பூர்வ பணவீக்க போக்கினை மதிப்பிடல்.
- நுகர்வோர் தமது உண்மையான நுகர்வு தீர்மானத்தை மேற்கொள்ள முடிதல்.
- அரச நுகர்வோருக்குரிய சலுகைகள், வசதி களை மேற்கொள்ள உதவுதல்
- தொழிலாளரின் வாழ்க்கைச் செலவு படியினை தீர்மானிக்க முடிதல்.

விலைச்சுட்டெண் அதிகரிப்பு வீதம்

புதிய கொழும்பு	2000	2005	2006	2007	2008	2009	2010	2011	2012
நுகர்வோன் விலைச் சுட்டெண்	6.2	11.0	10.0	15.8	22.6	3.4	5.9	6.7	7.6

2009-2012ம் ஆண்டு வரையிலான விலைச்சுட்டெண் அதிகரிப்பின் காரணங்கள்.

- உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களின் விலை அதிகரிப்பு
- பழங்கள், மீன், மரக்கறி, தேங்காய், பாண் போன்றவற்றின் விலை அதிகரிப்பு
- இறக்குமதித் தீர்வை இறக்குமதி பொருட்கள் மீது விதிக்கப்படுவதனால் விலை அதிகரிக்கும்
- வீடமைப்பு, நீர் மின்வலு மற்றும் வாயுவின் விலை அதிகரிப்பு ஆகிய விலைமாற்றங்களே காரணமாகும்.

நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சி இருக்க முடியாது.

வாழ்க்கையில் தன்னம்பிக்கையே அவசியம்.

யோசனையின்றி யாவர் பேச்சையும் நம்புதல் தீது.

இறைபக்தியே உயிர்களை இயக்கும் சக்தி.

சந்தை அமைப்புக்கள்

செ.மேரியோலண்ட்
A/L com (2014)

பொருளியலில் சந்தை என்பது பின் வருமாறு இரண்டு வகைப்படுகின்றது.

i. பொருட் சந்தை
ii. காரணிச் சந்தை

பொருட்சந்தை

சந்தையும், தொழிலும் சமனான கருத்தைக் கொண்ட எண்ணக்கரு பொருட் சந்தை எனப்படும். அதாவது பொருட்கள், சேவைகளைக் கொள்வனவு செய்யும் சந்தை யாகும். இங்கு பண்டத்தை உற்பத்தி செய் கின்ற நிறுவனங்களின் கூட்டுத்தொகையி னால் தொழில் உருவாகின்றது. இச் சந்தை நிலமைகளை விளக்க சந்தை அமைப்பு என்ற எண்ணக் கரு பயன்படுத்தப்படுகின்றது.

காரணிச் சந்தை

உற்பத்திக் காரணிகளை கொள்வ னவு, விற்பனை செய்கின்ற சந்தை காரணிச் சந்தை எனப்படும். இங்கு உற்பத்திக் காரணி களுக்கு கேள்வி எழுப்புவோர் உற்பத்தியாள ராகவும் or நிறுவனத்துறை உற்பத்திக் காரணிகளை நிரம் பல் செய்வோர் வீட்டுத் துறையினராகவும் காணப்படுவர்.

சந்தை அமைப்புக்களை பின்வரும் நிலமைகளை அடிப்படையாகக்கொண்டு வகைப்படுத்தலாம்.

I. சந்தையிலுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை
ii. உற்பத்தி செய்யும் பொருட்கள், சேவை களின் தன்மை
iii. நிறுவனம் சந்தையினுள் நுழைவதற்கும் வெளியேறுவதற்குமான சுதந்திரம்.
iv. நிறுவனங்களிடையே காணப்படும் போட்டியின் தன்மை

இவற்றினை அடிப்படையாகக் கொண்டு சந்தை அமைப்பினைப் பின்வரும் 4 பகுதிகளாகப் பிரிக்கலாம்.

i. நிறைபோட்டிச் சந்தை
ii. தனியுரிமைச் சந்தை
iii. தனியுரிமைப் போட்டிச் சந்தை
iv. சிலருரிமைச் சந்தை

I. நிறைபோட்டிச் சந்தை

ஒரே தன்மையான பண்டம் உற்பத்தி செய்யப்படுவதுடன் நிறுவனங்கள் உள்நுழை வதற்கும், வெளியேறுவதற்கும் எவ்வித தடை யுமற்ற பல நிறுவனங்களை உள்ளடக்கிய சந்தை நிலமை நிறைபோட்டிச்சந்தை எனப்படும்.

நிறைபோட்டிச் சந்தையொன்றின் சிறப்பியல்புகள்

- நிறைபோட்டிச் சந்தையில் ஏராளமான உற்பத்தியாளர் ஏராளமான நுகர்வோர் காணப்படுவர்.
- நிறைபோட்டிச் சந்தையிலுள்ள நிறு வனங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட் கள் ஓரினத் தன்மை வாய்ந்தவை யாகும். (100% பிரதியீடு)

- நிறைபோட்டிச் சந்தையில் உள்நுழைவதற்கும், வெளியேறுவதற்கும் சுதந்திரம் காணப் படும்.
- நிறுவனம் விலை ஏற்போனாகத் தொழிற்படும்
- நிறை போட்டிச் சந்தையில் காரணிகளின் அசைவிற்குத் தடைகள் எதுவும் காணப்பட மாட்டாது.

ஒரு நிறைபோட்டி நிறுவனத்தில் விலையானது சராசரி வருமானத்திற்கும் எல்லை வருமானத்திற்கும் சமனாகும்

ஒரு நிறைபோட்டி நிறுவனத்தின் கேள்விக்கோடு, சராசரி வருமானக்கோடு (AR) எல்லை வருமானக்கோடு (MR) ஆகிய மூன்றும் ஒன்றேயாகும்.

ஒரு பொருளில் ஓரலகினை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் வருமானம் சராசரி வருமானம் எனப்படும். எனவே ஒரு பொருளின் விலையே ஓரலகு விற்பனை மூலம் கிடைக்கும் வருமானமாகும். இதனால் விலையும் சராசரி வருமானமும் எப்போதும் சமனாக இருக்கும்.

$$AR = \frac{TR}{Q}$$

$$AR = \frac{P \times \cancel{Q}}{\cancel{Q}}$$

$$AR = P$$

ஒரு நிறுவனம் தனது விற்பனையினை ஓரலகால் அதிகரிக்கும் போது மொத்த வருமானத்தில் ஏற்படுகின்ற மாற்றம் எல்லை வருமானமாகும்.

நிறைபோட்டி நிறுவனத்தின் உற்பத்திப் பொருளின் விலை மாறாது ஆகையால் மொத்த வருமானத்தின் மாற்றம் தொகை மாற்றத்தில் (ΔQ) தங்கியுள்ளது?

$$MR = \frac{\triangle TR}{\triangle Q}$$

$$TR = P \times Q$$

விலை மாறாதது ஆகையால்

$$\triangle TR = P \times \triangle Q$$

$$MR = \frac{P \times \cancel{\Delta Q}}{\cancel{\Delta Q}}$$

$$MR = P$$

எனவே ஒரு நிறைபோட்டி நிறுவனத்தில் சராசரி வருமானமும், எல்லை வருமானமும் சமனாகும்.

$$P=AR=MR$$

நிறைபோட்டி நிறுவனத்திற்கு உதாரணம்.

Eg :- மரக்கறி வகைகள்
விவசாயம்
மீன்பிடி
வெற்றிலை

நிறைபோட்டி நிறுவனத்தின் கேள்விக்கோடு

நிறைபோட்டிச் சந்தையில் ஏராளமான நிறுவனங்கள் காணப்படுகின்றன. ஆகவே சந்தையின் மொத்த நிரம்பலில் ஒரு நிறுவனத்தின் பங்களிப்பு மிகவும் குறைவாகும் இதனால் ஒரு நிறுவனம் தனது நிரம்பலை அதிகரிப்பதாலோ/ குறைப்பதாலோ சந்தையின் மொத்த நிரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தி விலைமாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஆகவே நிறை போட்டி நிறுவனம் ஒன்று விலை ஏற்போனாக செயற்படுகின்றது. இந்நிறுவனத்தின் கேள்விக் கோடு முடிவிலி நெகிழ்ச்சிக்கோடாக அமைந்துள்ளது.



2. தனியுரிமைச் சந்தை

தொழில், நிறுவனம் என்பன ஒன்றாக இருப்பதுடன் தொழிலில் பிரவேசிப்பதற்குத் தடை காணப்படும் சந்தை தனியுரிமைச் சந்தை ஆகும்.

தனியுரிமைச் சந்தையின் சிறப்பியல்பு

- தனியுரிமைச் சந்தையில் ஒரேயொரு நிறுவனம் மட்டும் காணப்படும்
- சந்தையினுள் பிரவேசிப்பதற்குத் தடை காணப்படும்.
- சந்தைத் தகவல்கள் பூரணமற்றதாகக் காணப்படும்.
- தனியுரிமை நிறுவனம் தனது உற்பத்திப் பொருளின் விலையைத் தானே நிர்ணயிக்கும் உரிமையுடையது.

தனியுரிமை நிறுவனத்தின் கேள்விக் கோடு

ஒரு தனியுரிமை நிறுவனம் தனது உற்பத்திப் பொருளின் விலையினை தானே நிர்ணயிக்கும் உரிமை உடையது. எனவே தனியுரிமை நிறுவனத்தின் கேள்விக்கோடு சாதாரண கேள்விக்கோடு போல இடமிருந்து வலமாக மேலிருந்து கீழ்நோக்கிச் சரிந்து செல்லும்.



தனியுரிமையின் வகைகள்

இயற்கைத் தனியுரிமை :- இயற்கையாகவே சில பொருட்களின் உற்பத்திக்காக முக்கியமான மூலப்பொருட்களை வழங்குவதில் ஒரு நாடு/ நிறுவனம் தனியுரிமைத் தன்மையைக் கொண்டிருக்குமாயின் அவை இயற்கைத் தனியுரிமையாகும்.

Eg:- நிக்கல், யுரேனியம் போன்ற மூலப் பொருட்களை வழங்கும் நாடுகள்.

சட்டத்தனியுரிமை :- சட்டரீதியான ஒரு நிறுவனம் / ஒரு நாடு சில உற்பத்திகளின் ஆக்கவுரிமை, வியாபாரக்குறி. பதிப்புரிமை போன்றவற்றில் தனியுரிமைத் தன்மையினைக் கொண்டிருத்தல் சட்டத்தனியுரிமை ஆகும்.

சமூகத் தனியுரிமை :- பொதுவான பயன்பாட்டை யுடைய பொருட்கள், சேவைகளை வழங்குவதில் ஒரு நிறுவனம்/அரசு தனியுரிமைத் தன்மையினைக் கொண்டிருத்தல்.

Eg:- புகையிரதச் சேவை, நீர் வழங்கல், மின்சாரசபை

பொதுத் தனியுரிமை :- சில நிறுவனங்கள் / நம்பிக்கை குழுக்கள் ஒன்றிணைவதன் மூலம் ஒரு பொதுத் தனியுரிமை அமைப்பு தோற்றம் பெறுதல் பொதுத் தனியுரிமை எனப்படும்.

தனியுரிமைச் சந்தை உதாரணம் :- புகையிரத சேவை, நீர்வழங்கல், மின்வழங்கல்.

3. தனியுரிமை போட்டிச் சந்தை

நிறைபோட்டிச் சந்தை அமைப்பு, தனியுரிமை சந்தை அமைப்பு நடைமுறை உலகில் காணப்படும் வியாபார நிறுவனங்களின் நடத்தைகளை விளக்குவதற்கு போதாமல் இருப்பதால் நிறைபோட்டிச் சந்தை, தனியுரிமைச் சந்தை ஆகிய இரண்டும் இணைந்து உருவாக்கப்பட்ட சந்தை தனியுரிமைப் போட்டிச் சந்தை ஆகும்.

தனியுரிமைப் போட்டிச் சந்தையின் சிறப்பியல்புகள்

- ஏராளமான நிறுவனங்கள் காணப்படும்
- நெருங்கிய பிரதியீட்டுத் தன்மைவாய்ந்த பொருட்கள் காணப்படும் எனவே இங்கு பொருள் வேறுபடுத்தல் காணப்படும்.
- தனியுரிமைப் போட்டி நிறுவனம் தனது உற்பத்திப் பொருளின் விலையைத் தானே தீர்மானிக்கும்.
- நிறுவனங்கள் பிரவேசிப்பதற்குச் சுதந்திரம் காணப்படும்.
- நீண்டகாலத்தில் சாதாரண இலாபம் அடையும்.

தனியுரிமைப் போட்டிச்சந்தை

Eg:- தேனீர்க் கடை, சில்லறைக்கடை, சலூன்.

4. சிலருரிமைச் சந்தை

தனியுரிமைப் போட்டி நிறுவனங்கள் தமக்குள் போட்டியிட்டு அதற்குள் சில நிறு வனங்கள் உரிமை பெற்றிருத்தல் சிலர் ரிமைச் சந்தை எனப்படும். தனியுரிமைப் போட்டிச் சந்தையின் இறுதிக் கட்டத்தில் சிலருரிமைச் சந்தையாக மாற்றமடையும்.

சிலருரிமைச் சந்தையின் இயல்புகள்

- குறிப்பிட்ட தொழிலில் ஒருசில நிறுவனங் கள் மாத்திரம் காணப்படும்.
- புதிய நிறுவனங்கள் சந்தையில் நுழைவ தற்குத் தடை காணப்படும்.
- சிலருரிமை நிறுவனங்களிடையே கடுமையான போட்டி விளம்பரங்கள் இடம்பெறும்.
- சிலருரிமைச் சந்தையில் விலை நிர்ணயம் பற்றி ஒரு பொதுக்கொள்கை கிடையாது. கூட்டாகவோ or கூட்டற்ற முறையிலோ உற்பத்தி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.
-

சிலருரிமை நிறுவனத்தின் கேள்விக் கோடு

சிலருரிமை நிறுவனங்களின் கேள்விக்கோடு முறிந்த கேள்விக் கோடாக காணப்படும்.



படத்தில் ABC எனும் முறிந்த கேள்விக்கோடு சிலருரிமை நிறுவனக் கேள்விக் கோட்டைக் குறித்து நிற்கின்றது. இதில் AB என்ற பகுதி நெகிழ்ச்சியுள்ள கேள்விக் கோட்டையும் BC என்ற பகுதி நெகிழ்ச்சியற்ற கேள்விக் கோட்டையும் குறிக்கின்றது.

சிலருரிமைச் சந்தைக்கு உ+ம்:- பற்பசைகள், பத்திரிகை, தொலைக்காட்சி.

உசாத்துணை :

சந்தை அமைப்புக்கள்: வே. கருணாகரன்

பணவீக்கம்

கு.சஜீவா
A/L com (2014)

நீண்டகால ரீதியில் பொருட்கள், சேவைகளின் பொது விலைமட்டத்தில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பு பணவீக்கம் எனப்படும்.

ஒரு நாட்டின் பணவீக்க வேகம் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பின் சதவீதமாகக் காட்டப்படும்.

1. குறுங்கால விலை அதிகரிப்பு பணவீக்கமாக கருதப்படவில்லை.
2. பொருளாதாரத்தில் உள்ள எல்லாப் பொருட்களின் விலைகளும் கட்டாயம் உயர வேண்டுமென்பது இல்லை.

பொது விலைமட்டம் அதிகரித்துச் செல்லும்போது பணத்தின் கொள்வனவு சக்தி குறைவடைந்து செல்லும். இதன் காரணமாக பணத்தின் கொள்வனவு சக்தி குறைவடைந்து செல்வதனையும் பணவீக்கம் எனலாம்.

இன்னொரு வகையில் கூறுவதாயின் ஒரு நாட்டில் பணம் இருந்தும் பொருள் இல்லாத நிலையினை / குறைந்தளவு பொருட்களை கூடியளவு பணம் துரத்திச் செல்கின்ற நிலையினை இது குறிக்கின்றது.

> ***"முன்னரெல்லாம் நாங்கள் கையளவு பணங் கொடுத்து பையளவு பொருள்களைப் பெற்றோம். இப்பொழுது நாங்கள் பையளவு பணங்கொடுத்து கையளவு பொருள்களைப் பெறுகின்றோம்." 1944 - 1946 காலப்பகுதியில் ஜேர்மனி நாட்டில் பொதுமக்கள் பேசியவை.***

பணவீக்க வீதம்

குறிப்பிட்ட ஆண்டின் விலைச்சுட்டெண்ணை கடந்த ஆண்டு விலைச்சுட்டெண்ணுடன் ஒப்பிட்டு பணவீக்க வீதம் அளவிடப்படும். அதாவது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது குறிப்பிட்ட ஆண்டு விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பை கடந்த ஆண்டின் விலைச்சுட்டெண்ணின் வீதமாகக் கூறுவதாகும்.

இலங்கையில் பணவீக்க வீதத்தை அளவிடுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட பல விலைச் சுட்டெண்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கலாம்.

2001ம் ஆண்டு கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்2899.4 எனவும்

2002ம் ஆண்டு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 3176.4 எனவும் காணப்படுமாயின்

$$= \frac{(3176.4 - 2899.4) \times 100}{2899.4}$$

$$= 9.6$$

பணவீக்க வகைகள்

1. வெளிப்படைப்பணவீக்கமும் அடிப்படைப் பணவீக்கமும்
2. வெளித்தெரியும் பணவீக்கம்

ஒரு நாட்டில் வழமையாகக் கணிப்பிடப்படும் விலைச்சுட்டெண்ணின்படி உண்மையில் ஏற்படும் சதவீத அதிகரிப்பு "வெளித் தெரியும்" பணவீக்கம் ஆகும்.

நுகர்வோன் விலைச்சுட்டெண் / மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கி பயன்படுத்தி வெளித்தெரியும் பணவீக்கத்தை கணிப்பிடலாம்.

அடிப்படைப்பணவீக்கம்

வெளித்தெரியும் பணவீக்கத்தில் காணப்படுகின்ற நிரம்பல் அதிர்ச்சிகள் நிருவகிக்கப்படும் விலைகளிலான மாற்றங்கள் போன்ற தற்காலிக விலைத்தளம்பல்கள் அகற்றும் பொருட்டு சிலவகைப் பொருட்களின் விலைகளை நீக்கி கணிப்பிடப்படும் விலைச்சுட்டெண்ணின் போக்கு "அடிப்படைப் பணவீக்கம்" எனப்படும்.

பணவீக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள்

1. பொருட்கள், சேவைகளின் மொத்தக் கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பு
2. மொத்தக்கேள்வி மாறாத நிலையில் நிரம்பல் குறைவடைதல்.
3. அரசு, தனியார்துறை, நிறுவனங்களின் செலவுகள் அதிகரித்தல்.
4. அரசாங்கம் வங்கித்துறையிலிருந்து கடன் பெற்று வரவு செலவுத்திட்டத்தை நிதிப்படுத்துதல்
5. உற்பத்திச் செலவுகள் அதிகரித்தல்
6. இறக்குமதிப் பண்டங்களின் விலைகள் அதிகரித்தல்

பணவீக்கக் கோட்பாடுகள்

பணவீக்கக் கோட்பாடுகளை இரண்டாக வகைப்படுத்தலாம்.

1. கேள்வித்தூண்டற் பணவீக்கம்
2. செலவுத் தூண்டற் பணவீக்கம்

கேள்வித்தூண்டற் பணவீக்கம்

ஒரு பொருளாதாரம் நிறை தொழில் மட்டத்தில் இருக்கும் நிலையில் மொத்தக் கேள்வி அதிகரிக்குமானால் அது பொருளாதாரத்தில் மிகைக் கேள்வியை ஏற்படுத்தி விலை மட்டத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தும் இதுவே கேள்வித் தூண்டற்பணவீக்கமாகும்.

நிறை தொழில்மட்டம் என்பது குறுங் காலத்தில் மொத்த உற்பத்தியினை அதிகரிக்க முடியாத நிலையாகும்.

கேள்வித்தூண்டற் பணவீக்கத்திற்கான காரணங்கள்

1. பண நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு
2. அரசாங்க செலவுகள் அதிகரிப்பு
3. நாட்டில் முதலீட்டு மட்டம் அதிகரித்தல்
4. வேலைவாய்ப்புக்கள் அதிகரித்தல்
5. வீட்டுத்துறையினரின் வருமானம் அதிகரித்தல்
6. தனியார் நுகர்வுச் செலவுகள் அதிகரித்தல்

கேள்வித்தூண்டற் பணவீக்கம் கோட்பாட்டில் இரு அணுகுமுறைகள்

A. பண அளவுக்கோட்பாடு
B. கெயின்சிய விளக்கம்

கேள்விப் பணவீக்கச் செயற்பாட்டின் கெயின்சிய விளக்கம்

நிறைதொழில் மட்டத்திற்குரிய கேள்வி மட்டத்தைவிட அதிகளவு மொத்தக் கேள்வி உருவாதல் காரணமாக பணவீக்கம் ஏற்படுகிறது என்பது கெயின்சிய விளக்கம் ஆகும்.

நிறைதொழில் மட்டத்தை அடைந்த பின்னர் அதற்கு மேலும் மொத்தச் செலவு அதிகரிக்குமாயின் அது பணவீக்க இடை வெளியை உருவாக்கும் எனவும் நிரம்பல் மாறாத நிலையில் பொருட்கள் சேவைகளின் விலைகள் உயர்வடையும் எனவும் விளக்கப் படுகிறது.

பணவீக்க இடைவெளி = பொருளாதாரத்திலுள்ள மொத்தக் கேள்வி > நிறைதொழில் மட்டத்தை பேணுவதற்கு தேவையான மொத்தக் கேள்வி

இப் பணவீக்கச் செயற்பாட்டினைப் பின்வரும் வரைபடங்கள் காட்டுகின்றன.



கெயின்சிய விளக்கத்தில் மொத்தக் கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பு பின்வரும் அதன் உள்ளடக் கங்களில் அதிகரிப்பை ஏற்படுத்துகின்றன.

1. நுகர்வுச் செலவு அதிகரித்தல்
2. முதலீட்டுச் செலவு அதிகரித்தல்
3. அரசாங்கச் செலவு அதிகரித்தல்
4. தேறிய ஏற்றுமதி அதிகரித்தல்

செலவுத் தூண்டற் பணவீக்கம்

ஒரு பொருளாதாரத்தில் பொருட் கள் சேவைகளின் பொது விலைமட்டம் அதிகரிப்பதற்கு உற்பத்திச் செலவில் ஏற்படும் அதிகரிப்பே காரணமாகும் என்பதை இக் கோட்பாடு விளக்குகிறது. மொத்தக் கேள்வி மாறாத நிலையில் உற்பத்திச் செலவு அதிகரிக்குமானால் பொருட்கள், சேவை களின் உற்பத்தி குறைவடைந்து நிரம்பல் குறைவடையும். இதனால் விலைமட்டம் அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பதற்கு பிரதான காரணம் கூலி அதிகரித்தலாகும். அதனால் இது கூலித் தூண்டலின் காரணமாக ஏற்படும் பணவீக்க மாகக் காணப்படுகிறது.

செலவுத் தூண்டற் பணவீக்கத்திற்கான காரணங்கள்

1. கூலி அதிகரித்தல்
2. உள்ளீடுகளின் விலைகள் அதிகரித்தல்
3. அரசாங்க வரிகள் தீர்வைகள் அதிகரித்தல்
4. தொழிற்சங்க போராட்டங்கள்
5. இறக்குமதிப் பொருட்களின் விலைகள் அதிகரித்தல்

செலவு தள்ளும் பணவீக்கத்தில் முக்கிய மானதாக கூலித் தூண்டல் பணவீக்கம் அமை கிறது.

தமது உற்பத்தி திறனைவிட கூடுதலாக சம்பளத்தை அதிகரிக்க கூடிய பலம்வாய்ந்த தொழிற்சங்க ஊழியர்களால் கூலித் தூண் டல் பணவீக்கம் உருவாகிறது.

கூலி உயர்வதால் செலவு உயர்வடைந்து மொத்த நிரம்பல் கோடு இடதுபுறம் நகருவ தன் காரணமாக விலைமட்டம் உயருவதை வரைபடம் காட்டுகிறது.



பணவீக்கத்தின் பாதக விளைவுகள்

1. கடன் கொடுத்தோருக்கு பாதகமான விளைவுகள் ஏற்படும்

2. உற்பத்திச் செலவுகள் உயர்வடையும்
3. நீண்டகால முதலீடுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது
4. இலஞ்சமும், கறுப்புச்சந்தை நடவடிக்கைகளும்

பணவீக்கத்தின் சாதக விளைவுகள்

1. உயர்பண வீக்கம் உற்பத்தியைப் பெருக்கும்
2. வேலைவாய்ப்பை அதிகரிக்கும்
3. பண வருமானங்கள் உயர்வடையும்
4. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடையும்
5. பொருட்கள், சேவைகளுக்கான கேள்வி அதிகரிக்கும்

இலங்கையின் அண்மைக்கால பணவீக்கப் போக்குகள்

ஆண்டு	பணவீக்க வீதம் CCPI
2004	9.0
2005	11.0
2006	10.0
2007	15.8
2008	22.6
2009	3.4
2010	5.9

இலங்கையில் பணவீக்க வீதமானது 2008–2010 வரையான காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டுள்ளது. இதற்கான காரணங்கள்.

1. மத்திய வங்கியின் இறுக்கமான மற்றும் முன்மாதிரியுடனான நாணயக் கொள்கைகள்
2. முன்னேற்றமடைந்த உள்நாட்டு வழங்கல்கள்
3. நிர்வகிக்கப்பட்ட விலைகள் குறைக்கப்பட்டமை
4. தொழிலாளர் உற்பத்திதிறன் அதிகரித்தமை

Reference:

பணவீக்கம் பொதுவிலை மட்டம் - V.பரமேஸ்வரன்

பணவீக்கம் - S.ஜேசுதாஸ்

பணம், வங்கி, பொது விலை மட்டம் - வே.கருணாகரன்

"பசுமை நிறைந்த பொருளாதாரம் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி"

அ.மேரி ஜென்சியா
கி.பிரியந்தி
A/L com (2014)

பசுமைப் பொருளாதாரம் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இவை இணைந்து நிகழ்வது எப்படி?

"பசுமை நிறைந்த பொருளாதாரம்" – "நிலைத்து நிற்கும் அபிவிருத்தி" மற்றும் "பசுமைத் தேசியக் கொள்கை" என்பன ஒன்றுடன் ஒன்று இணைந்து நிகழ்வது எப்படி?

பசுமைநிறைந்த பொருளாதாரம் என அறியப்படுவது அடிப்படையில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி சுற்றாடலை பாதுகாத்துக் கொண்டு அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என்பதே இதன் கருத்தாகும். இதை மேலும் தெளிவுபடுத்துவதற்காகவே நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்ற கொள்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுபற்றிய ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் வேலைத்திட்டம் ஆராய்கின்றது. (UNEP) இவ் அமைப்பினரே இதைப் பரவலாக செயல்படுத்துகின்றனர். சூழல் பிரச்சினை அதிகரித்தல், பூகோள வெப்பநிலை அதிகரித்தல் சம்மந்தமாக உலகில் பல நாடுகளும் அவதானத்தை ஏற்படுத்தியுள்ளன. சுற்றாடலைப் பாதுகாக்கும் விதமாக மின் சக்தியைப் பாவித்தல், சுற்றாடலைப் பாதிக்கும் நடவடிக்கைகளை (Black Economy) கூடியவரை தவிர்த்து (எரிபொருள் தகனம், வாயு மாசடைதல், நீர் அசுத்தமடைதல், காடழித்தல்) புதிய தொழிற் சட்டங்களை அறிமுகப்படுத்துவதே இதன் நோக்கமாகும். பசுமையான பொருளாதாரம் என்ற கொள்கையில் இந்நாள்வரை பல்வேறு அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் இறுதி இலக்கு நிலைத்து நிற்கும் அபிவிருத்தியாகும். (Sustainable Development) சூழலை மிகவும் முக்கியத்துவமுடையதாக காட்டுவதற்காக பசுமை நிறை பொருளாதாரம் (Green Economy) பற்றி பேசப்படுகின்றது. உற்பத்தியின் போதும் வளங்களை உபயோகிக்கும் போதும் தொழிற்சட்டத்தை பாவிக்கும் போதும், மின்சார உற்பத்தியின் போதும் மற்றும் உபயோகப்படுத்தும் போதும் பசுமை உற்பத்தி பற்றி பேசப்படுகின்றது. சுற்றாடலுக்கு பாதிப்பு இன்றி பொருளாதாரத்தை மேம்படுத்தலே இதன் நோக்கமாகின்றது. நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை நோக்கி செல்லும் போது அபிவிருத்தி எந்தளவுக்கு சுற்றடாலை பாதித்துள்ளது என்பதை அறியலாம். இது பற்றிய கணிப்பே இங்கு ஆராயப்படுகின்றது. பொருளாதார செயற்பாடுகளின் போது சுற்றாடல் வளம் எவ்வளவு தூரம் பாதிப்படைகின்றது என்பதே இங்கு கணிக்கப்படுகிறது. வருட ஆரம்பத்தில் சுற்றாடலின் தன்மை மற்றும் வருட முடிவில் சுற்றாடலின் தன்மை இரண்டுக்கும் இடையில் ஒப்பீடு செய்யப்படுகின்றது.

உதாரணமாக : நீர் மாசடைதல் குறைவா? அதிகமா?
காற்று மாசடைதல் குறைவா? அதிகமா?
எரிபொருள் பாவனை குறைவா? அதிகமா?
காடுகளை அழித்தல் குறைவா ?அதிகமா?

ஆகிய எல்லா விடயங்களும் பட்டிய லிடப்படுகின்றது

பசுமைக் கணக்கியலில் குறிப்பிடத் தக்க பொருளாதார அபிவிருத்தி இருக்கு மாயின் அதுபற்றி ஆராயும் போது குறிப் பிடத்தக்க பொருளாதார வளர்ச்சி உள்ளதா இல்லையா என்பதைக் காணலாம். பாரிய சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அதன் பிரகாரம் பொருளாதார அபிவிருத்தியும் வேறுபடும் இந்த ஒப்பிடுதல் மூலம் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு, தகுந்த மாற்றம் என்ன என்பது விளங்குகிறது. நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு ஆராய்வுகளின் பின்பு திட்டங்கள் வேறுபடுத்தப்பட்டு புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. சுற் றாடலை பாதுகாக்காமல் செயற்படுத்தப்படும் பொருளாதார அபிவிருத்தி தகுதியற்றதால் கட்டாயமாக அதில் மாற்றம் ஏற்படுத்தப்படல் வேண்டும். இதற்காகவே பசுமை கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

நடைமுறையில் பசுமை பொருளா தாரத்தை கணக்கிடுதல் முடியாததொன் றானாலும் பல நாடுகள் பசுமை கணக்கிய லில் பொருளாதார செயற்பாடுகளை மதிப் பிட்டு கொள்வதற்காக முயன்றுள்ளன.

சில நாடுகளுக்குள் இதற்கு ஆரம்ப வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. உதாரணமாக பிலிப்பைன்ஸ் எதிர் காலத்தில் அநேகமாக எண்ணிக்கை முறையை ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு முன்னேற்றமடைந்ததுடன் சூழல் பொருளா தார விஞ்ஞானத்தை தேசிய கணக்கியலுக்கு பயன்படுத்தும்.

சூழல் மாசடைதலை அளவிட உண் மையில் முறையொன்று அவசியமாகும். இது வரை சூழல் மாசடைதலை அளவிட கடின மானாலும் தற்போது சிற்சில விடயங்களை ஓரளவுக்கேனும் அளவிட அவை பயன் படுத்தப்படுகின்றன. எதிர்காலத்தில் அதனை நடைமுறைப்படுத்த நாடுகள் நடவடிக்கை எடுக்கும் என எண்ணப்படுகின்றது. பொரு ளாதார சுதந்திரம் தொடர்பாக அண்மைக் காலமாக பேசப்பட்டு வருகின்றது. இவ்வா றான ஒன்று தேவைப்படுவது ஏன்?

அடம் ஸ்மித் வர்த்தகச் சந்தையில் காணக்கூடிய பிரதானமான குணவியல் பாகத் தான் பொருளாதார சுதந்திரத்தை குறிப்பிடுகிறார். சந்தை பொருளாதாரத்தின் பிரதானமான இரண்டு நன்மைகள் உள்ள தாக அவர் இணங்கண்டுள்ளார்.

முதலாவது "சந்தையின் வினைத் திறன் தன்மை" என்ற விடயம் சொத்துக்கள் பிரிந்து செல்வது மிகவும் துரிதமாக செயற் படுவதாகும். இது நிகழ்வதற்கு அடிப்படை யான காரணம் அதிகரித்த போட்டியாகும்.

உற்பத்தி குறைந்த செலவில் நடை பெறுதல் என்று இங்கு கருதப்படுகிறது. முழுமையான போட்டி சமநிலையே இங்கு காணப்படுகின்றது. சந்தை பொருளாதார முறை என்பது பூரண போட்டியுடன் செயற் படுகின்ற பொருளாதாரமுறை ஆகும். முழுமையான போட்டி நிறைந்த சமநிலை எல்லா சந்தர்ப்பங்களிலும் உற்பத்தி செலவு குறைந்த செலவில் குறிப்பிட்ட விலைக்கே விற்பனையாகும். இதன் மூலம் பெற்றுக் கொள்கின்ற நபருக்கும் நன்மை ஏற்படும் பொருளாதாரத்திற்கும் நன்மை ஏற்படும்.

அடுத்த விடயம் முழுமையான போட்டிச் சந்தைக்குள் பொருளாதார சுதந்திரம் மற்றும் செயற்படுத்தும் சுதந்திரம் ஆகிய விடயங்கள் இரண்டும் தான் இங்கு அடிப்படையாக இணங்காணப்படுகிறது. பாவனையாளர்களுக்கு எந்தவொரு பொருளையும் தேர்ந்தெடுக்க முடியும் அதை அவருக்கு சுயமாக பெற்றுக்கொள்ள முடியும். யாரும் பலவந்தப்படுத்த மாட்டார்கள்.

செயற்படுத்துவதும் அவ்வாறு தான் தாம் விரும்பிய தொழிற்சாலையில் முதலீடு செய்ய முடியும். அதற்கு யாரும் தடைவிதிக்க மாட்டார்கள். இந்த சுதந்திரம் என்கின்ற இலக்கு தான் “பொருளாதார சுதந்திரம்” பற்றிய அளவு கோலாகும்.

இது 10 அம்சங்களை கொண்டது.

1. வர்த்தக சுதந்திரம்
2. விற்பனை சுதந்திரம்
3. அரச மூலதன சுதந்திரம்
4. அரச துறையின் அளவு விஸ்தரிக்கப்படாமல் இருத்தல்
5. விலை கட்டுப்பாட்டாளர்களின் தலையீடின்மை
6. முதலீட்டு சுதந்திரம்
7. நிதியியல் அடிப்படை அரச நிர்வாகத்திலிருந்து விடுபடல்
8. சொத்து தொடர்பான சுதந்திரம்
9. ஊழலில் இருந்து விடுபடல்
10. கட்டுண்ட சந்தையிலிருந்து விடுபடல்

உசாத்துணை நூல்

அறிவுத் தேடல்

தோற்பது தவறல்ல, தோற்ற பின்பும் முயற்சி செய்யாதிருப்பதே தவறு.

கத்தி வெட்டிய பின் அது வெட்டும் என்று உணர்ந்து கொள்வது அனுபவம். கத்தி வெட்டும் என உணர்ந்து அதற்கேற்ப நடந்து கொள்வது தான் அறிவு.

புத்தகம் தான் சமூக மாற்றத்தின் திறவுகோல்

பொறுமை கசப்பானது தான் அதனால் தான் கடைப்பிடிப்பவர் குறைவு.

பொருளாதார வளர்ச்சியும் சாத்திய உற்பத்தியும்

ஜெ.அஸ்வினி
A/L com (2014)

பொருளாதார வளர்ச்சி என்பது பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யும் ஆற்றலின் நிலைபேறான விருத்தி ஏற்படல்/ மொத்த உள்நாட்டு உற்பத்தி /தேசிய ஆற்றல் உற்பத்தியில் உருவாகும் தொடர்ச்சியான அதிகரிப்பாகும். பொருளாதார வளர்ச்சி என்பது நீண்டகால விளைவாகும். ஆகையால், வியாபாரச் சுற்றோட்டத்திற்குள்ளே காணப்படும் வருமான மட்டத்தை மட்டும் பார்ப்பதால் பொருளாதார வளர்ச்சிச் செயற்பாட்டை இனங் காண முடியாது.

வியாபார சுற்றோட்டம் ஆக்கத்தின் குறுங்கால தளம்பலையே வெளிப்படுத்தும். பொருளாதார வளர்ச்சி மொத்த மெய் உள்நாட்டு உற்பத்தியின் / மொத்த மெய் தேசிய உற்பத்தியின் நீண்டகால வளர்ச்சி யையே எடுத்துக்காட்டும். அத்தோடு அந்த நாட்டு மக்களின் வாழ்க்கை தரத்தில் உரு வாகும் உயர்வையும் வெளிப்படுத்தும். இவ்வாறு மெய் உற்பத்தி நீண்ட காலத்தில் நிலைபேறாக விரிவாக்கம் பெறும் செயற் பாடு பொருளாதார வளர்ச்சி எனக் குறிப் பிடப்படும்.

சாத்தியமான உற்பத்தி பொருளா தாரத்தில் நீண்டகால உற்பத்தி இயலுமை / விலை உறுதி நிலையை பாதுகாத்து பொரு ளாதாரத்தால் உற்பத்தி செய்யக்கூடிய உச்ச மான பொருட்கள், சேவைகளின் அளவை வெளிப்படுத்தும். இந்த சாத்தியமான உற் பத்தி பூரண வேலை நிலைமை உற்பத்தி மட்டம் எனவும் குறிப்பிடப்படும். எல்லா வளங்களும் பூரணமாக உச்சமாக பயன் படுத்தப்பட்டபோது பெற்றுக்கொள்ளக் கூடிய மெய் ஆக்கமட்டம் இதனால் வெளிப்படுத்தப் படும். மெய் உள்நாட்டு உற்பத்தியின் நீண்ட கால போக்கை வெளிப்படுத்துவது பொரு ளாதாரத்தின் சாத்திய வெளியீட்டு மட்ட மாகும்.

இங்கு காலத்துடன் இணைந்து மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நடத்தையை காட்டுகின்ற வட்டச் செயற்பாடு வர்த்தக சகடோட்டம் என அழைக்கப்படும். இப்பேரின பொருளாதாரத்தின் குறுங்கால மற்றும் நீண்டகால நடத்தைகளின் தொடர்பினை விளங்கிக் கொள்வதற்கு வர்த்தக சகடோட் டத்தினை பயன்படுத்த முடியும்.



ஒரு பொருளாதாரத்தின் வளங்கள் பூரணமாகவும் அவற்றின் பொதுவான பயன் பாட்டு வீதத்திலும் பயன்படுத்தப்பட்டு பெறப்

படும் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி சாத்திய வள வெளியீடு ஆகும்.

பொருளாதாரத்தில் உண்மையான உற்பத்திமட்டம் பெரும்பாலும் சாத்திய உற்பத்தி மட்டத்தைவிடக் குறைவாகவோ அதிகமாகவோ இருக்கமுடியும். பொருளா தாரத்தின் உண்மையான உற்பத்தி மட்டம் குறுங்காலத்தில் தீர்மானமாகும் ஒரு மாறி யாகும். சமநிலை வருமானம் தீர்மானமாதல் பற்றிய கீன்சியரின் மொத்த கேள்வி பிர வேசம் குறுங்காலத்துக்கான கோட்பாடாகும்.

நிறைதொழில் மட்டத்திற்குரிய கேள்வி மட்டத்தைவிட அதிகளவு மொத்த கேள்வி வருவதால் பணவீக்கம் ஏற்படு கின்றது என்பது கெயின்சிய விளக்கம் ஆகும். நிறைதொழில் மட்டத்தை அடைந்தபின்னர் அதற்கு மேலும் மொத்த செலவு அதிகரிக்கு மாயின் அது பணவீக்க இடைவெளி எனவும் நிரம்பல் மாறாத நிலையில் பொருட்கள் சேவைகளின் விலைகள் உயர்வடையும் எனவும் விளக்கப்படுகின்றது. நிறைதொழில் மட்ட நிலையை பேணுவதற்கு தேவையான மொத்த செலவு / கேள்வி மட்டத்திற்கு மேலாக உயர்வடையும் மொத்த கேள்வியே பணவீக்க இடைவெளி ஆகும்.





பொருளாதார வளர்ச்சி செயற்பாட்டில் ஒரு நாட்டின் தலாவீத வருமானத்துக்கான உள்நாட்டு தேசிய உற்பத்திக்குள்ளே அடங்கும் பொருட்கள் சேவைகளின் அளவு, காலத்துடன் தொடர்ச்சியாக உயர்வடையும். அவ்வாறு தொடர்ச்சியாக உயர்வடைதல் காரணமாக மக்களுடைய சாதாரண வாழ்க்கை மட்டத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படுகின்றது.

உண்மையான உற்பத்தி மட்டம் மொத்த கேள்வியின் பருமனால் நிச்சயிக்கப் படும். சமநிலை உற்பத்திமட்டம் / உண்மை யான உற்பத்தி மட்டம் பொருளாதாரத்தின் ஆற்றல் உற்பத்தி மட்டத்தை சுற்றி தளப்பம டையும். உதாரணமாக முதலீட்டுக்கான கேள்வி உயர்வடைந்தால் அதன் குறுங்காலத் தாக்கம் மொத்த கேள்விமீதே ஏற்படும்.

குறுங்கால மொத்த கேள்வி சார்பு வலப்புறம் பெயரும். சமநிலை உற்பத்தி மட்டத்தின் உயர் பெறுமானத்தில் ஆற்றல் உற்பத்தி மட்டம் குறுங்காலத்தில் மாற்ற மடைவதில்லை. சமநிலை வருமான மட்டத் தில் குறுங்கால மாற்றம் / வியாபார சகடத் தின் நடத்தையை கீன்சியரின் மாதிரியை அடிப்படையாக கொண்டு மொத்த கேள்வி யில் உருவாகும் மாற்றத்துடன் விளக்க முடியும். ஆனால் வருமான மட்டத்தின் நீண்ட கால போக்கு மொத்த கேள்வி மாதிரியை பயன்படுத்தி விளக்கமுடியாது. இவ்வாறு பொருளாதாரத்தின் உற்பத்தி மட்டத்தில் நீண்டகால போக்கை விளக்குவது வளர்ச்சிக் கோட்பாட்டின் ஒரு நோக்கம் ஆகும்.

சந்தைப் பொருளாதாரம் சமவுடமை பொருளாதாரத்திற்கு சந்தர்ப்பமா? சவாலா?

க.ஆரபி
A/L com (2015)

சந்தைப் பொருளாதாரம் என்பது தனிநபர்கள் சொத்துக்களை உடைமை செய்வதற்கான உரிமையும், இலாப நோக்கம் கொண்ட அமைப்பாக காணப்படுகிறது. இங்கு விலையின் அடிப்படையில் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். உற்பத்தி சாதனங்கள் இலாப நோக்கத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இச்சந்தைப் பொருளாதாரத்தில் தனிநபர் சொத்துடமை காணப்படுகிறது. இது சந்தைப் பொருளாதாரத்தின் அடிப்படைப் பண்பாகும். இதன் கருத்து யாதெனில் உற்பத்திக் காரணிகள் வளங்கள் தனியாருக்கு சொந்தமானதாக காணப்படல். அதாவது இதனடிப்படையில் உற்பத்தி வளங்கள், ஆதனம், வளங்களை விற்க, ஒப்படைக்க உரிமை உண்டு. அது மட்டுமல்லாமல் தனியுடமை, பங்குடமை, சொந்தக் கம்பனிகளை உருவாக்க உரிமை உண்டு. மேலும் இங்கு போட்டித்தன்மை காணப்படுவதால் சந்தைப் பொருளாதாரத்தில் விருப்பமான முறையில் வள உரிமையாக்கவும், பயன்படுத்தவும் முடியுமாகையால் இந்த போட்டியை எதிர்கொள்ள சுதந்திரமாக செயல்படும் கொள்வனவாளர், நுகர்வோர் அதிகம் காணப்பட வேண்டும். மற்றும் கைத்தொழிலுக்குள் உட்பிரவேசிக்கவும், வெளியேறவும் சுதந்திரம் காணப்பட வேண்டும். ஆகிய 2 நிபந்தனைகளை பூர்த்தி செய்தல் வேண்டும். மற்றும் சந்தைப் பொருளாதாரத்தின் இன்னொரு பண்பாக விலைப் பொறிமுறையின் செயற்பாடு உள்ளது. அதாவது, அடிப்படை பொருளாதார பிரச்சினைகளுக்கு விலை முறையே வழிகாட்டுகிறது. மேலும் இங்கு விலைப் பொறிமுறையானது மிக முக்கிய தொழில்களான தகவல் வழங்கல், பங்கீட்டு, ஊக்குவிப்பு தொழிற்பாடு ஆகியவற்றை மேற்கொள்கிறது. இவற்றில் தகவல் வழங்கல் என்பது, சந்தையில் நுகர்வோர், உற்பத்தியாளர், காரணி வழங்குனருக்கு தீர்மானம் மேற்கொள்ள உதவுகிறது. மேலும் பங்கீடு என்பது, விலையின் மூலம் அருமையான வளங்களை மாற்றுப் பயன்பாடிடையே பங்கீடு செய்ய முடியும். அத்துடன் ஊக்குவிப்பு என்பது சந்தை முறையாகவும், வினைத்திறனுடனும் இயங்க வேண்டுமாயின் விலைச் சமிக்ஞைகள் உரிய துலங்களை காட்ட வேண்டும் என்பதாகும். இவ்வாறு சந்தையில் பண்புகள் காணப்படுகின்றன. ஆகவே சந்தை பொருளாதாரம் சிறந்த பொருளாதாரம் எனக் கருத்திற்கொள்ள முடியும்.

சமவுடமை பொருளாதாரம் என்பது குறித்த நிர்வாகியினால் மத்திய / திட்டமிடல் குழுவினால் வழங்கப்படும் கட்டளைக்கு ஏற்ப திட்டமிடல் அதிகாரிகளினால் பொருளாதார தீர்மானங்களை மேற் கொள்வதும், சமூக நோக்கம் கொண்டது மான பொருளாதாரம் இதுவாகும். இங்கு அரசினால்/ ஏனைய திட்டமிடல் அதிகாரிகளினால்

சமூகத்தில் வளப்பகிர்வு தொடர்பான அடிப்படைப் பிரச்சினைகள் தீர்மானம் மூலம் தீர்க்கப்படுகின்றன. மற்றும் இங்கு உற்பத்தி சாதனங்கள் சமூக நோக்கத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இங்கு சமவுடமை பொருளாதாரத்தின் பண்புகளாக ஊழியத்தை தவிர்ந்த ஏனைய காரணிகள் அரச உடமையாக இருத்தல், சுய நலத்திற்கு பதிலாக பொதுநலனை அடிப்படையாகக் கொண்ட முறை காணப்படல், போட்டியற்ற நிலை, தனியார் சுதந்திரம் வரையறுக்கப் படல் ஆகியவற்றை குறிக்கும். இங்கு போட்டியற்ற நிலை என்பது இப் பொரு ளாதாரத்தில் அரசு பெருமளவில் உற்பத்தியை மேற் கொள்வதால் இங்கு அரசுடன் போட்டி போட எந் நிறுவனமும் முன்வராது. அதனால்தான் இங்கு போட்டியற்ற நிலை காணப்படுகிறது. மேலும் இங்கும் விலையின் தொழிற்பாடு காணப்படுகிறது. அதனாலும் சிறிய அளவிலே உள்ளது எனலாம்.

எனினும் சமவுடமை பொருளாதார மானது சந்தைப் பொருளாதாரத்தை விட சிறப்பானது எனக் கூறமுடியாது. சந்தைப் பொருளாதாரத்தை போன்று கேள்வி நிரம்பல் சக்திகளினால் இங்கு விலை நிர்ண யிக்கப்படுவதில்லை. இங்கு விலைகள் திட்ட அமுலாக்கம் செய்வதற்கான கருவியாக மட்டுமே காணப்படுகிறது.

இவ்வாறு சமவுடமை காணப்பட்டா லும் சமவுடமையை விட சந்தை பொருளா தாரமே சிறப்பான நிலையில் காணப்படுகி றது எனக் கூறமுடியும். சமவுடமையில் வளப் பகிர்வு தொடர்பான தீர்மானங்கள் அரச அதிகாரிகளினால் திட்டமிடப்படும். அதனால் இங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் எல்லாம் முழுமையாக சரியானவையாக எடுக்கலாம் எனக் கூறமுடியாது. மேலும் கூறியிருப்பதைப் போல இங்கு போட்டியற்ற நிலை காணப் படுவது நல்லது போல காட்டியிருந்தாலும் இங்கு அரசு மட்டுமே உற்பத்தியை மேற் கொள்வதால் இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் எல்லாமே தரமானவை எனக் கூறமுடியாது. அரசுடன் போட்டிபோட எந்த நிறுவனமும் முன்வராத காரணத்தால் சில வேளைகளில் சமூகத்திற்கு தீங்கான வகையில் பொருட்கள் உற்பத்தி செய்வார்கள்.

உதாரணமாக சமூகத்திற்கு தீங்கான பொருட்கள் எனக் கருதினால் மதுபானம், சிகரெட், கஞ்சா போன்றவற்றைக் கருத முடியும்.

இவற்றை அரசினால் மட்டுமே உற்பத்தி செய்யப்படும். ஆனாலும் தனியார் இவற்றை உற்பத்தி செய்தாலும் இவற்றிற்கு அனுமதி அளிப்பது அரசு மட்டுமே எனக் கூற முடியும். இவ்வாறு சமவுடமை பொருளா தாரம் ஒரு சிறந்த பொருளாதாரமாக அமைய மாட்டாது. சந்தைப் பொருளாதாரத்தில் போட்டி காணப்படுவதால் தரமான பொருட் களே அதிகளவில் உற்பத்தி செய்யப்பட முடியும். அத்துடன் இங்கு அரசின் தலையீடு வரையறுக்கப்பட்டு காணப்படுகிறது. இருந் தாலும் முற்றாக அரசின் பணி இல்லை எனக் கூறமுடியாது. சந்தைப் பொருளாதார முறையில் அடிப்படையான தனியார் சொத்துரி மையை வரைவிலக்கணம் செய்வதும், பாதுகாத்தளித்தலும் அரசு செய்ய வேண்டிய முக்கிய பணியாகும். மேலும் வரி அறவிடல், சட்ட நீதியைப் பெறல், பொதுப் பொருட்களை உற்பத்திசெய்தல், தேசிய பாதுகாப்பு போன்ற பணிகளையும் தனியுரிமையில் அரசு செய்கி றது. மேலும் சந்தைப் பொருளாதாரம் ஒரு இலாப நோக்கம் கொண்ட அமைப்பாகும்.

இதனால் இங்கு கிடைக்கும் இலாபத்தில் புதிய கண்டு பிடிப்புக்களை மேற்கொள்ளல், சந்தைத் தகவல்களை பெறல், நிச்சயமற்ற தன்மையை அறிய உதவும், வள ஒதுக்கீட்டை அதிகரிக்கும், இவ்வாறு பயன் தரத்தக்க வகையில் இலாபம் உள்ளது. இதனால் உயர் தொழில்நுட்பம் முகாமைத்துவ வளர்ச்சி ஏற்படுவதோடு நவீன போக்கில் செல்கிறது எனலாம். சந்தை முறையே சமவுடமையை விட எல்லோருக்கும் முக்கியம் பெறுகிறது.

ஏன்? அப்படிக் கூறமுடியாது. சந்தை பொதுப் பொருட்களை உற்பத்தி செய்ய வள ஒதுக்கீடு இடம்பெறுகிறது. அதனால் எப்போதும் வள ஒதுக்கீடு செயல்திறனாக அமையமாட்டாது. காரணம், வளங்களை செயல்திறன் மிக்க விதத்தில் ஒதுக்கீடு செய் கிறதென கூறமுடியாது. பொதுப் பொருட் களை தனியார் துறை வழங்காது. இதனை அரசு மட்டுமே மேற்கொள்ள முடியும். இவற்றை செய்யாவிட்டால் தனியார் துறை தனித்து இயங்க முடியாது. அதேபோல இங்கு இலாப நோக்கம் அதிகரிப்பதால் சமூக நலப் பண்டங்கள் சரியான விதத்தில் முழுமை யாக மக்களுக்கு வழங்கப்படாது. ஆனால் சமவுடமையில் அப்படியில்லாத சமூக நோக்கம் இருப்பதால் ஏழை வறிய மக்களுக்கு கூட அரசு அத்தியாவசியப் பண்டங்களை வழங்கத் தவறுவதில்லை. அரசு இவ்வாறு வழங்கா விட்டால் ஒரு நாடு வறுமையான நாடாக மாறிவிடும்.

மேலும், சந்தை முறைமையில் இலாப நோக்கம் இருப்பதால் புதிய கண்டு பிடிப்பு காணப்படும் எனக் கூறினால் அது பிழையான கருத்து என்றே கூற முடியும். ஏனெனில் இங்கு இலாப நோக்கம் காரண மாக தவறான வள ஒதுக்கீடு இடம்பெறுவ தால் சமூகத்திற்கு தீங்கான பொருட்கள் உற்பத்தி செய்யப்படல். மேலும் இங்கு போட்டி காணப்படுவதால் தரமான பொருட் கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படும் எனக் கூறப்பட்டது. அதனால் அது தவறான கருத்து. அங்கர் கம்பனி ஒரு தனியார் கம்பனி அந்த கம்பனி கூட இன்னும் பல கம்பனிகளுடன் போட்டி போடுகின்றன. இருந்தாலும் அங்கர் மாவில் இரசாயனம் கலந்து இருப்பதை கண்டுபிடித்தது அரசாங்கம் மட்டுமே. அதனால் தனியாராக இருந்த அங்கர் கம்பனி இலாப த்தை கருத்திற் கொண்டதாக இருக்கிறதே தவிர மக்களின் உடல் நலப் பாதுகாப்பை கவனத்தில் கொள்ளவில்லை. எனவே இங்கு தரமான பொருள் உற்பத்தி செய்யப்படுமென கூற முடியாது. சமவுடமை பொருளாதாரத் தில் சொத்துக்கள் யாவும் அரச உடமையாக இருப்பதால் வர்க்க வேறுபாடுகள், வருமான ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டமை மேலும், இங்கு பொது நன்மை உச்சப்படுத்தப்படும். பொதுப் பண்டங்கள் போதுமான அளவில் வழங்குகின்றமை.

உ–ம் : இலங்கையில் வீதிகளை புனரமைப்பு செய்தமை, விமான நிலையம் அமைக்கப் பட்டமை, துறைமுகம் அமைக்கப்பட்டமை.

சமவுடமையில் இலாபம், விலை என்பவற்றின் பங்கு ஏதும் இல்லையென கூற முடியாது. ஏனெனில் ஒரு பொருளாதாரம் தொடர்ந்து இயங்கச் செய்ய தீர்மானிக்கப் படும் விலையில் இலாபம் உள்ளடக்கப்பட்டு இருக்கும். ஆனால் இவ் விலைகள் கட்டுப் பாட்டு விலைகளாக காணப்படும்.

அதாவது சமவுடமையில் விமர்சனங் கள் எதுவும் இல்லையா? நிறைய காணப்படு கிறது. வெளிவாரி விடயங்களை அவதானிப்

பதற்கான வாய்ப்பு ஏற்படாமை, பொதுப் பண்டங்களின் உற்பத்திக்காக வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படாமை, மத்திய திட்டமிடல் அனைத்து தீர்மானம் எடுப்பதால் மிகச் சிறந்த தீர்மானம் எடுக்க முரண்பாடு ஏற்படும். இவ்வாறான காரணிகளால் சமவுடமை பொருளாதாரம் தோல்வியை சந்திக்க வாய்ப்பு இருக்கும். சமவுடமையில் சிறிதளவேனும் இலாபம் இருக்கும் என்று சொல்கிறீர்கள். ஆனால் அங்கர் கம்பனியின் அங்கர் மாவில் இரசாயனம் இருக்கின்றது என கண்டுபிடிக்க ஏன் இவ்வளவு காலம் எடுத்தது? ஏனெனில், இங்குள்ள இலாபம் அரசிற்கு மட்டுமே சென்றால் எவ்வாறு புதிய கண்டு பிடிப்புக்களை செய்ய முன்வருவார்கள். அது மட்டுமல்லாமல் அரசாங்கம் வீதி அமைக்கின்றது எனக் கருதினால் அது என்ன எங்களிடம் அறவிட வரியிலா வீதிகளை அமைக்கும் இல்லை ஏனைய நாடுகளிடம் கடன் பெற்றுத்தான் இவற்றை செய்ய முன் வருகிறார்கள். அவ்வாறிருக்க அரசு எல்லாமே செய்ய முன்வருகின்றது எனக் கூறமுடியாது. அதுமட்டுமல்லாமல் உலக நாடுகளில் எல்லா நாடுகளுமே சமவுடமையிலிருந்து சந்தையை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கின்றன அவ்வாறிருக்க வடகொரியா, கியூபா ஆகிய இரண்டு நாடுகள் மட்டுமே சமவுடமையில் இருக்கின்றன. ஏனைய ரஷ்யா, ருமேனியா, பல்கேரியா, சீனா, யப்பான் போன்ற நாடுகள் சந்தைப் பொருளாதாரத்திலே காணப்படுகின்றன. எதிர்வரும் வருடங்களில் வட கொரியா, கியூபா போன்ற அரச உடமை நாடுகளும் சந்தைக்கு மாறினால் சமவுடமை பொருளாதாரம் என்ற ஒரு முறையே அழிய வாய்ப்பு கூடும்.

"எனவே சந்தைப் பொருளாதாரமானது சமவுடமை பொருளாதாரத்திற்கு சந்தர்ப்பமாக / சவாலாகவா காணப்படும் என்பதில் பெருமளவில் சவாலாகவே உள்ளது எனலாம்"

அடிப்படைப் பொருளாதார பிரச்சினைக்கு சந்தை, சமவுடமை பொருளாதாரம் தீர்வு காணும் முறை

01. என்ன பொருளை எந்தளவு உற்பத்தி செய்தல்

சந்தைப் பொருளாதாரம்

இலாப நோக்கம் கொண்ட இப் பொருளாதாரமானது விலைப்பொறி முறையின் அடிப்படையில் தீர்வுகாணும். அதாவது, எப்பொருள் இலாபம் தரக்கூடியதாக உள்ளதோ அப்பொருளை தெரிந்தெடுத்து உற்பத்தி செய்யும். இதனை விலை சமிக்ஞை மூலம் உற்பத்தியாளர், நுகர்வோர் அறிந்து கொள்வார்.

சமவுடமைப் பொருளாதாரம்

சமூக நலனை அடிப்படையாக கொண்டு எந்தப் பொருள் சமூகத்திற்கு அவசியமானதும், அத்தியாவசியமாய் இருக்கின்றதோ அப்பொருளை தெரிந்தெடுத்து உற்பத்தி செய்யும்.

உ-ம்: 1. உணவும் போசாக்கும்
2. கல்வி
3. சுகாதாரம் மற்றும் மருத்துவம்

02. எவ்வாறு உற்பத்தி செய்தல்

சந்தைப் பொருளாதாரம்

காரணிச் சந்தையில் நிலவும் காரணி விலைகளின் அடிப்படையில் எவ்வாறு உற்பத்தி செய்தல் என்ற பிரச்சினை தீர்க்கப்படும். ஒப்பீட்டு ரீதியில் அருமையற்ற காரணியின் விலை குறைவடைவதுடன் அருமையான காரணியின் விலை உயர்வாக இருப்பதால் சந்தைப் பொருளாதாரம் குறைந்த செலவில் பண்டங்களை உற்பத்தி செய்யும் நோக்கில்

உற்பத்தி சார்ந்த தொழில்நுட்ப முறை ஒன்றினைத் தெரிவு செய்யும்.

சமவுடமைப் பொருளாதாரம்

சமூக நலனை மையமாகக்கொண்ட இப்பொருளாதாரம் சமூகத்தில் எந்தக் காரணி அதிகமாக காணப்படுகின்றதோ அக் காரணி அடிப்படையில் குறிப்பிட்ட தொழில் நுட்ப முறையை தெரிவுசெய்யும். உற்பத்தி நிறுவனங்கள் அரச முயற்சியாக இருப்பதனால் மத்திய திட்டமிடல் குழுவே தமது கட்டளைகளின் மூலம் தொழில்நுட்ப முறையை தீர்மானிக்கும்.

யாருக்கு உற்பத்தி செய்தல்

சந்தைப் பொருளாதாரம்

இப் பிரச்சினை தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். தனிநபர் வருமானமானது,

1. காரணிச் சந்தையில் நிலவும் விலை
2. அவ்விலையில் பரிமாற்றப்படும் காரணிகளின் அளவு.

என்பவற்றால் தீர்மானிக்கப்படும். இப் பிரச்சினையானது யார் கூடிய விலை கொடுத்து வாங்கத் தயாராக உள்ளார்களோ அவர்களுக்கே பொருட் பங்கீடு இடம்பெறும்.

சமவுடமைப் பொருளாதாரம்

சமூக நலனை அடிப்படையாகக் கொண்ட இப்பொருளாதாரம் யாருக்கு பொருள் அவசியமாக காணப்படுகிறதோ, அவர்களுக்கே பொருட்களை பகிர்ந்தளிக்கும். இப்பிரச்சினைக்கு மத்திய திட்டமிடல் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட காரணி விலையின் அடிப்படையில் தீர்வு காணும்.

உசாத்துணை : அறிவுத்தேடல்

குற்றத்தை ஒப்புக் கொள்வது நேர்மையின் முதற்படி
நல்ல மனச்சாட்சி மென்மையான தலையணை
அச்சம் இல்லாதவன் ஆண்டவன் மட்டும்
ஏக்கமும் தூக்கமும் ஊக்கமுள்ளோருக்கு இல்லை
எண்ணமே செய்கைக்கு அடிப்படை
கோபமும், பொறாமையும் மனிதனை கொன்றுவிடும்
உண்மையை நேசி பிழையை மன்னித்துவிடு.

பேரினப் பொருளாதார சமநிலை

போ. ஜீனா
A/L com (2014)

ஒருநாட்டின் உற்பத்தி (y) மொத்த வேலை மட்டத்துக்கு சமமாகின்ற நிலைமை பேரினப் பொருளாதார சமநிலை எனக் கூறப்படும்.

பேரினப் பொருளாதார சமநிலையினை பின்வரும் இரு முறைகளில் விளக்கலாம்.

- வருமானம் – செலவு அணுகுமுறை
- வெளிப்பாய்ச்சல் – உட்பாய்ச்சல் அணுகு முறை

மொத்த செலவின் கூறுகள்

பொருட்கள் சேவைகளின் உற்பத்தியின் போது உற்பத்தி பெறுமதிக்கு சமனான வருமானம் ஒன்று உருவாகும் அதேவேளை அவ் வருமானம் மறுபக்கத்தில் பொருட்கள் சேவை களுக்கான கேள்வி என்றவகையில் செலவிடப் படும்.

மொத்த செலவின் மாறிகள்

- தனியார் நுகர்வுச் செலவு
- அரச நுகர்வுச் செலவு
- முதலீட்டுச் செலவு
- தேறிய ஏற்றுமதி

பேரினப் பொருளாதார சமநிலையை சமன்பாட்டு அடிப்படையில் கணித்தலுக்குரிய சில எண்ணக்கருக்கள்.

1) எல்லை நுகர்வு நாட்டம் (MPC)

வருமான மாற்றத்தில் எத்தனை பங்கு நுகர்வுக்குச் செலவு செய்யப்படுகின்றது என்பதனை எல்லை நுகர்வு நாட்டம் வெளிப்படுத்தும். இதனை பின்வரும் சமன்பாட்டில் காட்டலாம்.

$$MPC = \frac{\Delta c}{\Delta y} \quad or \quad MPS = \frac{\Delta S}{\Delta yd}$$

2) எல்லை சேமிப்பு நாட்டம் (MPS)

வருமான மாற்றத்தில் எத்தனை பங்கு சேமிப்புக்குச் செலவு செய்யப்படுகின்றது என்பதனை எல்லை சேமிப்பு நாட்டம் வெளிப்படுத்தும். இதனை பின்வரும் சமன்பாட்டில் காட்டலாம்.

$$MPS = \frac{\Delta s}{\Delta y} \quad or \quad MPS = \frac{\Delta s}{\Delta yd}$$

$MPC + MPS = 1$ என்பதை நிறுவுதல்.

$$Y = C + I$$
$$S = I$$
$$Y = C + S$$
$$\Delta Y = \Delta C + \Delta S$$
$$\frac{\Delta Y}{\Delta Y} = \frac{\Delta C}{\Delta Y} + \frac{\Delta S}{\Delta Y}$$
$$1 = MPC + MPS$$

3) சராசரி நுகர்வு நாட்டம் (APC)

வருமானத்தில் எத்தனை பங்கு நுகர்வுக்காகச் செலவு செய்யப்படுகின்றது என்பதனை சராசரி நுகர்வு நாட்டம் வெளிப் படுத்தும். இதனை பின்வரும் சமன்பாட்டில் காட்டலாம்.

$$APC = \frac{c}{y} \quad or \quad APC = \frac{c}{yd}$$

4) சராசரி சேமிப்பு நாட்டம் (APS)

வருமானத்தில் எத்தனை பங்கு சேமிப்புக்காகச் செலவு செய்யப்படுகின்றது என்பதனை சராசரி சேமிப்பு நாட்டம் வெளிப் படுத்தும். இதனை பின்வரும் சமன்பாட்டில் காட்டலாம்.

$$APS = \frac{s}{y} \quad or \quad APS = \frac{s}{yd}$$

APC + APS = 1 என்பதை நிறுவுதல்

$$Y = C + I$$
$$S = I$$
$$\frac{Y}{Y} = \frac{C}{Y} + \frac{S}{Y}$$
$$1 = APS + APS$$

5) நுகர்வுத் தொழிற்பாடு

பொருளாதாரம் ஒன்றில் வருமானத் துக்கும் நுகர்வுக்கும் இடையிலான தொடர் பைக் கூறும் தொழிற்பாடு நுகர்வுத் தொழிற் பாடு ஆகும்.

$$c = a + by \quad or \quad c = a + byd$$

6) சேமிப்புத் தொழிற்பாடு

பொருளாதாரம் ஒன்றில் வருமானத் துக்கும் சேமிப்புக்கும் இடையிலான தொடர் பைக்கூறும் தொழிற்பாடு சேமிப்புத் தொழிற் பாடு ஆகும்.

$$s = -a + (1-b)y \quad or \quad s = -a + (1-b)yd$$

7) வரிப்பெருக்கி

ஒரு பொருளாதாரத்தில் அரசினால் விதிக்கப்படும் வரியில் (நேர்வரி) ஏற்படும் மாற்றமானது நாட்டின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதனை அளவிட்டுக் கூறுவது வரிப் பெருக்கி எனப்படும்.

$$KT = \frac{-MPC}{MPS} \quad or \quad KT = \frac{-b}{1-b}$$

8) முதலீட்டுப் பெருக்கி

முதலீடு மட்டும் மாற்றமடைய சம நிலைத் தேசிய வருமானம் எவ்வாறு மாற்ற மடையும் என்பதனை அளவிட்டுக் கூறுவது முதலீட்டுப் பெருக்கி எனப்படும்.

- எளிய பொருளாதாரமொன்றில் முதலீட் டுப் பெருக்கியானது பின்வருமாறு கணிப் பிடப்படும்.

$$KI = \frac{1}{MPS}$$

- மூடிய பொருளாதாரமொன்றில் முதலீட் டுப் பெருக்கியமானது பின்வருமாறு கணிப்பிடப்படும்.

yd சார்பாக

$$KI = \frac{1}{MPS + (MPC \times MPT)}$$

y சார்பாக

$$KI = \frac{1}{MPS + MPT}$$

- திறந்த பொருளாதாரமொன்றில் முத லீட்டுப் பெருக்கியானது பின்வருமாறு கணிப்பிடப்படும்

yd சார்பாக

$$KI = \frac{1}{MPS + (MPC \times MPT) + MPM}$$

y சார்பாக

$$KI = \frac{1}{MPS + (MPS \times MPT) + MPM}$$

9) தன்னிச்சையான செலவு

வருமானம் பூச்சியமான நிலையில் காணப்படுகின்ற செலவுகள் தன்னிச்சையான செலவுகள் எனப்படும்.

உ–ம்: C = 100 + 0.8 yd
I = 100 மில்லியன் ரூபா
G = 100 மில்லியன் ரூபா

தன்னிச்சையான செலவுகளின் பெறுமதி யாது?

$$= C + I + G$$
$$= 100 + 100 + 100$$
$$= 300$$ மில்லியன் ரூபா

10) எதிர்பாராத கையிருப்புத் திரட்சி

நிறைதொழில் மட்டத் தேசிய வருமானத்திற்கும் சமநிலைத் தேசிய வருமான மட்டத்திற்கும் இடையிலான வித்தியாசத் தொகை எதிர்பாராத கையிருப்புத் திரட்சி ஆகும்.

எதிர்பாராத கையிருப்பு திரட்சி = நிறைதொழில் மட்ட வருமானம் - சமநிலைத் தேசிய வருமானம்

வருமானத்திற்கும் நுகர்வுச் செலவுகளுக்கும் இடையிலான தொடர்பு



- ❋ 45° கோட்டிற்கு மேலாக நுகர்வுக்கோடு அமைகின்ற போது சேமிப்பு பெறுமதி எதிர்க்கணியமானதாய் அமையும்.
- ❋ 45° கோட்டினை நுகர்வுக்கோடு வெட்டு கின்ற சந்தர்ப்பத்தில் சேமிப்புக்கள் பூச்சியமானதாக அமையும்.
- ❋ 45° கோட்டிற்கு கீழாக நுகர்வுக்கோடு அமைகின்றபோது மேலதிக வருமானங் கள் சேமிக்கப்படுகின்றதாய் அமையும்.

எளிய பொருளாதார சமநிலை

சேமிப்பு உள்ள எளிய பொருளாதாரத்தின் வருமான சுற்றோட்ட வரைபடம்.



வீட்டுத்துறை, நிறுவனத்துறை ஆகிய இரண்டு துறைகளை மட்டும் கொண்டுள்ளதும் வீட்டுத்துறையானது தாம் பெற்றுக் கொள்ளுகின்ற வருமானத்தில் ஒரு பகுதியினை நுகர்வுக்காகச் செலவு செய்து கொண்டு மிகுதியினை சேமிக்கின்ற பொருளாதாரமாக சேமிப்பு உள்ள எளிய பொருளாதாரம் அமையும்.

சேமிப்புள்ள எளிய பொருளாதாரத்தின் வருமான சுற்றோட்ட சமநிலைக்கான நிபந்தனைகள்.

1) மொத்த வருமானம் = மொத்த செலவு

$$y = E$$
$$E = C + I$$
$$\boxed{y = C + I}$$

2) வெளிப்பாய்ச்சல் (W) = உட்பாய்ச்சல் (J)

சேமிப்பு = முதலீடு

$$\boxed{S = I}$$

உட்பாய்ச்சல் :- சுற்றோட்டத்தினுள் நிதி உள் வருதல் உட்பாய்ச்சல் எனப்படுகின்றது.

Eg:- I (முதலீடு)

வெளிப்பாய்ச்சல் :- சுற்றோட்டத்திலிருந்து நிதி வெளியேற்றம் இடம்பெறுதல் வெளிப் பாய்ச்சல் எனப்படுகின்றது.

Eg:- S (சேமிப்பு)

உதாரணம் :- எளிய பொருளாதாரம் ஒன்றில் நுகர்வு மற்றும் முதலீடு தொடர்பான தகவல்கள் பின்வருமாறு அமைகின்றது.

$C = 100 + 0.8y$

$I = 100$ மில்லியன் ரூபா

1) சமநிலைத் தேசிய வருமான மட்டம் யாது?

$y = C+I$

$y = 100 + 0.8y + 100$

$y = 200 + 0.8y$

$y - 0.8y = 200$

$0.2y = 200$

$y = \frac{200}{0.2}$

$= 1000$ மில்லியன் ரூபா

2) சமநிலையின்போது நுகர்வுச் செலவின் பெறுமதி யாது?

$C = 100 + 0.8 \times 1000$

$= 100 + 800$

$= 900$ மில்லியன் ரூபா

3) முதலீட்டுப் பெருக்கியை மதிப்பீடு செய்க.

$S = -100 + 0.2y$

$KI = \frac{1}{MPS}$

$= \frac{1}{0.2}$

$= 5$

4) இங்கு முதலீடு 200 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்குமாயின் சமநிலை வருமானத்தில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் விளைவின் பின் புதிய சமநிலைத் தேசிய வருமானம் யாது?

$\Delta y = \Delta I \times KI$

$= 200 \times 5$

$= 1000$ மில்லியன் ரூபா

$Y = 1000 + 100$

$= 1100$ மில்லியன் ரூபா

தேசிய வருமானம் 100 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்கும்

5) சமநிலையின் போது உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சலுக்கு சமன் என்பதை நிறுவுக

$S = -100 + 0.2y$

$= 100 + 0.2 \times 1000$

$= -100 + 200$

$= 100$ மில்லியன் ரூபா

வெளிப்பாய்ச்சல் = உட்பாய்ச்சல்

$S = I$

$100 = 100$

அரசதுறை உள்ள மூடப்பட்ட பொருளாதார சமநிலை

வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசாங்கத்துறை ஆகிய மூன்று துறைகளின் பொருளாதாரச் செயற்பாடுகள் காணப்படுமேயானால் அது அரசதுறை உள்ள மூடப்பட்ட பொருளாதாரம் எனப்படும். அரசதுறை உள்ள மூடப்பட்ட பொருளாதாரத்தின் வருமான சுற்றோட்ட வரைபடம்.



அரசதுறை உள்ள மூடப்பட்ட பொருளாதாரத்தின் வருமான சுற்றோட்ட சமநிலைக்கான நிபந்தனைகள்.

1) மொத்த வருமானம் = மொத்த செலவு

$y = E$

$E = C + I + G$

$$\boxed{Y = C + I + G}$$

2) வெளிப்பாய்ச்சல் (W) = உட்பாய்ச்சல் (J)
சேமிப்பு + வரி = முதலீடு + அரச செலவு.

$$S + T = I + G$$

உதாரணம் :- அரச தலையீடு உள்ள மூடப்பட்ட பொருளாதார மொன்றின் தேசிய வருமான தகவல்கள் வருமாறு

C = 100 + 0.8 yd
T = 0.25 y
G = 100 மில்லியன் ரூபா
I = 200 மில்லியன் ரூபா

1) சமநிலை தேசிய வருமான மட்டம் யாது?

$$C = 100 + 0.8\,yd$$
$$C = 100 + 0.8\,(y - 0.25y)$$
$$C = 100 = 0.8y - 0.2y$$
$$C = 100 + 0.6y$$

$$Y = C + I + G$$
$$Y = 100 + 0.6y + 200 + 100$$
$$Y = 400 + 0.6y$$
$$Y - 0.6y = 400$$
$$0.4Y = 400$$
$$Y = \frac{400}{0.4}$$
= 1000 மில்லியன் ரூபா

2) இங்கு செலவிடக்கூடிய வருமானத்தின் பெறுமதி யாது?

$$Yd = Y - T$$
$$= 1000 - 0.25 \times 1000$$
$$= 1000 - 250$$
= 750 மில்லியன் ரூபா

3) சமநிலையின்போது நுகர்வின் பெறுமதி யாது?

$$C = 100 + 0.6 \times 1000$$
$$= 100 + 600$$
= 700 மில்லியன் ரூபா

4) சேமிப்புச் சார்பினை y சார்பாக அமைக்குக.

$$S = -100 + 0.25yd$$
$$S = -100 + 0.2(y - 0.25y)$$
$$S = -100 + 0.2y - 0.05y$$
$$S = -100 + 0.1sy$$

5) சமநிலையின்போது சேமிப்பின் பெறுமதி யாது?

$$S = -100 + 0.15 \times 1000$$
$$= -100 + 150$$
= 50 மில்லியன் ரூபா

6) சமநிலையின் போது உட்பாய்ச்சல் வெளிப் பாய்ச்சலுக்கு சமன் என்பதனை நிறுவுக.

வெளிப்பாய்ச்சல் = உட்பாய்ச்சல்

$$S + T = I + g$$
$$50 + 250 = 200 + 100$$
$$300 = 300$$

7) வரவு செலவுத்திட்ட நிலுவை யாது?

வரவு செலவு திட்ட நிலுவை

$$= T - G$$
$$= 250 - 100$$
= 150 மில்லியன் ரூபா (மிகை)

8) இங்கு முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி யாது?

$$KI = \frac{1}{MPS + (MPC \times MPT)}$$
$$= \frac{1}{0.2 + (0.8 \times 0.25)}$$
$$= \frac{1}{0.2 + 0.2}$$
$$= \frac{1}{0.4}$$
$$= 2.5$$

yd சார்பாக

$$KI = \frac{1}{MPS + MPT}$$

$$= \frac{1}{0.15 + 0.25}$$

$$= \frac{1}{0.4}$$

$$= 2.5$$

திறந்த பொருளாதார சமநிலை

வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசாங்கத்துறை, வெளிநாட்டுத்துறை ஆகிய நான்கு துறைகளின் தொழிற்பாடுகள் ஒரு பொருளாதாரத்தில் காணப்படுமேயானால் அது அரசதுறை உள்ள திறந்த பொருளாதாரம் எனப்படுகின்றது.



திறந்த பொருளாதாரத்தின் வருமான சுற்றோட்ட சமநிலைக்கான நிபந்தனைகள்

1) மொத்த வருமானம் = மொத்த செலவு

$$y = E$$

$$E = C + I + G + x - m$$

$$Y = C + I + G + x - m$$

2) வெளிப்பாய்ச்சல் = உட்பாய்ச்சல்

$$S + T + M = I + G + X$$

உதாரணம் :-

திறந்த பொருளாதாரமொன்றின் தேசிய வருமான தகவல்கள் பின்வருமாறு.

C = 100+0.8yd

T = 0.25y

I = 100 மில்லியன் 7பா

G = 100 மில்லியன் ரூபா

X = 100 மில்லியன் ரூபா

M = 0.1y

1) சமநிலை தேசிய வருமானம் யாது?

$$C = 100 + 0.8yd$$
$$C = 100 + 0.8\,(y - 0.25y)$$
$$C = 100 + 0.8 - 0.2y -$$
$$C = 100 + 0.6y$$

$$y = C + I + G + x - m$$
$$y = 100 + 0.6y + 100 + 100 + 100 - 0.1y$$
$$y = 400 + 0.5y$$
$$y - 0.5y = 400$$
$$0.5y = 400$$
$$y = \frac{400}{0.5}$$

y = 800 மில்லியன் ரூபா

2) செலவிடக்கூடிய வருமானம் யாது?

$$yd = y - T$$
$$= 800 - 0.25 \times 800$$
$$= 800 - 200$$

= 600 மில்லியன் ரூபா

3) சேமிப்புச் சமன்பாட்டினை அமைக்குக.

$$S = -100 + 0.2(y - 0.25y)$$
$$= -100 + 0.2y - 0.05y$$
$$= -100 + 0.15y$$

4) சமநிலையின் போது உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சலுக்கு சமன் என்பதை நிறுவுக.

$$S = -100 + 0.15 \times 800$$
$$= -100 + 120$$

= 20 மில்லியன் ரூபா

$$M = 0.1 \times 800$$

= 80 மில்லியன் ரூபா

வெளிப்பாய்ச்சல்	= உட்பாய்ச்சல்
S + T + M	= I + G + x
20+200+80	= 100+100+100
300	= 300

5) முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி யாது?

$$KI = \frac{1}{MPS + MPT + MPM)}$$

$$= \frac{1}{0.15 + 0.25 + 0.1}$$

$$= \frac{1}{0.5}$$

$$= 2$$

yd சார்பாக

$$KI = \frac{1}{MPS + (MPC \times MPT) + MPM}$$

$$= \frac{1}{0.2 + (0.8 \times 0.25) + 0.1}$$

$$= \frac{1}{0.5}$$

$$= 2$$

6) வரவு செலவுத்திட்ட நிலுவை யாது?

வரவு செலவுத்திட்ட நிலுவை
= T - G
= 200 – 100
= 100 மில்லியன் ரூபா (மிகை)

7) வர்த்தக நிலுவை யாது?

வர்த்தக நிலுவை = x - M
= 100 - 80
= 20 மில்லியன் ரூபா (சாதக மீதி)

உசாத்துணை :

ஆசிரியர் கைநூல்

வலமிருந்து இடம்

9. ஜென்
10. சனத்தொகை
11. இடம்

சந்தை முறைமை தோல்வியடைவதில் வெளிவாரி விளைவுகளின் தாக்கம்

றொ. அருள்மேரி
A/L com (2014)

சந்தைச் சக்திகளின் திறமையற்ற செயற்பாடு சந்தைத் தோல்வி எனப்படுகின்றது. சந்தை விலைப் பொறிமுறையானது சமூகத்தின் நன்மை கருதி வளங்களை ஒதுக்கீடு செய்யத் தவறுகின்ற சந்தர்ப்பம் சந்தைத் தோல்வி எனப்படும். இலாபத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தெரிவுகள் சமூகத்தின் நன்மைக்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பங்களிப்புச் செய்வதில்லை. சந்தைத் தோல்வியானது இரு வகைப்படும்.

01. வள ஒதுக்கீட்டில் செயற்திறனின்மை, சில பண்டங்கள் சமூகத்திற்குத் தேவையான அளவை விடக் கூடுதலாகவும் வேறு சில தேவையான அளவை விடக் குறைவாகவும் உற்பத்தி செய்யப்படும்.

02. வள ஒதுக்கீட்டில் நியாயத்துவமின்மை, வருமானம் நியாயமற்ற விதத்தில் பங்கீடு செய்யப்படுவதால் வள ஒதுக்கீடு செயற்திறனற்றதாதல்.

சந்தை முறைமையானது பல சந்தர்ப்பங்களில் தோல்வியடைகின்றது. இவற்றில் வெளிவாரி விளைவுகளின் தாக்கம் சந்தைத் தோல்வி ஏற்படுவதற்கு ஒரு காரணமாக அமைகின்றது. வெளிவாரி விளைவுகள் என்பது உற்பத்தி அல்லது நுகர்வு நடத்தையின் விளைவாக அவற்றுடன் தொடர்பற்ற மூன்றாவது பிரிவினருக்கு ஏற்படும் நன்மை அல்லது செலவு வெளிவாரி விளைவுகள் எனப்படும். மேலும் அவ் விளைவுகளுக்கான பொறுப்பை இதனுடன் நேரடித் தொடர்பு கொண்ட முதல் இரு பிரிவினரும் ஏற்பதில்லை. வெளிவாரி விளைவுகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.

1) எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் வெளிவாரிச் செலவுகள்
   a. உற்பத்தியின் வெளிவாரிச் செலவுகள் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள்
   b. நுகர்வின் வெளிவாரிச் செலவுகள் – எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள்
2) நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள் – வெளிவாரி நன்மைகள்
   a. உற்பத்தியின் வெளிவாரி நன்மைகள் நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள்
   b. நுகர்வின் வெளிவாரி நன்மைகள் – நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள்

உற்பத்தி, நுகர்வு என்பன தொடர்பாக சந்தையில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் சந்தைச் சக்திகளான கேள்வி, நிரம்பல்களினால் நிர்ணயிக்கப்படும் விலைகளின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றன. உற்பத்தி, நுகர்வு நடவடிக்கைகளின் போது ஏற்படுகின்ற வெளிவாரிச் செலவுகளையும் நன்மைகளையும் சந்தை விலைகள் உள்ளடக்குவதில்லை. இதனால் சந்தைச் சக்திகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் உத்தமமானதாக அமைவதில்லை. வெளிவாரி விளைவுகள் உள்ள

நிலையில் சந்தை முறைமையின் கீழ் உற்பத்தி, நுகர்வு என்பன தொடர்பாக மேற் கொள்ளப்படும் தீர்மானங்களின் போது மிகை உற்பத்தி அல்லது குறை உற்பத்தி, மிகை நுகர்வு அல்லது குறை நுகர்வு காணப்படும்.

உற்பத்தியின் நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள்



PMC = S– தனியார் எல்லைச் செலவு

SMC =S – சமூக எல்லைச் செலவு

SMB = PMD = D - சமூக எல்லை நன்மை = தனியார் எல்லை நன்மை

QM – சந்தை உற்பத்தி

QS – உத்தம உற்பத்தி

PM – சந்தை விலை

PS– உத்தம உற்பத்தியின் சந்தை விலை

உற்பத்திச் செயற்பாட்டில் நேர்க் கணிய வெளிவாரிகள் உருவாகுமிடத்து தனியார் செலவை விட சமூகச் செலவுகள் குறைவாகக் காணப்படும். அதனால் ஏற்படும் விளைவு யாதெனில் சமூகத்திற்குத் தேவைப் படும் அளவைவிடக் குறைவாகப் பொருட் கள் உற்பத்தி செய்யப்படும். அதாவது குறை உற்பத்தி காணப்படும். ABC என்ற முக் கோணத்தின் பரப்பளவு சமூக நலன் இழப் பாகும். இப் பரப்பளவு உள்ளார்ந்த சமூக நலன் பெறுகையாகும்.

உற்பத்தியின் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள்



PMC =S – தனியார் எல்லைச் செலவு

SMC =S – சமூக எல்லைச் செலவு

SMB=PMB=D – சமூக எல்லை நன்மை = தனியார் எல்லை நன்மை

QM – சந்தை உற்பத்தி

QS – உத்தம உற்பத்தி

PM – சந்தை விலை

PS – உத்தம உற்பத்தியின் சந்தை விலை

உற்பத்திச் செயற்பாட்டில் எதிர் கணிய வெளிவாரிகள் உருவாகுமிடத்து தனியார் செலவைவிட சமூகச் செலவுகள் அதிகமாகக் காணப்படும். அதனால் ஏற்படும் விளைவு யாதெனில் சமூகத்திற்குத் தேவைப் படும் அளவைவிடக் கூடுதலாகப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். அதாவது மிகை உற் பத்தி காணப்படும். ABC என்ற முக்கோணத் தின் பரப்பளவு சமூக நலன் இழப்பாகும். இப் பரப்பளவு உள்ளார்ந்த சமூக நலன் பெறுகை யாகும்.



சந்தை முறையின் கீழ்	உத்தம உற்பத்தி மட்டத்தின் போது
சமூக நன்மை - ABCEFGH தனியார் செலவு - EFGH வெளிவாரிச் செலவு - BCJ அல்லது GH சமூகச் செலவு - EFGH + BCJ அல்லது EFGH + GH = EFGHBCJ சமூகநலன் A - J மீளப் பெறமுடியாத இழப்பு J	சமூக நன்மை - ABEH தனியார் செலவு - EH வெளிவாரிச் செலவு - B அல்லது H சமூகச் செலவு - EH + B = BEH சமூகநலன் A மீளப் பெறமுடியாத இழப்பு இல்லை

நுகர்வின் நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள்



PMC = SMC =S தனியார் எல்லைச் செலவு

= சமூக எல்லைச் செலவு

PMB = D – தனியார் எல்லை நன்மை

SMB = D – சமூக எல்லை நன்மை

QM – சந்தை உற்பத்தி

QS – உத்தம உற்பத்தி

PM – சந்தை விலை

PS – சந்தை விலை

நுகர்வுச் செயற்பாட்டில் நேர்க்கணிய வெளி வாரிகள் உருவாகுமிடத்து தனியார் நன்மையை விட சமூக நன்மை உயர்வாகக் காணப்படும். அதனால் ஏற்படும் விளைவு யாதெனில் சமூகத்திற்குத் தேவைப்படும் அளவைவிடக் குறைவாகப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். எனவே குறை நுகர்வு காணப்படும். ABC என்ற முக்கோணத்தின் பரப்பளவு சமூக நலன் இழப்பாகும். இப் பரப்பளவு உள்ளார்ந்த சமூக நலன் பெறுகை யாகும்.

நுகர்வின் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள்



PMC = SMC =S தனியார் எல்லைச் செலவு

= சமூக எல்லைச் செலவு

PMB = D – தனியார் எல்லை நன்மை

SMB = D – சமூக எல்லை நன்மை

QM – சந்தை உற்பத்தி

QS – உத்தம உற்பத்தி

PM – சந்தை விலை

PS – சந்தை விலை

நுகர்வுச் செயற்பாட்டில் எதிர்க் கணிய வெளிவாரிகள் உருவாகுமிடத்து தனியார் நன்மையை விட சமூக நன்மை குறைவாகக் காணப்படும். அதனால் ஏற்படும் விளைவு யாதெனில் சமூகத்திற்குத் தேவைப்

படும் அளவைவிட அதிகமாகப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். எனவே மிகை நுகர்வு காணப்படும். ABC என்ற முக்கோணத்தின் பரப்பளவு சமூக நலன் இழப்பாகும். இப் பரப்பளவு உள்ளார்ந்த சமூக நலன் பெறுகையாகும்.

வெளிவாரி விளைவுகளால் ஏற்படும் தோல்வியைத் தடுப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள்

1. எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைத் தரும் நடவடிக்கைகள்.
   - ❋ வரிகளை விதித்தல்
   - ❋ தண்டம் விதித்தல்
   - ❋ உரிமைப் பத்திரக் கட்டணம் அறவிடுதல்
   - ❋ நட்டஈடு வழங்குதல்
   - ❋ சட்டங்களை விதித்தல்
   - ❋ உற்பத்தி மீது அளவுக் கட்டுப்பாடுகளை விதித்தல்
2. நேர்க்கணிய வெளிவாரி விளைவுகளைத்
   - ❋ தரும் நடவடிக்கைகள்.
   - ❋ மானியம் வழங்குதல்
   - ❋ குறிப்பிட்ட பொருட்கள் சேவைகளை அரசாங்கம் உற்பத்தி செய்து வழங்குதல்.

வெளிவாரி விளைவுகளைத் தவிர்ப்பதற்கு நிறுவனங்கள் தாமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள்

1. பாதிப்புக்களை ஈடுசெய்வதற்கு தமது இலாபத்தில் ஒரு பகுதியை ஒதுக்குதல்.
2. ஒலி மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கு நவீன உபகரணங்களைத் தொழிற்சாலையில் பொருத்துதல்.

Life is a Game, Play it,
Life is a Song, Sing it,
Life is a Dream, Realise it,
Life is a Challenge, Meet it,
Life is a Love, Enjoy it.

Sri Sathya Saibaba

பொருளாதார அபிவிருத்தியின் கூட்டுக் குறிகாட்டிகள்

ச. துசிற்றா
A/L com (2014)

சமூக அபிவிருத்திக்காக ஐக்கிய நாடுகளின் ஆராய்ச்சி நிறுவனம் (United Nations Research Institute for Social Development) பொருளாதார அபிவிருத்தியை அளவிடுவதற்கு பயன்படுத்தக் கூடிய அடிப்படையான சுட்டெண்களின் பட்டியலை சமர்ப்பித்தது. அச்சுட்டிகளாவன.

1. பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்
2. பல்பரிமாண வறுமைச் சுட்டெண்
3. மானிட அபிவிருத்திச் சுட்டெண்
4. பால் தொடர்பான அபிவிருத்திச் சுட்டெண்
5. பால் தொடர்பான பலமூட்டும் அளவை
6. பால் நிலைச் சமத்துவமின்மைச் சுட்டெண்

01. பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்
PQLI
Physical Quality of Life Index

மொறிஸ் டீ மொறிஸ் எனும் பொருளியல் அறிஞர் 1977ல் அமெரிக்க ஐக்கிய குடியரசில் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனத்திற்காக செய்த ஆராய்ச்சி திட்டத்தின் மூலம் அபிவிருத்தியை அளவிடுவதற்கு மிகவும் பூரணத்துவமுடைய அளவீடாக "பௌதீக வாழ்க்கை பண்புச் சுட்டெண்"னை அறிமுகம் செய்தார். இது பின்வரும் 03 குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது.

1. சராசரி ஆயுட்காலம்
2. சிசு மரண வீதம்
3. எழுத்தறிவு வீதம்

இச் சுட்டெண்ணின் படி,

ஆயுள் எதிர்பார்ப்புக்கு எல்லையாக 100 சுவீடனுக்கு கிடைத்தது. அவர்களின் ஆயுட்காலம் 1973ல் 77 வருடமாகும். இழிவு எல்லையாக 1 உரித்தானது. 1950ல் 28 வருடங்களாகும் இது "கினிபிசோ" அரசிற்காகும்.

சிசு மரண வீதமானது உயர் எல்லையாக 9 (1973) சுவீடனிலும் இழிந்தது 229 (1950) கபொன் நாட்டிற்குமாகும்.

பொருளாதார அபிவிருத்தி மட்டத்தை அளவீடு செய்வதற்கு போதிய குறிகாட்டியாக அமையாதது இதன் குறைபாடாகும். ஏனெனில் இது சுகாதாரத்திலும் போசாக்கிலும் அதிக முக்கியத்துவம் காட்டப்பட்டதாகும். இது சமூக மாறியாக தோன்றியது. அதேவேளை வருமானப் பங்கீடு குறிகாட்டிகளை இது உள்ளடக்கவில்லை.

பிறப்பில் வாழ்நாள் எதிர்பார்ப்பு	வருடங்கள்	
	2006	2012
ஆண்	68.2	75.1
பெண்	75.8	

கல்வி அறிவு வீதம்	2006	2012
சராசரி	90.8	92.2
ஆண்	92.7	93.5
பெண்	89.1	91.1

சிசு மரண வீதம்	1000 உயிர் பிறப்பிற்கு
1946	141
1948	92
1990	19
2004	12
2009	9

02. பல்பரிமாண வறுமைச் சுட்டெண் (MPI)

Multidimentional Poverty Index

2010ம் ஆண்டு UNDP நிறுவனத்தால் மனித அபிவிருத்தி அறிக்கை மூலம் HPI-1, HPI-2 என்பவற்றுக்குப் பதிலாக இது அறிமுகப்படுத்தப்பட்டது.

"வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட எளிமையான அளவு மூலமாக வறுமையை அளவிடுவதற்குப் பதிலாக குடித்தன மட்டத்தில் தனிப்பட்டவர்கள் எதிர் கொள்ள நேரிடும் வெவ்வேறு குறைபாடு களை அடிப்படையாகக் கொண்டு வறு மையை அளவிடுதல் கூடிய பொருளுடை யது" என இதனை அறிமுகப் படுத்தியவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க் கைத் தரம் போன்ற 03 துறைகளில் காணப் பட்ட 10 குறைபாடுகள் இச்சுட்டிக்கு அடிப் படையாகக் கொள்ளப்பட்டன.

1. சுகாதாரம் – குழந்தை இறப்பு
   போசாக்கு
2. கல்வி – பாடசாலை வருடம்
   பாடசாலை செல்லல்
3. வாழ்க்கைத்தரம் – சமையல் பொருள்
   மலசலகூட வசதி
   நீர், மின்சாரம்
   வீட்டின் நிலம்
   சொத்தின் அளவு

இச் சுட்டெண்ணின்படி மேற்கூறப் பட்ட குறைபாடுகள் யாவும் சுருக்கி ஒன்று சேர்க்கப்பட்ட நிறையிடப்பட்ட சுட்டியின் பெறுமானம் 33% விட தாண்டியுள்ள குடும்பம் "வறுமையான குடும்பம்" ஆக காணப்படும்.

பல்பரிமான வறுமைச் சுட்டி	=	சனத் தொகை வறுமைச் சுட்டி	X	குறைபாட்டுச் சுட்டி
MPI	=	H	x	A

இலங்கையில் MPI 0.021ஆகும்

03. மானிட அபிவிருத்திச் சுட்டெண்

Human Development Index - HDI

உலக நாடுகளின் பொருளாதார அபி விருத்தியை பரிசிலிக்க தயாரிக்கப்பட்ட பரிபூரணமான பகுப்பாயப்பட்ட அளவீடாகும். இது UNDP (United Nations Development Programme) நிறுவனத்தால் 1990ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை தயாரிக்க அடிப்படையாக கொள்ளப்படும் அளவீடுகள் பிரயோக ரீதியில் பின்வரும் மாறிகளுடாக வெளிப்படுத்தப்படும்.

1. பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு
2. அறிவு – இதனை அளவிட 02 துணைச் சுட்டி பயன்படுத்தப்படும்
   அ. பாடசாலை கல்வியைப் பெற்ற வருட எண்ணிக்கையின் இடையப் பெறு மானம்
   ஆ. பாடசாலை கல்வியைப் பெற சேரு மொருபிள்ளை கல்வியில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படும் வருடங்களின் எண்ணிக்கை.
3. கொள்வனவற்றால் ஒத்திசைவு தலாவீத மொத்தத் தேசிய வருமானம் (ppp) or/ வாழ்க்கைத்தரம்

மானிட அபிவிருத்திச் சுட்டெண் பெறுமானத்தின் அடிப்படையில் இதனை 04 வகைப்படுத்தலாம்.

1. மிகவும் உயர் மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள் (HDI 0.900ம் அதற்கு மேலும்)
2. உயர் மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள் (HDI 0.800 – 0.899)
3. நடுத்தர மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள் (HDI 0.500 – 0.799)
4. குறைந்த மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள்.(HDI 0.499 – 0.000)

2011ல் இலங்கையின் மனிதவள அபிவிருத்திச் சுட்டெண் 0.691' ஆக காணப்பட்டதுடன் 187 நாடுகளிடையே 97வது நிலையில் காணப்பட்டது.

மனிதவள அபிவிருத்திச் சுட்டெண்ணின் குறைபாடுகள்

1. மனித அபிவிருத்தியின் எல்லா அம்சங்களும் இதில் உள்ளடக்கபடவில்லை. அதாவது உளச் சுகம், மனித பாதுகாப்பு, பொருளாதார சுதந்திரம்
2. இச்சுட்டெண்ணில் உள்ளடக்கப்பட்டுள்ள எல்லா அம்சங்களும் சமமான நிறையிடல் வழங்கப்பட்டுள்ளது.
3. தரத்தில் ஏற்படும் வேறுபாடுகளை இது கருத்தில் கொள்ளவில்லை அதாவது பாடசாலை தரம், வைத்தியசாலை தரம்
4. அபிவிருத்தியின் மீது பாதிப்பை ஏற்படுத்தும் சுற்றாடல் அம்சங்கள் இதில் உள்ளடக்கப்பவில்லை.

4. பால் தொடர்பான அபிவிருத்திச் சுட்டெண்

Gender related Development Index - GDI

இது

1. ஆயுள் எதிர்பார்ப்பு
2. கல்வி மட்டம்
3. வருமானம் போன்ற இயலுமைகளைக் கருத்தில் கொள்கிறது.

5. பால் தொடர்பான பலமூட்டும் அளவை GEM (Gender Empowerment Measure)

அரசியல், பொருளாதார துறைகளில் பெண், ஆண் பங்களிப்பை நிச்சயிக்கும் பலம் பற்றிய பெண், ஆண் சமத்துவமின்மையும் பொருளாதார வளங்களை உழைத்தலில் பெண், ஆண் வேறுபாடும் கருத்தில் கொள்ளப்படும்.

6. பால்நிலைச் சமத்துவமின்மைச் சுட்டெண்

Gender Inequality Index - (GII)

ஆண் பெண் சமூகத்தன்மையின் ஏற்றத்தாழ்வை காட்டும் பல அளவீடுகளை இணைத்து இச் சுட்டி தயார் செய்யப்படுகிறது. தாய் இறப்பு விகிதம், செயற்றிறன் விகிதம், பாராளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவம், குடும்ப கட்டுப்பாடு முறை பின்பற்றல் விகிதம்.

உசாத்துணை :

www.Economic Development Index.com

பொருளியல் அறிமுகம் – 02

டனி அத்தப்பத்து

அடிப்படை பொருளாதார பிரச்சினையும் அவற்றிற்குரிய தீர்வும்

அ.ஜெயமதனி
A/L com (2014)

அடிப்படை பொருளாதாரப் பிரச்சினைகள்

பொருளியல் அருமை தன்மை பிரச்சினை மாற்றுபயோக தன்மை பிரச்சினை, தெரிவு பிரச்சினை போன்ற மூலாதார பிரச்சினை காரணமாக அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனை தோன்றுகின்றது.

1. என்ன பொருளை எந்தளவு உற்பத்தி செய்தல்?
2. எவ்வாறு அல்லது எப்படி உற்பத்தி செய்தல்?
3. யாருக்காக உற்பத்தி செய்தல்? என்பன வாகும்.

"என்ன பொருளை எந்தளவு உற்பத்தி செய்தல்?" எனும் பிரச்சினை

அருமையானதும் மாற்றுபயோக தன்மை உடைய பொருளாதார வளத்தை பயன்படுத்தி எவ்வாறான உற்பத்தியை தெரிவுசெய்தல் எனும் பிரச்சினையே என்ன பொருளை உற்பத்தி செய்தல் எனும் வள தெரிவு பிரச்சினையாகும். இவ்வாறு தெரிவு செய்த உற்பத்திக்கு எந்தளவான வளங்களை ஒதுக்கிடல் எனும் பிரச்சினையே எந்தளவு உற்பத்தி எனும் பொருளாதார பிரச்சினை யாகும்.

எனவே வளதெரிவுடன் கூடிய ஒரு வள ஒதுக்கீட்டு பிரச்சினையாக இவ் பிரச்சினை காணப்படும் ஒப்பீட்டு அளவு வளங்கள் அருமைத் தன்மையுடன் மாற்றுபயோக தன்மை கொண்டதனாலேயே இப்பிரச்சினை ஏற்படுகிறது.

"எவ்வாறு உற்பத்தி செய்தல்?" எனும் பிரச்சினை (எப்படியான உற்பத்தி)

- அருமையானதும் மாற்றுபயோக தன்மை உடைய பொருளாதார வளத்தை பயன் படுத்தி எவ்வாறான தொழில்நுட்பம் மூலம்உற்பத்திசெய்தல்எனும்பிரச்சினையே எவ்வாறு உற்பத்தி செய்தல் பிரச்சினை யாகும்.

எனவே இது ஓர் தொழில்நுட்ப தெரிவுடன் கூடிய பொருளாதார பிரச்சினை இதுவாகிறது. ஒரு பொருளாதாரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரச்சினைகள் காணப் படுவதால் அதற்கு மூன்று தொழில்நுட்பம் காணப்படும் அதனால் இப் பிரச்சினை அடிப் படை பொருளாதார பிரச்சினை ஆகின்றது.

01. ஊழியர் செறிவான தொழில்நுட்பம்

ஒப்பீட்டளவில் இயந்திரம் கருவி களை விட ஊழிய அளவு அதிகளவு ஈடுபடுத் தப்பட்டு உற்பத்தி செய்தல் தொழிற்பாடே ஊழியச் செறிவான தொழில்நுட்ப செயற் பாடு ஆகும்.

02. மூலதன செறிவான தொழில்நுட்பம்

ஒப்பீட்டில் ஊழியளவை விட இயந்திரம் கருவியை அதிகளவு ஈடுபடுத்தி

உற்பத்தி செய்யக்கூடிய தொழில்நுட்ப செயற்பாடு ஆகும்.

03. நடுத்தர அல்லது கலப்பு தொழில் நுட்பம்

ஒப்பீட்டளவில் மூலதனத்தையும் ஊழியத்தையும் சமனான அளவில் இணைத்து உற்பத்தி செய்கின்ற தொழில் நுட்பமே கலப்பு தொழில்நுட்ப செயற்பாடா கும்.

யாருக்காக உற்பத்தி செய்தல் எனும் பிரச்சினை?

அருமையானதும் மாற்றுபயோக தன்மை உடைய பொருளாதார வளங்களை பயன்படுத்தி மேற்கொண்ட உற்பத்தி அதில் பங்குபற்றிய உற்பத்தி காரணிகளின் உடமை யாளர்க்கு மத்தியில் எவ்வாறு பங்கிடல் பிரச்சனையே யாருக்காக உற்பத்தி எனும் பொருளாதார பிரச்சினையாகும்.

எனவே ஒரு உற்பத்தியும் உற்பத்தி காரணிகளாகிய நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பவற்றை பயன்படுத்தி அதற்கான சன்மானமாக வாடகை, கூலி, சம்பளம், வட்டி, இலாபம் என்பன பரிமாற்றபடுகிறது. இவை உற்பத்தியாளருக்கு மத்தியில் சமனாக பங்கிடுவதில்லை. இதனாலே உற்பத்தி காரணிகளின் விலைகளுடன் தொடர்புபட்ட பிரச்சனையாக "யாருக்காக உற்பத்தி செய் தல் எனும் பிரச்சினையாக காணப்படுகிறது"

அடிப்படை பொருளாதார பிரச்சினைக்குரிய தீர்வுகள்

அடிப்படை பொருளாதார பிரச்சி னைக்கு தீர்வு காண்பதற்காக பொருளாதார முறைகளை தோற்றுவிற்கின்றனர்.

1. முதலாளித்துவ பொருளாதாரம்
2. சமவுடமை பொருளாதாரம்
3. கலப்பு பொருளாதாரம்

முதலாளித்துவ, சந்தை அல்லது விலை பொறிமுறை பொருளாதாரம்

என்ன பொருளை எந்தளவு எனும் பிரச்சினைக்கு அருமையானதும் மாற்றுப யோக தன்மை உடைய பொருளாதார வளத்தை பயன்படுத்தி உச்சலாபம் தரக்கூடிய உற்பத்தியை தெரிவுசெய்யும் வேளை அவ்வாறு தெரிவு செய்கின்ற உற்பத்திகே அதிக வளங்களும் ஒதுக்கிடப்படுகிறது.

எவ்வாறு உற்பத்தி என்பதற்கு தீர் வாக முதலாளித்துவ பொருளாதாரம் எவ் வாறு உற்பத்தி செய்தல் எனும் தொழில்நுட்ப தெரிவு பிரச்சினை ஒப்பீட்டளவு உச்சலாப நோக்கில் அடிப்படை விலை பொறிமுறை மலிவான தொழில்நுட்பத்தின் கீழ் தீர்வு செய்யப்படும்.

யாருக்காக உற்பத்தி செய்தல் என்ப தற்காக முதலாளித்துவ பொருளாதார மானது விலை பொறிமுறையில் உச்ச இலாப நோக்கில் பங்கிடுகிறது. இதனால் அதிக விலை பெற்று தரக்கூடிய நபருக்கு கூடிய பொருளையும் குறைந்த விலை பெற்று தருபவருக்கு குறைந்த பொருள், சேவையை பங்கிடும் இதனால் பங்கீட்டு பிரச்சினையில் நிரம்பல் சக்தியானது தொழிற்படும் நிலை காணப்படும்.

சமவுடமை பொருளாதாரம் or சோசலிச பொருளாதாரம் or திட்டமிடல் பொரு ளாதாரம்

என்ன பொருளை எந்தளவு எனும் பிரச்சினைக்கு மத்திய திட்டமிடல் முறை யின் மூலம் அரசதுறை என்ன பொருளை உற்பத்தி செய்தல் எனும் தெரிவுக்கு தீர்வினை மேற்கொண்டு ஒப்பீட்டு ரீதியில் சமூகத்திற்கு நன்மை தரக்கூடிய உற்பத்தி வள ஒதுக்கீடுகளை சமவுடமை மேற்

கொள்கின்றது. இதனால் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்கள் சேவைகள் என்பன கட்டுப்படுத்தப்படுகின்றன.

எவ்வாறு உற்பத்தி என்பதற்கு தீர்வாக சமவுடமையில் அரசு மத்திய திட்டமிடல் முறை மூலம் எப்படி உற்பத்தி? என்னும் தொழில்நுட்ப தெரிவு பிரச்சனைக்கு தீர்வு மேற்கொள்கிறது. ஒப்பீட்டு ரீதியில் அரசானது சமூக நலன்களை நோக்காக கொண்டு காரணி நிரம்பலானது அதிகமாக காணப்படும் தொழில்நுட்பத்தை தெரிவு செய்து உற்பத்திகளை மேற்கொள்கிறது. இதனால் எந்த தொழில்நுட்பம் காரணி ஒப்பீட்டில் அதிகமாக காணப்படுகின்றதோ அதனை தெரிவு செய்து அரசு உற்பத்தியினை மேற்கொள்கின்றது.

யாருக்காக உற்பத்தி செய்வதற்கான தீர்வாக சமவுடமை மத்திய திட்டமிடல் மூலம் சமூக நலனை நோக்கமாக கொண்டு இப் பங்கீட்டு பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகின்றது. ஒப்பீட்டில் பொருள், சேவை தேவைப்படும் நபரையும் தேவைப்படும் அளவையும் மத்திய திட்டமிடல் குழு மூலம் இனங்காணப்பட்டு பொருத்தமான அளவுகளிலும் பொருத்தமான முறையிலும் பங்கீட்டு தீர்வு மேற்கொள்கிறது. இதனால் பொருளாதார சமத்துவத்திற்கு நீதியான பங்கீட்டையும் பங்கீட்டு பிரச்சனைக்கு சமத்துவமான முறையில் தீர்வும் காணப்படும்.

கலப்பு முதலாளித்துவ பொருளாதாரத்தில் அடிப்படை பொருளாதார தீர்வுகள்

என்ன பொருளை எந்தளவு எனும் பிரச்சனைக்கு கலப்பில் காணப்படுகின்ற தனியார்துறை உச்சலாப நோக்க அடிப்படையில் வள தெரிவையும் வள ஒதுக்கீட்டையும் மேற்கொள்ளும் வேளைகளில் அரசதுறை மற்றும் சமூக தேவைகள் விருப்பங்களுக்கு முக்கியத்துவமளித்து வள தெரிவையும் வள ஒதுக்கீட்டையும் மேற்கொள்கின்றது.

எவ்வாறு உற்பத்தி செய்தல் என்னும் பிரச்சனைக்கு தீர்வாக கலப்பில் காணப்படுகின்ற தனியார் துறையினர் உச்சலாப நோக்க விலைப் பொறிமுறை மூலம் செலவு குறைந்த தொழில் நுட்பங்களை தெரிவு செய்யும் வேளை இப் பொருளாதாரத்தில் அரசதுறையானது காரணி நிரம்பல் அடிப்படையில் கூடுதலாக பெறக்கூடிய சமூக நலனை நோக்காக கொண்ட தொழில் நுட்பத்தை தெரிவுசெய்து மேற்கொள்கிறது.

யாருக்காக உற்பத்தி செய்தல் என்பதற்கு கலப்பு பொருளாதாரத்தில் காணப்படுகின்ற தனியார் உச்சலாப நோக்க விலைப் பொறிமுறை மூலம் கூடிய விலை கொடுப்பவர்களுக்கு கூடுதலான பொருளை உற்பத்தி செய்ய வளப்பங்கீடு செய்கிறது. அரசதுறை சமூதாய நலன் நோக்க மத்திய திட்டமிடல் குழு மூலம் பொருள் தேவை கூடிய நபருக்கு கூடிய உற்பத்திகளை பங்கீடு செய்கின்றது.

உசாத்துணை நூல் :

வே.கருணாகரன் சேர் Pass Paper

தகவல் தொழில்நுட்பம்

முறைமையும் தகவல் முறைமையும்
System & Information System

கொ.லூ.யேமலர்
A/L com (2014)

முறைமை (System)

முறைமை என்பது ஒரு தொகுதி ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட பல பகுதிகளைக் கொண்டதும் அவை அனைத்தும் ஒன்று சேர்ந்து குறிப்பிட்ட பணி ஒன்றினை நிறைவேற்றுவதும் ஆகும்.

உ-ம் :- **பாடசாலை**
மனித உடல்
கணினி

உபமுறைமை (Sub system)

முறைமையானது ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ள பகுதிகள் ஆகும். இப் பகுதிகள் ஒன்று சேர்ந்தே முறைமையினை இயக்குகின்றன. அவ்வாறான பகுதிகள் உப முறைமை எனப்படும்.

உ-ம் :- கணினி முறைமை
Processor
Memory
Secondary storage
Input / output devices

} கணினி முறைமையின் உப முறைகள் (sub systems)

முறைமையொன்றின் அடிப்படைக் கூறுகள்

1. Input
2. Output
3. Processing
4. Feedback



முறைமை எல்லை (System Boundary)

முறைமை எல்லையானது முறைமை ஒன்றில் வரையறுக்கப்பட்டிருக்கும். அதாவது முறைமையானது சூழலுடன் தொடர்புபடுகின்ற போது சூழலிலிருந்து அதனை வேறுபடுத்துகின்றது.

உ-ம் :- School system



தகவல் முறைமை (Information System)

பயனர், தரவு, முறைவழியாக்கம், இடைமுகங்கள், வலையமைப்பு மற்றும் தொழில்நுட்பம் போன்ற பகுதிகளை ஒருங்கிணைத்தும் வியாபார நிறுவனமொன்றின் நாளாந்த செயற்பாடுகளிற்கு உதவுவதும், பிரச்சினைகளை தீர்த்தலும் மற்றும் தீர்மானம் எடுத்தல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுவது தகவல் முறைமையாகும்.

தகவல் முறைமை இரண்டு வகையாகக் காணப்படும்.

1. கைவழி முறை மூலமான தகவல் முறைமை

Manual Information System

இம் முறைமையானது கடதாசி அடிப்படையினதும் கைவழி முறைமூலமான

செயற்பாடுகளையும் கொண்டமைந்ததாகும்.

Eg. Library book index system

Student attendance systerm

கைவழி முறைமூலமான தகவல் முறைமையின் அனுகூலங்கள்

- பயன்படுத்துவதற்கு நெகிழ்ச்சித் தன்மை உடையது.
- ஆரம்ப மற்றும் பராமரிப்புச் செலவு குறை வானது.
- இலகுவாக கையாள முடிதல்.
- பயன்படுத்துவதற்கு அதிக தொழில்நுட்ப அறிவு அவசியமில்லை.

கைவழி முறை மூலமான தகவல் முறைமையின் பிரதிகூலங்கள்

- பதிவு ஒன்றினை தேடிப் பெற்றுக்கொள்வதற்கு அதிக நேரம் எடுக்கின்றமை
- கணித்தலின் போது ஏற்படுகின்ற மனித வழுக்கள்.
- கணித்தலின் போது துல்லியத்தன்மை, வேகம் குறைவடைகின்றது.

2. கணினி அடிப்படையிலான தகவல் முறைமை -Computer Based Information System-

கணினி அடிப்படையிலான தகவல் முறைமையானது பின்வரும் 6 பகுதிகளைக் கொண்டிருக்கும்.

1. வன்பொருள் - Hardware
2. மென்பொருள் - Software
3. பயனர் - User
4. விதிமுறைகள் - Procedures/rules
5. தரவுத்தளம் - Database
6. வலையமைப்பு - Network

கணனி அடிப்படையிலான தகவல் முறைமைக்கு உதாரணங்கள்:

- Stock control system
- Library system
- ATM system
- Banking system

நிறுவனம் ஒன்றின் முகாமை மட்டங்கள்



கணினி அடிப்படையிலான சில தகவல் முறைமைகள்

1. முறைவழியாக்க கட்டுப்பாட்டு முறைமை Processing Control system (PCS)
2. தொழிற்பாட்டசைவு முறைவழியாக்க முறைமை - Transaction Processing system (TPS)
3. அலுவலக தன்னியக்க முறைமை – Office Automation System (OAS)
4. முகாமைத்துவ தகவல் முறைமை – Management Information system (MIS)
5. தீர்மான துணை/உதவி முறைமை – Decission Support system (DSS)
6. நிறைவேற்று துணை/உதவி முறைமை or நிறைவேற்று தகவல் முறைமை– Excecutive Support system (ESS) or Executive Information system (EIS)
7. வல்லுனர் முறைமை – Expert system (ES) or Intelligent Information system (IIS)

1. முறைவழியாக்க கட்டுப்பாட்டு முறைமை

முறைவழியாக்க கட்டுப்பாட்டு முறைமையானது, இயந்திரங்கள் மற்றும் சாதனங்களில் முறைவழியாக்கங்களினைக் கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகின்ற தகவல் முறைமை ஆகும். இது கீழ்மட்ட

முகாமையினால் கையாளப்படும்.

உ-ம் :- Cement manufacturing control system Robotic control system

2. தொழிற்பாட்டசெவு முறைவழியாக்க முறைமை

இம் முறைமையானது நிறுவனம் ஒன்றின் நாளாந்தப் பணிகளை ஆற்றுவதற்கென வடிவமைக்கப்பட்ட தகவல் முறைமை ஆகும். இது நிறுவன செயற்பாடுகளிற்கு தேவையான தகவல்களை சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், மாற்றங்களிற்கு உட்படுத்தல், தேவைப்படும் போது மீளப்பெறல் போன்ற செயற்பாடுகளை மேற் கொள்கின்றது.

உ-ம் :- Banking system
Sales order
Purchasing order

3. அலுவலக தன்னியக்க முறைமை

இம் முறைமையானது நிறுவனம் ஒன்றின் செய்பணிகளைத் தன்னியக்கமயப்படுத்துவதினூடாக அதன் தொடர்பாடல் வினைத்திறனிற்கு உதவுகின்றது. மேலும் இது நிறுவன உள்ளக, வெளிப்புறத் தகவல்களைக் கையாளுகின்றது.

உ-ம் :- Telephone
Fax
Internet
Video conference

4. முகாமைத்துவ தகவல் முறைமை

இம் முறைமையானது நிறுவனத்திற்குத் தேவையான தகவல்களை செயற்திறன் மிக்க வகையில் வழங்குகின்ற அதேவேளை நிறுவன உள்ளக தரவுகள், தகவல்கள் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு அறிக்கைகளை சுருக்கவடிவில் தயாரிக்கின்றது. மேலும் நிறுவனத்திற்குத் தேவையான வளங்களை இது கையாளுகின்றது.

5. தீர்மான துணை / உதவி முறைமை

இம் முறைமை நிறுவன உயர்மட்ட முகாமையினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானம் எடுத்தலினை நேரடியாக மேற்கொள்வதில்லை. பதிலாக அதற்கு வேண்டிய தகவல்களை வழங்கி உதவிபுரிகின்றது.

6. நிறைவேற்று துணை / உதவி முறைமை or நிறைவேற்று தகவல் முறைமை

இம் முறைமை நிறுவன உயர்மட்ட முகாமையினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானம் எடுத்தலினை நேரடியாக கையாளுகின்றது.

7. வல்லுனர் முறைமை

இம் முறைமை செயற்கை நுண்ணறிவு முறையில் (Artifical Intelligent) அமைக்கப்பட்ட ஒரு தகவல் முறைமை ஆகும். இது தார்க்க ரீதியில் சிந்தித்து பிரச்சினைக்குரிய தீர்வுகளை முன்வைப்பதுடன் வல்லுனர் தேவைகளையும் குறைக்கின்றது. எனவே இது அறிவுசார் முறைமை எனவும் அழைக்கப்படுகின்றது.

மேலதிக தகவல் முறைமைகள்

1) முயற்சி வளத்திட்டமிடல் முறைமை – Enterprise Resource Planning (ERP)

இம் முறைமையானது ஒரு நிறுவனத்திற்குத் தேவையான ஒருங்கிணைந்த தீர்வுகளான திட்டமிடல், முகாமை மற்றும் கட்டுப்பாடுகள் போன்றவற்றினை வளங்குகின்ற தகவல் முறைமை ஆகும்.

இது நிறுவனத்தின் சந்தைப்படுத்தல், நிதி உற்பத்தி, மனிதவள முகாமை, சரக்கிருப்பு கட்டுப்பாடு மற்றும் விநியோகம் போன்ற பல் வேறுபட்ட செயற்பாடுகளுக்கான தரவுகளை வழங்குகின்றது.

உ-ம் :- Oracle

2. **வாடிக்கையாளர் உதவு நிலை முறைமை**

Customer Relationship Management (CRM)

இம் முறைமை வியாபார நிறுவனத்திற் கும் அதன் வாடிக்கையாளருக்கும் மற்றும் வியாபார பங்குதாரருக்கும் இடையே சிறந்த சேவைகளை வழங்கும் முகமாக வடிவமைக் கப்பட்ட தகவல் முறைமையாகும். உதாரணமாக இது விற்பனை, சந்தைப் படுத்தல் என்பவற்றை வாடிக்கையாளருக்கு செயல் திறன் மிக்க முறையி வழங்குவதங்கு உதவுகின்றது.

3. **அறிவு முகாமைத்துவ முறைமை**

Knowlege Management system

இவ் வகையான தகவல் முறைமைகள் **தரவு → தகவல் → அறிவு** போன்றவற்றி னைக் கைப்பற்றி, சேகரித்து மற்றும் தேவைப் படுகின்ற சந்தர்ப்பங்களில் அவற்றினைப் பயன் படுத்தல் or பிரயோகித்தல், பரப்புதல் என்பவற்றிற்காக வடிவமைக்கப்பட்டவை யாகும், இதன் மூலம் வியாபார நிறுவனங் களிற்கு அவசியமான தரவு, தகவல், அறிவு போன்றவற்றினை திறம்பட நிர்வகிக்க முடிகின்றது.

4. **உட்பொதிந்த முறைமை** – Embedded system

உட்பொதிந்த முறைமைகள் இயந்திரங் கள் or சாதனங்கள் போன்றவற்றின் செயற் பாடுகளை கட்டுப்படுத்துவதற்கென வடிவ மைக்கப்பட்டவையாகும். இது வன் பொருள், மென்பொருன் நிலைப்பொருள் போன்ற வற்றின் அடிப்படையில் வடிவமைக்கப் படுகின்றது.

5. **புவியியல் தகவல் முறைமை** – Geographic Information system

புவியியல் ரீதியான தரவுகளை சேகரி த்து, சேமித்து, பகுப்பாய்வு செய்து அவற் றினை நிர் வகிப்பதற்கென வடிவமைக்கப் பட்ட தகவல் முறைமை புவியியல் தகவல் முறைமை ஆகும்.

உ–ம் :- **சுனாமி எச்சரிக்கை அறிவிப்பு**

6. **உள்ளடக்க முகாமைத்துவ முறைமை** – Content Management system - (CMS)

உள்ளடக்கங்களை (Web pages, video, Audio efc) சேகரித்தல், சேமித்தல், மாற்றங் களிற்கு உட்படுத்தல் மற்றும் வெளியிடல் போன்றவற்றினை நிர்வகிப்பதற்கென வடி வமைக்கப்பட்ட தகவல் முறைமையாகும்.

Eg:- Web content Management system

(Joomla, Word pross, Drupal)

உசாத்துணை நூல்கள்:

The Essential of computer Organization Architecture

Organization Architecture.

நவீன உலகில் இணையம்

கொ.லூ.யேமலர்
A/L com (2014)

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டு களுக்குமுன் வாழ்ந்த தொல்காப்பியர் வகுத்துள்ள ஐந்திணைக் கோட்பாட்டில் தமிழ் காணும் ஆறாம் திணையாக திகழ இணையத்திற்கு இடம் கிடைத்துள்ளது. அந்த வகையில் இணையத்தின் பங்களிப்பு இந்த புதிய உலகத் தகவல் புரட்சியில் என்ன வென்று நோக்குவோம். இணையம் என்றால் உலக அளவில் பல கணினி வலையமைப்பின் கூட்டிணைப்பினை இது குறிக்கும். அறிவிய



லில் மிளிர்ந்த நூற் றாண்டாக இருபதாம் நூற்றாண்டுகாலம் கண்ட புதுமைகளுள் ஈடிணையற்றதுமான, தனிநபர் கணினி களை இணைத்து வையம் முழுவதும் விரியும் வகையில் இலத் திரனியல் வலைப்பின்னலை உருவாக்கியது இந்த இணையமாகும். இது தோற்றம் பெற்றதன் பின்னணி என்னவென்றால், 1957இல் சோவியற் ரஷ்யாவினால் (USSR) ஸ்புட்னிக் (Sputnik) என்ற செயற்கைக் கோள் வெற்றிகரமாக ஏவப்பட்டதுக்கு போட்டியாக அமெரிக்காவின் (USA) இராணுவத்தினால் 1962-1969 காலப்பகுதிக்குள் கண்டு பிடிக்கப்பட்டதே இதுவாகும். ஆனால் இதுவே தகவல் தொழில் நுட்பத்தில் பெரும் புரட்சி யினை உண்டு பண்ணியது மட்டுமல்லாது, தனிமனித வாழ்வியலை மிகப் பெரிய மாற்றத்திற்குள் உள்வாங்கி வருகின்றது. இதன் பரிணாமங்கள் பல நூறு பக்கங்கள் சொல்லுமளவில் அதுதன் சாதனையை புரிந்துள்ளது. இருப்பினும் இதன் எதிர்கால வளர்ச்சியும், வீழ்ச்சியும் எதிர்வு கூற முடியாததாகவே உள்ளது.

இணையத்திற்கு அடிப்படை தளம் அமைத்தவர் ரிம் பேணஸ்லீ (Tim Berners Lee) ஆவார். அதாவது நாம் இன்றுகாணும் பலவையக விரிவு வலையமைப்புக்களை (web site) உருவாக்கப் பயன்படும் மொழியான HTML இனை உருவாக்கியவரே இவர். அதனால் இணையத்தின் தந்தையாகப் போற்றப்படும் இவரால் 1991இல் உத்யோகபூர்வமாக இது ஆரம்பிக்கப்பட்டது. அந்தவகையில் எதிர் பாராமல் பிறந்த இணையம் புதியதகவல் புரட்சியில் உண்டு பண்ணுகின்ற விளைவு களும் எதிர்பாராதவைகளாகவே உள்ளது.

இணையத்தின் அடிப்படை மொழி யாக அன்றிலிருந்து இன்றுவரை ஆங்கிலமே காணப்படுகின்றது. மேலும் இது பலசாதனை களை புரிந்ததன் நிமித்தம் இந்த புதிய உலகில் பலபெயர்களையும் பெற்றுள்ளது. மனித இனத்தின் முதல் பன்மொழி ஊடகம் என்று அழைக்கப்படுகின்றது. அதாவது புத்த கமோ அல்லது அலைவரிசையோ பன் மொழித் தன்மை இருப்பதாக இருப்பதில்லை ஆனாலும் இதற்கென மகத்தான வியூகங் களை அமைக்காமலே இணையம் இவற்றை

சாதிக்கின்றது. அத்துடன் இது உலக வாசிக சாலையாகவும் காணப்படுகின்றது ஏனெனில் இங்குசாதாரண நூலகங்களைப் போல் அல்லாது உரைகள், சத்தங்கள், படங்கள், வீடியோக்கள் போன்ற தேவையான அனைத் தையும் பெற்றுக்கொள்ளமுடியும். இப்பரந்த உலகம் கொண்டிருக்கும் எண்ணற்ற பல கலாசாரங்களுக்குப் பாலமாகவும் உள்ளது. மேலும் இது மனிதர்களுக்கிடையே பலபுதிய உறவுகளை உருவாக்குகின்ற ஊடகமாக செயற்படுகின்றது. குறித்த விடயங்களில் ஒற்றுமையுடையவர்களை அல்லது இனங் களை இணைப்பதற்கு இணையம் போன்ற ஒரு ஊடகம் வாய்த்ததில்லை.

இணையமானது உலகில் காணப் படும் மிகப் பெரியகணினி வலையமைப்பாக விளங்குகின்றது. உலகிலுள்ளநாடுகளில் 170ற்கு மேற்பட்ட நாடுகளில் இது வியாபித் துக் காணப்படுகின்ற ஏராளமான அரசுகள், தனியார் நிறுவனங்கள், வணிக நிறுவனங் கள், மற்றும் கல்வி நிறு வனங்களினை உள்ள டக்கியுள்ளது. மேலும் இதற்கு எந்தவொரு நாடோ, நிறுவனமோ உரிமையாளராக இருப்பதில்லை எனினும் இதன் வளர்ச்சிக் காகவும் விதிமுறைகளினை நிர்ணயிப்பதற் காகவும் சிலதன்னார்வ நிறுவனங்கள் ஈடு பட்டு வருகின்றன. இது நாட்டுக்கு நாடு, கண் டத்திற்கு கண்டம் வலையமைப்பினைக் கொண்டுள்ளமையினால் அதிவேகம் கொண்ட தகவல் தொடர்பாடலுக்கு உதவு கின்றது. மேலும் இது புத்தக வாசகர்களுக்கு சுமையினைக்குறைக்கும் வகையில் மின் புத்தகங்களையும் (E-Book), வணிகர்களுக்கு இணையவணிகம் (E-Market), மாணவர் களுக்கு இணையக்கல்வி (E-Learning) போன்றவற் றையும் வழங்குகின்றது.

இணையத்தின் மூலம் கிடைக்கும் சில பொதுவான பயன்பாடுகளாக பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம். எமக்கு தேவையான எந்தவொரு விடயத்தினைப் பற்றிய தகவல்களினையும் முழுமையாக பெற்றுக் கொள்ளல், மின்னஞ்சல் சேவைகள், நிகழ் நேரத்தில் ஒருவரோடு ஒருவர் உரையாடுதல், கோப்புகளையும், மென் பொருட்களையும் பரிமாற்றிக் கொள்ளல், இசை, திரைப் படங்கள், விளையாட்டு பொழுதுபோக்கு அம்சங்கள், இணைய வணிகத்தின் மூலம் விற்பனை செய்தல், பொருட்கள், சேவைகள் என்பனவற்றினைப் பெற்றுக் கொள்ளல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய அடிப்படையான பயன்பாடுகளே இன்றைய நவீன உலகில் புதியமாற்றங்களுக்கு உட்பட்டு தகவல் புரட்சியினை உண்டுபண்ணி வருகின்றன. ஏனெனில் இன்றையகாலத்து மனிதன் விநோதங்களைப் புரிவதிலும், தங்கள் கருத்துக்களை அனைவரோடு பகிர்ந்து கொள்வதிலும், மற்றும் புதிய உறவுகளினை வளர்த்து ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதிலுமே அதிக ஈடுபாடு காட்டி வருகின்றான். ஆய்வுகளின்படி பல்லாயிரக்கணக்கான மக்கள் தொலைக் காட்சி பார்ப்பதினை விட அதிகமாக இணை யத்தினை பாவிப்பதனையே விரும்புகின்ற னர். எடுத்துக்காட்டான ஆய்வுகளின் படி அமெரிக்காவில் இருக்கும் கணினிப் பயனர்களில் மூன்றில் ஒருபங்கினர் தமது இணையத்திற்காக தொலைக்காட்சியைக் கூட கைவிடக் கூடியவர்களாக உள்ளனர். இந்தவகையில் இணையமானது மனிதனின் வாழ்வியலினை மாற்றியுள்ளது மட்டு மல்லாது இணையத்திற்கு அடிமையாகவும் அவனை மாற்றி வைத்துள்ளது. கவிஞர் விவேகானந்தர் கூறுவதுபோல "நம் வீட்டு அருகில் இருக்கும் நபர்பேரே தெரியாது,

ஆனால் பேஸ்புக் உலகம் பூரா பிரெண்ட்ஸ் தேடுறோம்" எனும் பாடல் வரியினை குறிப்பிடலாம்.

இணையமானது தோற்றம் பெற்று உலகத் தகவல் புரட்சியில் உண்டுபண்ணிய மாற்றம் சிலவற்றினைப் பார்த்தால் சமூக வலைத்தளமான பேஸ்புக் ஒரு பில்லியனுக்கு மேல் பயனர்களையும், டுவிட்டர் இரு நூறு மில்லியன் பயனர்களையும் கொண்டுள்ளதோடு, இணையத்தில் காணப்படும் வலைப்பக்கங்கள் அறுநூற்று முப்பத்து நான்கு மில்லியனாகவும் உள்ளது.

இதில் ஆண்டுக்கு ஐம்பத்தொரு மில்லியன் என்றஅடிப்படையில் அதிகரித்து வருகின்றது என றோயல் பிங்டம் (Royal Pingdom) எனும் இணைய கண்காணிப்பு நிறுவனம் கூறியுள்ளது. இப்புள்ளி விபரத்தினைப் பார்க்கும் போது கடலளவு பிரமாண்டமான இணையத் தகவல் களஞ்சியத்தில் சாதாரண ஒரு பயனர் கையாள்வது வெறும் கையளவு நீரே என ஒப்பிட முடியும்.

தகவல் புரட்சியின் காரணமாக உலகமே சுருங்கிவிட்ட நிலையில் இணையத்தின் மூலம் தீமைகளும் உள்ளன. அந்த வகையில் குறிப்பிடத்தக்க விடயமாக காணப்படுவது இணையத்தின் மூலம் நடைபெறும் சைபர்குற்றங்கள். தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனை மகிழ்வுடன் அனுபவிக்கும் அதேதருணத்தில் இதுபோன்ற இணையத்தள சதிகாரர்களையும் எதிர்கொள்ள வேண்டியது இந்தக்காலத்தின் கட்டாயம். இணையத்தில் காணப்படும் சமூக வலைத் தளங்களாக உள்ள விக்கிலீக்ஸ், பேஸ்புக், டுவிட்டர் போன்ற தளங்களில் பகிர்ந்து கொள்ளப்படும் தகவல்கள், படங்கள் எந்தளவிற்கு நம்பகத்தன்மை வாய்ந்ததாக உள் என என்பது எம் அனைவரும் அறிந்து கொள்ள முடியாத ஒன்றே. அதன் பின்னணி, அவை எந்தளவிற்கு சமூகத்தில் விளைவுகளினை ஏற்படுத்தும் என்பதனை யோசிக்காமல் நண்பர்களுடன் அதனை பகிரும் சைபர் குற்றவாளிகளுக்கும், சமூக விரோதிகளுக்கும் இணையம் துணை போகின்றது. அந்த வகையில் இணையத்தினைப் பாவிப்பவர்களில் 65வீதமும், இந்தியாவில் மாத்திரம் 76வீதமும் சைபர் குற்றங்களால் பாதிக்கப்படுகின்றனர் எனநார்டன் சைபர் கிறைம் ரிப்போட் தி ஹ்யூமன் இம்பாக்ட் (Norton Cyber Crime Report The Human Impact) என்ற ஆய்வு தெரிவிக்கின்றது. எனவே இணையப் பாவனையாளர்களாக உள்ள நாம் இதற்கான பாதுகாப்பினை மேற் கொள்ளுதல் அவசியமாகும். எப்பொழுது இவ்வாறான குற்றங்களில் இருந்து இணையம் விடுவிக்கப்படுகின்றதோ அப்போதுதான் மக்கள் நலன் சார்ந்த புதிய உலகத் தகவல் புரட்சியினை உண்டு பண்ணும். இந்நிலையில் இணையத்தின் மூலம் தீமைகளும் ஏற்படுவதால் அரசாங்கமும், தன்னார்வ நிறுவனங்களும் விழிப்புடன் செயற்பட்டு தீவிர நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.



பல்கலைக்கழக அனுமதி - 2011

முகாமைத்துவம்

1. பிரதீபா வின்சென்ற்
2. சிந்துஜா நவரட்ணம்
3. ஜென்சி சூசைதாசன்
4. ஏஜினஸ் சகானா ராஜரட்ணம்

பல்கலைக்கழக அனுமதி – 2012

1. சற்குணநாதன் லசிகலா

இலங்கை மத்தியவங்கியினால் நடத்தப்பட்ட வினாடிவினா போட்டியில் அரைஇறுதிச் சுற்றில் வெற்றியீட்டிய மாணவிகள் விபரம்

சுபாசினி யோகரட்ணம்
குபேதினி செல்வராசா
மேரி யுடெக்சி அன்ரனி

பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படை புள்ளி பெற்றோர் விபரம் - 2012

1. அந்தோனிப்பிள்ளை யூலியா துஷ்யந்தி
2. எட்வேட் இராஜேந்திரம் ஆன் சௌமினி
3. இம்மானுவேல் ஜெயரட்ணம் லோறா ஜெரோஜினி
4. ஞானசீலன் சிந்துஷா
5. யூட்ஸ் அருந்தவநேசன் வேஜின் தனுசியா
6. மரிய கொன்ஸ்ரரைன் அருளினி
7. மரியநாயகம் சியாமினி
8. மரியராஜா அலன்கிறோசி
9. மரியதாஸ் டிலானி
10. நாகேந்திரன் விதுஷா
11. பீற்றர் ஹெனமன் பிரிந்தினி
12. புவனேந்திரசிங்கம் கனிஸ்டெலா
13. சந்திரகாந்தன் ஜெஹானி
14. சிவலிங்கம் தாரிணி
15. தம்பிராஜா அமில்ரா அமுதினி
16. தெய்வேந்திரதாஸ் பிரிதாபானு
17. பிரான்சிஸ் வம்சலின் ஆன் கௌசியா
18. ஆனந்தராசா ஜானுகா
19. அன்ரனி குயின் மேரி தர்சியா
20. ஹரிதரன் லதாங்கி
21. ஜெறோம் கொன்சலிற்றா
22. கனிக்கைநாதன் மெரி சுஜீபா
23. சகாயஅருள்ராஜ் றெபேக்கா
24. செபஸ்ரியாம்பிள்ளை மேரி சரணியா

பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படை புள்ளி பெற்றோர் விபரம் - 2013

1. அல்றோய் லூசியன் மார்டினுஸ் மேரி அன்ரனிற்றா
2. அமிர்தலிங்கம் தயோசாயினி
3. அன்ரனி ஆமீஸ்றொங் மேரி நிலுக்ஸி
4. அன்ரனி விக்றர் நீறிஜா
5. பாலசந்திரன் கம்சலா
6. பாலசுப்ரமணியம் மாதுளா
7. கிளமன்ற் மேரி கொலஸ்ரீனா
8. கணேஷலிங்கம் துஷயந்தி
9. குணரத்ணம் திருமகள்
10. யேசுதாஸ் மிதுஷா
11. கிறிஸ்துராஜா அனுராஜி
12. மகேந்திரம் கபிஷாயினி
13. முருகையா துவாரகா
14. நியூட்டன் மார்க் றஞ்சன் அன்பழகி
15. ராஜரட்ணம் மிதுனா
16. தோமஸ் நிதர்சனா
17. வைவிரட் ஜோர்ஜ் ஜொபின்சியா
18. வின்செலஸ் மேரி லக்ஷாயினி
19. தேவராஜ் மேரி மெடோனா

நன்றி நவில்கையில் ...

- "நன்றி மறப்பது நன்றன்று" என்ற கூற்றிற்கு அமைய எமது வணிகத்தளிரை வெளியிட ஆசி நல்கிய எல்லாம் வல்ல இறைவனுக்கு எமது நன்றிகள்.

- எமது வணிகத்தளிரை வெளியிட அனுமதி வழங்கியதுடன் தளிர் சிறப்பாக ஒளிர ஆசிச் செய்தியை வழங்கிய எமது பாடசாலை அதிபருக்கும் உப அதிபரக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

- எமது வணிக மாணவர் ஒன்றியத்திற்கு தலைமை தாங்கி எம்மை வழிநடத்தி தளிர் சிறப்பாக மலர எமக்க உறுதுணையாக இருந்த எமது மன்றப் பொறுப்பாசிரியர் திருமதி.திருஞானசம்பந்தன் அவர்களுக்கும் ஏனைய வணிகபாட ஆசிரியர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

- எமக்கு நேர்காணல் வழங்கிய யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி திரு.தி.வேல்நம்பி அவர்களுக்கு வணிக மன்றம் சார்பாக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- முதற்பிரதி பெற்றவருக்கும் சிறப்பு பிரதியினைப் பெற்றவர்களுக்கும் எமது நன்றிகள்.

- எமது தளிருக்கு ஆக்கங்களை தந்து உதவிய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எமது நன்றிகள்

- எமது தளிரை சிறப்பாக வடிவமைத்து வினைத்திறனான முறையில் அதை வெளியிட உதவிய மதி கலர்ஸ் அச்சகத்திற்கும் நன்றிகள்.

- வணிகத்தளிருக்கு விளம்பரம் வழங்கிய விளம்பரதாரர்களுக்கு எமது நன்றிகள்

வணிகமன்றம்

[illegible]

[illegible]

CL DENTAL & OPTICAL SERVICES

பல் – மூக்குக் கண்ணாடி அகம்



K.C.Jude (Proprietor)

Tel: 0776176737



No.58, Clock Tower Road, Jaffna.

Tel: 021 222 8893

Regd.No: J/DS/PR/1016/2007

City Medicals Care (Pvt) Ltd

Specialist in Pharmaceuticals

Colombo Office:
No.30A 1/1 Visaka Road,
Colombo-4, Sri Lanka.
Tel: 011 2553947, 011 2553682
Fax: 011 2553947
Email: citymed@sltnet.lk

Jaffna Office:
No.558A, Hospital Road,Jaffna.
Tel: 021 2222198
Fax: 021 2223880
Email: cityjaf@sltnet.lk



A.Baur@ co.)Pvt) Ltd
Astm Limited
Curhani
Ceyoka (Pvt) Ltd (Nawakarama)
CIC Holding & CIC Lifesciences Ltd
Emerchemie NB (Ceylon) Limited
Giaxo Wellcome Ceylon Ltd

Distributors For:
J.L.Morison Son 7 Jones (Ceylon) PLC
Mansel Ceylon (Pvt) Ltd
Mega Pharma (Pvt) Ltd
Novex pharmaceuticals Ltd
Orthopaedic Items
Pharma Associates
Sanofi- Aventis Lanka Ltd
State Pharmaceuticals
Manufacturing Corporation
State Pharmaceuticals
Corporation of Sri Lanka
Swiss biogenics Limited.

Proprietor: C.Luxan
Ashwin Video & Phone Shop
அஸ்வின் வீடியோ அன் போன் சொப்
No.37, David Road,
Jaffna.
Email: ashwin4ns@gmail.com
T.P: 0776648391

DCM
A/L கலை, வர்த்தக தொழில்நுட்ப பிரிவுகள்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமையில்
யாழ்நகர்.

R.S. Hardwarres

ஹாட்வெயார்ஸ்

சகல விதமான பெயின்ற், சுண்ணாம்பு கலர் பூச்சு டை,
பிரஸ் மற்றும் கட்டட பொருட்கள் பெற்றுக் கொள்ளும் இடம்



இல.357, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 4917195

கிளின்ரன்

அந்தியகால சேவை

Clinton Funeral Services

No.548, Hospital Road, Jaffna.
T.P: 021 222 3518

Brilliant Photo Studio & Video

Excellence professional Photography.

Video Movi Making. Digital Image

Reproduction of Old Photos,

And b/W to Colour.



360/7, Main Street,Jaffna.
T.P: 0776161058,
021 2224681

Brain Power Institute

NEW JENIFER VEDIO & AUDIO

Jaffna - Colombo Van Service

CD Writing, Photocopy

Leminating, Casset Recording

Mobile Repairing, Mobile Parts Sales

Photo Designing, Local IDD Call

136, Bankshall Street, Jaffna.

Sky Computers (Pvt) Ltd

TP:021-222-1417

அனைத்துப் பாடத்திற்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்.

* Ms office, DTP, Video Mixing, Web Design, Mobile Repairing, Hardware,Computer Type Setting, Graphic Design,Internet & E-mail, Kids Programme.

சிங்கள வகுப்பு (By:A.K.Moorthy)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 1 - திங், வெள் - 4:30 pm
பிரிவு 2 - செவ், வியா - 4.30 pm

காலம் 6-மாதங்கள் 3000/=

ஆங்கில வகுப்பு (யாழ் பிரபல ஆசிரியர்)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

திங்கள்,வெள்ளி - 3:30pm

காலம் 6-மாதங்கள் 3000/=

இல.89,கண்டி றோட், யாழ்ப்பாணம்.
(கச்சேரிக்கு அருகாமையில்)

ERIC GANESH

Opticians

Prop:
V.Ganeshalingam

564, 566, Hospital Road,
Jaffna.

T.P/ Fax: 021 222 2486
Mobile: 0777-156604

M.S.M Yasrin (Sales Manager)
0774007271, 0770079901
yasrinmsm@gmail.com

J.M.Kiyas (Director)
0778946417

APG Phone Gallery & Optical

No.32, Jammah Mosque lane,
Jaffna.

No.94/16, Ground floor,
Prince Street, Colombo-11.

T.P/ Fax: 011-232-6222 Emial: msafran96@yahoo.com


Mr.G.Janarthanan (Proprietor)
Royal
Optical
மூக்குக் கண்ணாடியகம்
இல.448, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 320 9446, 077 915 3456
யாழ்.போதனா வைத்தியசாலை பழைய OPD முன்பாக

ඉහල ආයෝජනයක් අපගේ සාමාජික ඔබ වෙනුවෙන්...
ඉතිරි කිරීමේ ගිණුම්
අතිවිශිෂ්ට විශ්වාසය සමගින්
සාමාන්‍ය ඉතුරුම් ගිණුම්
ළමා ඉතිරි කිරීමේ ගිණුම්
9%
ඉහල වාර්ෂික පොළියක්
SINGER FINANCE
TRUSTED EXCELLENCE
ඉතිරිකිරීමේ ගිණුම් පාස්පොත
SAVINGS ACCOUNT PASSBOOK
සිංගර් සමූහයේ සාමාජික ඔබ වෙනුවෙන්ම පමණයි
SINGER
මුතු
ළමා ඉතිරි කිරීමේ ගිණුම
රු.500ක මූලික තැන්පතුවකින් ආරම්භ කල හැක
ඔබට අවශ්‍ය පරිදි මුදල් තැන්පත් කිරීම හා මුදල් ලබාගැනීම සිදුකල හැක.
SINGER FINANCE
Rated BBB + by Fitch Ratings
011 2 316612-5
0112 316 612-5, 0112 303 717, 0115 400 400
0112 316 636
singerdeposit@singersl.com, www.singersl.com
සිංගර් (ශ්‍රී ලංකා) සමාගමෙහි අනුබද්ධිත ආයතනයක් වශයෙන් 2004 අප්‍රේල් 19 වන දින නීතිගත කරන ලද, 2011 අංක 42 දරණ මුදල් ව්‍යාපාර පනත යටතේ
ශ්‍රී ලංකා මහ බැංකුවේ මුදල් මණ්ඩලය වෙතින් බලපත්‍රලාභී මුදල් සමාගමකි.



MATHI COLOURS